224749

குடும்ப பொக்கிஷம்

Q6
N22
224749

1922

# குடும்ப பொக்கிஷம்.

23 APR 1922

மகா வந்திக்கத்தக்க
மரி பார்த் ஆண்டவரவர்கள்
மிஷன் கிறீஸ்துவர்களுக்குச்
சொல்லும் புத்திமதி.


இரண்டாம் பதிப்பு.

by Rev. Br. Joseph, S.J., Superintendent,
St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY.

1922.

220
461

Nihil obstat : T. ROCHE, S. J., cens. dep.




Imprimatur :

\+ AUGUSTINUS, S.J.

*Ep. Trichin*

224749

# முகவுரை.

## மதுரை மிஷன் கிறீஸ்துவர்களுக்கு:

நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரின் கிருபையால், சுமார் 25 வருஷகாலமளவாய் உங்களுடைய மேற்றிராணியாராயிருந்து உங்கள் நன்மைக்காகவும், உங்கள் ஆத்தும இரட்சண்யத்துக்காகவும் உழைத்து ஆறுதலடைந்து, பற்பல பங்குகளைச்சுற்றி விசாரணை செய்யும் நாட்களில், உங்களுக்குள்ள பத்தி வணக்கத்தின் உத்தமமான வெளியடையாளங்களைக் கண்ணால் பார்த்து, உங்களுக்குள் பெரும்பாகமானவர்களுக்கிருக்கிற நல்ல மனதைக் கண்டு சந்தோஷப்பட்டு சேசுவின் திரு இருதயத்துக்கு ஸ்தோத்திரங் கூறினோம்.

ஆனால், உங்களுக்குள் அனேகர் பங்கு சுவாமி வசிக்கிற இடத்துக்கு தூரமான கிராமங்களில் இருக்கிறபடியினால், அவருடைய ஞானோபதேசம், பிரசங்க முதலியவைகளைக் கேட்கவும், தேவதிரவிய அநுமானங்களை அடிக்கடி பெறவும் சாத்தியப்படுகிறதில்லை. இதின் முகாந்தரத்தினால், அவர்கள் வேதகாரியங்களில் அறிவீனர்களாய், தங்கள் கிறீஸ்துவக் கடமைகளை அசட்டை பண்ணுகிறார்கள். சர்வேசுரனுடைய கற்பனைகளையும் திருச்

சபையின் கட்டளைகளையும் அனுசரிக்கிறதில்லை. புண்ணிய பயிற்சியின்மேலும் நித்திய ஜீவியத்தின்மேலும் அவர்களுக்கு கவனமேயில்லை.

உங்கள் ஆத்துமங்களின்பேரில் எப்போதும் கண்ணும் கருத்துமான பிரியத்தால் தூண்டப்பட்டு உங்கள்மேல் நமக்குள்ள நேசப்பற்றுதலை ஒப்புவிக்க, இதோ ஓர் கடைசி அடையாளங் கொடுக்க விரும்புகிறோம். அது என்னவெனில், பற்பல புத்திமதிகளடங்கிய ஓர் சிறிய புஸ்தகம். இந்த புத்திமதிகள், உங்கள் ஆத்தும ஸ்திதியை அநுபவத்தினால் ஆராய்ந்த அறிவின் பலன்களென்றே சொல்லலாம். பிதா நேசபாசத்தால் சொல்லும் இந்த புத்திமதிகளை நீங்கள் கேட்டனுசரித்தால், சேசுவின் திரு இருதயத்தையும், அர்ச். தேவமாதாவையும் அதிகமதிகமாய்ச் சிநேகித்து, சர்வேசுரனைச் சார்ந்த கடமைகளைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றி, ஒவ்வொருநாளும் புண்ணிய சாங்கோபாங்கத்தில் விர்த்தி செய்வீர்களென்று நம்புகிறோம். இந்த புஸ்தகத்தால் உங்கள் புத்திக்குப் பிரகாசமும், உங்கள் மனசுக்குத் திடனும் விளைவிக்கும்படி சேசுவின் திரு இருதயம் கிருபை புரிவாராக.



1-ம் அதிகாரம்.

## வேத போதகப் படிப்பினையின் கடமை.

கிறீஸ்துவர்களில் அனேகம் பேர்கள் நித்திய மோட்ச பேரின்பத்தை வெகு சொற்பமாய் நினைக்கிறார்கள். தங்களுக்கு ஆத்துமம் இல்லாததுபோல, இரட்சண்யத்தைப்பற்றி கவலையில்லாமல் ஜீவிக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட தின்மைக்கு முக்கிய காரணம் வேத போதக அறிவீனம். காரணமின்றி காரியமில்லாததுபோல, வேதபடிப்பினை இல்லையோ விசுவாசமுமில்லை என்னலாம்.

அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிற பிரகாரம், **விசுவாசமின்றி, சர்வேசுரனைப் பிரியப்படுத்துவது கூடாத விஷயம்** (எபிரேயர் xi—6.) அப்படியானால் ஆத்தும இரட்சண்யமடைவது முடியாத காரியம்.

**ஆத்தும இரட்சண்யத்துக்கு அவசியமான விசுவாச சத்தியங்கள்:**—ஞானஸ்நானம் வழியாய் ஒருவர் பெற்றுக்கொள்ளுகிற விசுவாசமானது மோட்சபாக்கியம் அடையப்

போதுமானதல்ல. கிறீஸ்துவன், புத்தி விவரப் பிராயம் வந்தவுடன், விசுவாச முயற்சிகள் செய்யக் கடன். விசுவசிக்கவேண்டிய சத்தியங்கள் எவையென்று அறியாதிருந்தால், விசுவாச முயற்சி செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றுவதெப்படி? ஆத்தும இரட்சிப்புக்காக, அகத்தியமாயறிந்து, திட்டமாய் விசுவசிக்க தேவையான சத்தியங்களெவை என்றால்: சர்வேசுரன் ஒருவர் உண்டு; பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து என்று ஆள்வகையில் திரித்துவமாயிருக்கிறார்; அவர் சர்வத்துக்கும் சிருஷ்டிகர். அவர் நல்லோர்களுக்கு சம்பாவனையும், தீயோர்களுக்கு ஆக்கினையும் அளிக்கிறார். தமதிரித்துவத்தின் 2-ம் ஆள் பிதாவினுடைய ஏக சுதனாகிற சேசுக்கிறீஸ்துநாதர். இவர் அவதரித்த வார்த்தையானவர். இவர் மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனுமானவர். இவர், அழிவில்லாத நமது ஆத்துமங்களை இரட்சிக்கிறதற்காக மரணத்துக்குள்ளானார்.

ஏனெனில் ஆத்தும இரட்சண்யமடைவதற்கு இந்த சத்தியங்களை அறிவதும், விசுவசிக்கிறதும் இன்றியமையாதவையாம்.

இவைகளைத் தவிர, தேவ கற்பனையாலும் திருச்சபைக் கட்டளையாலும் கிறீஸ்துவர்கள் அறிந்து விசுவசிக்கவேண்டிய வேறே சத்தியங்களும் உண்டு. அதாவது, தேவ கட்



டளையானது, வேறனேக சத்தியங்களையும் வெளிப்படுத்தி, அவைகளையும் அறிந்து விசுவசிக்க வேண்டுமென்று முன்சொன்ன சத்தியங்களோடு கூட்டியிருக்கிறது. அவைகளாவன :—விசுவாசமந்திரம், பரமண்டல மந்திரம், ஏழு தேவதிரவிய அநுமானம், அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும் முந்திரிகைப்பழ இரசத்தின் குணங்களுக்குள்ளேயும், சேசுநாதர்சுவாமி மெய்யாகவே எழுந்தருளிவருகிற தேவதிரவிய அநுமானமாகிற தேவநற்கருணை; ஞானஸ்நானத்தின் அவசரம்; சாவானபாவத்தைக் கட்டிக்கொண்டவர்களுக்கு பச்சாத்தாபமென்கிற தேவதிரவிய அநுமானத்தின் அவசரம், சர்வேசுரன் கற்பனைகள், திருச்சபையின் கட்டளைகள்.

இந்தப் பிரதான வேத சத்தியங்களை விசுவசித்து, ஒவ்வொருவருக்கும் புத்தி விவரமறியும் பிராயம் வந்தவுடன் கிரிகையால் அநுசரித்து காண்பிக்க கடமையுண்டு. அப்படியிருந்தாலும், எத்[illegible]யோவிசை, பங்கு சுவாமிமார்கள் கண்டிருக்கிறபடி, சில கிராமங்களில், 15, 20, 30 வயதுக்கு மேற்பட்டவர்கள்முதலாய், ஒரே சர்வேசுரன் மூன்றாட்களாயிருக்கிறார். சததமான ஜீவியம், ஆத்தும இரட்சண்யம், இவை முதலிய சத்தியங்களை அறியாமலிருக்கிறார்கள். சர்வேசுரன் கற்பனை, திருச்சபைக் கட்டளை, தேவதிரவிய

அநுமானம், விசுவாச மந்திரம், பரமண்டல மந்திரம், பிரியதத்த மந்திரம், சில சமயம் அர்ச். சிலுவை மந்திரமுமே சில கிறீஸ்துவர்களுக்கு தெரியாது.

இப்பேர்ப்பட்ட கிறீஸ்துவர்களிடம், பதிதர்களாவது அஞ்ஞானிகளாவது நமது பரிசுத்த வேதத்தின் மிகவும் தெளிவான பிரமாணங்களைப்பற்றி தர்க்கம் பண்ணுகையில், அவர்களுக்கு மறுமொழி சொல்லத் தெரியாததால், அவர்கள் அறிவீனம் தங்கள் விசுவாசத்துக்கும் இரட்சிப்புக்கும் கேடு உண்டாக்குகிறதும் தவிர, நமது திருச்சபைக்கு இகழ்ச்சியையும் வருவிக்கிறது. கொஞ்சம் படித்துத் தேர்ந்த கிறீஸ்துர்வகளை அருமையாய்க் காண்போமானால், அவர்களுக்குள்ளே, பிரதான சத்தியங்களை சரியாயறியாதவர்கள் அநேகருண்டு. இவர்கள் சகலவித பாவங்களைக் கட்டிக்கொண்டு, நித்திய ஆக்கினைக்குள்ளாகிறதற்கு வேத அறிவீனமே காரணம். வேத கடமைகளை அறியாமலும் அநுசரிக்காமலுமிருக்கிறதால், இவர்கள் பேருக்கு மாத்திரம் கிறீஸ்துவர்கள். சர்வேசுரன், மோட்சம், நரகம், இவைகள் இல்லை என்பதுபோல, பரலோக நன்மைகளை மதிக்காமல், இவ்வுலக ஆஸ்திபாஸ்தி, இன்ப சுகங்கள்மேல் எண்ணமும் விருப்பமுமுற்று தங்கள் ஜீவிய நாட்களைச் செலவழிக்கிறார்கள். சேசுவின் திரு இருதயத்தை நோக்கி அவர்க



ளிருதயத்தை உயர்த்த ஒரு ஜெபமாவது பண்ணுவதில்லை. மற்ற நல்ல கிறீஸ்துவர்கள்போல இவர்களும் சிலவேளை பாவசங்கீர்த்தனம் பண்ண வருவார்களானால், கோபமாய்ப் பேசுதல் முதலிய அற்பப் பாவங்களை வெளிப்படுத்துவது போதுமென்று எண்ணி, அவர்களாத்துமத்தை மாசுபடுத்தியிருக்கிற எண்ணிக்கையில்லாத சாவான பாவங்களைப் பற்றி ஒருவார்த்தையும் சொல்லமாட்டார்கள். இந்த தேவ துரோகமான பாவசங்கீர்த்தனத்துக்குப் பிறகு, திவ்வியநற்கருணை உட்கொள்ளவும் துணிகிறபடியால், வேறு கனமான துரோகத்தையும் சேர்த்து, தங்கள் உள்ளத்தில் பெரும் பாவங்களைக் குவித்துவைக்கிறார்கள்.

இப்பேர்ப்பட்ட கிறீஸ்துவர்கள் பசாசுக்கும், பசாசின் பாரிசத்தாருக்கும் பிரலாபத்துக்குரிய இரையாய்ப்போகிறதைப் பார்ப்பது அதிசயமோ! அதெப்படியென்றால், சில சாமர்த்திய குழப்ப தலைவர்களின் துர் ஆலோசனையைக் குருட்டாட்டமாய்ப் பின்பற்றி, மேற்றிராணியாராண்டவர், குருப்பிரசாதிகளுக்கு விரோதமான கலகத்தில் அவர்களோடு உடன்பட்டு, இதினால் அஞ்ஞானிகளுக்கும், நல்ல கிறீஸ்துவர்களுக்கும் துர்மாதிரிகை கொடுத்து, கடைசியாய் தங்கள் ஆத்துமங்களை நித்திய கேட்டுக்குள்ளாக்குகிறார்கள்.

ஜூலியான் என்கிற சக்கரவர்த்தி, சத்திய வேதத்தை மறுதலித்து துரோகியானபிறகு, சேசுநாதர் ஸ்தாபித்த திருச்சபையை நாசமாக்க, கொடிய நிர்ப்பந்தங்களும், இரத்தப் பிரளயமான கொலைகளையும் கட்டளையிட்டாலும், தன் கருத்து சித்திக்கவில்லையென்று பார்த்து, திருச்சபைக்கு விரோதமாய் அதிக துரோகமும், மோசமும், கொடும் உபத்திரியமுமான வேறோர் கட்டளை பிறப்பித்தான். அதாவது, உரோமை இராச்சிய முழுவதும் ஞானோபதேசமும் கிறீஸ்துவேத படிப்பினையும் தடுத்து விலக்கி, மீறி பயின்றவர்களுக்கு மரண தண்டனையை ஆக்கியாபித்தான். இந்த விஷயத்தைப்பற்றி அவன் சொன்னதாவது: திருச்சபையை அழித்து சங்கரிக்க நிச்சயமான உபாயமென்னவெனில், கிறீஸ்துவர்களை வேத அறிவீனத்தில் நிலைத்திருக்கும்படி செய்வதுதான். இந்த அறிவீனத்தால் கிறீஸ்துவர்கள், சுபாவமாகவே, தங்கள் வேதத்தை மறக்கும்படியாகும். இப்பூமியின் சொத்து சுகங்களின்மேல் பற்றுதல் வைக்கும்படியாகும்; சகலவித தப்பிதங்களுக்கும், அகம்பாதகங்களுக்கும், அஞ்ஞானக் குருட்டாட்டத்துக்கும் தங்களைக் கையளித்து வேதத்தை மறுதலிக்கும்படியாகும்.

திருச்சபைக்கு விரோதியானவன் சொன்ன இந்த வார்த்தைகளில் உண்மையுண்டு, பிசகேயில்லையென்று இந்தக் காலத்திலே அனுபவத்தினால் காணப்படுகிறது. இது துக்ககரமான விஷயமல்லவா! ஆகையால் இனிமேலாக உங்கள் இரட்சண்யத்துக்கு அவசரமான வேத சத்தியங்களைக் கற்றறிந்து அனுசரித்தல் உங்கள் கடமைகளுக்குள்ளே மிகவும் வணக்கத்துக்குரிய கடமையென்று கனமாய் மதியுங்கள். உங்களில் பெரும் பாகமானவர்களுக்கு முக்கியமாய் ஓர் பங்கில் தூரமான கிராமங்களிலுள்ள கிறீஸ்துவர்களுக்கு, வேதகாரியங்களைப் படிக்க சமயமில்லையென்பது மெய்தான். சர்வேசுரன் உங்கள் சௌகரிய குறைவைக் கண்பார்த்துக்கொள்வார். நீங்கள் செய்யக்கூடியதற்கு மேலாக கேட்கிறதில்லை. ஆனால் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் வேத கடமைகளைப்பற்றி படிப்பிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை உங்கள் குற்றத்தினால் அசட்டை பண்ணுவீர்களானால், பயங்கரத்துக்குரிய கணக்கு கொடுக்க வேண்டியதாயிருக்கும்.



குடும்பத்தின் தாய் தந்தைமார்களே, உங்கள் பிள்ளைகளை ஞானோபதேசத்துக்கும் கத்தோலிக் பள்ளிக்கூடத்திற்கும் அனுப்ப கெட்டியான பிரதிக்கினை செய்யுங்கள். உங்கள் பிள்ளைகளின் இரட்சண்யத்துக்காக இந்த பரிசுத்த கடமையை நிறைவேற்றுவதில் என்ன பரித்தியாகம் செய்யவேணுமென்றாலும் பின்வாங்காதேயுங்கள். திருச்சபையின் பேரால் குருவானவர் செய்யும் ஞாயிற்றுக்

கிழமைப் பிரசங்கங்களுக்கு நீங்களே, கூடுமானபோது, உங்கள் பிள்ளைகளோடு கூடப் போய், பிரசங்கங்களைக்கேட்டு பலனடைய மெய்யான ஆசை காண்பித்து, அந்த சத்தியங்களை அனுசரிக்கவும், ஒருபோதும் தவராமலிருப்பீர்களாக.

2-ம் அதிகாரம்.

## தன் தன் ஆத்தும இரட்சிப்புக்காக உழைப்பதின் அவசரம்.

தன் ஆத்தும இரட்சிப்புக்காக உழைப்பது எவ்வளவு முக்கியமும் அத்தியாவசியமுமென்று கண்டுபிடிக்கிறதற்கு ஆதாரமான மெய்யான விசுவாசத்தின் கருத்தைத் தேவானுக்கிரகத்தைக்கொண்டு, கைப்பற்ற உதவுகிறது வேதப்பயிற்சிதான். இந்த வேதப் பயிற்சியினாலே, சர்வேசுரன் உங்களை உண்டாக்கி, உங்களுக்கு ஞானஸ்நான வரப்பிரசாதம் அளித்ததில் அவர் குறித்திருக்கிற **கதி** என்னவென்று கற்றறிந்துகொள்வீர்கள்.

ஓர் நாள், ஒரு தகப்பன் 10 வயதுள்ள தன் மகனுடன் நம்மைக் கண்டு ஸ்தோத்திரஞ் சொன்னபோது, நாம் நின்று அவர்களோடு சிறிதுநேரம் பேசினபிறகு, அவர்களைப்பார்த்து, "சர்வேசுரன் உங்களை என்னத்துக்காக சிருஷ்டித்து கிறீஸ்துவர்களாக்கியிருக்கிறார்—தெரியுமா?" என்று கேட்டோம். தகப்பனுக்கு மறுமொழி சொல்ல தெரியவில்லை.

பையனோவெனில், கத்தோலிக் பள்ளிக்கூடத்தில் படித்து முன்னமே ஞானோபதேசமறிந்தவனானதால், “ சர்வேசுரனை அறிந்து சிநேகித்து சேவிக்கவும், இதினால் மோட்சத்தை அடையவும் உண்டாக்கினார் ” என்று பதில் சொன்னான்.

இதோ, 10 வயதுப்பிள்ளை கொடுத்த ஓர் புத்திமதி உங்களுக்கு எப்போதும் பலன் வருவிக்கவேண்டியது. ஆம். நீங்கள் இவ்வுலகில் பிறந்து கிறீஸ்துவர்களாயிருக்கிறீர்களே—என்னத்துக்காக? சர்வேசுரனுக்கு ஊழியம்பண்ணி, உங்கள் ஆத்துமத்தை இரட்சிக்கிறதற்காக. திரண்ட ஆஸ்தியைச் சேர்க்கிறதற்காகவல்ல. சரீர இச்சைகளைத் திருப்திகரப்படுத்தி, மகிமை பெருமை அடைகிறதற்காகவல்ல.

**“மனிதன் உலக முழுவதையும் தனக்கு ஆதாயமாக்கிக்கொண்டாலும், தன் ஆத்துமத்தை நஷ்டப்படுத்தினால் என்ன பிரயோசனம்?”** என்று நமது ஆண்டவர் வசனித்திருக்கிறார். உங்கள் ஆத்துமம் இரட்சிக்கப்பட்டால் சர்வமும் இரட்சிக்கப்படும். ஆத்துமம் மோசம்போனால், சகலமும் மோசம்; நரக நெருப்புச் சுவாலைதான் உங்களுக்கு நித்தியத்துக்கும் பலனாயிருக்கும். ஆகையால் இப்பூமியில் ஏகமாய்ய் பிரதானமும் அவசரமானதுமாயிருக்கிற விஷயம்



ஆத்தும இரட்சிப்பு. ஆனால், ஆத்தும இரட்சிப்பை, யாதொரு பிரயாசையின்றி, யாதொரு பரித்தியாகமின்றி, சுளுவாயடையலாமா? விவசாயம் செய்கிறவர்களைப் பாருங்கள். நல்ல வெள்ளாண்மை வேண்டுமானால், நிலத்தின் வித்துகளை விதைக்கிறது போதுமென்று எண்ணி, வேறு வேலை செய்யாமலிருப்பார்களோ? பரிச்சேதமில்லை. நிலத்தை உழுது பயிரிடவும், தண்ணீர்ப் பாய்ச்சவும், நல்ல கதிர்களை அமிழ்த்திவிடும் களைகளைப் பிடுங்கி எறியவும், வெள்ளாண்மையை நாசமாக்கக்கூடிய அபாயங்களிலிருந்து காத்துக்கொள்ளவும் வெகு ஜாக்கிரதையாயிருக்கிறார்களல்லவா? சரியான மாசூல், தேவையான முயற்சியின்றி கிடைக்குமென்று நம்பியிருப்பது பைத்தியம். இதைச் சுளுவாய் சகலரும் கண்டு பிடிக்கலாம். ஆத்தும இரட்சணிய அலுவலிலும் இதே மாதிரிதான். சில கிறீஸ்துவர்கள் மோட்சகரை சேரும்படி ஓர் விதமாய் ஆசையாயிருப்பார்களேயொழிய வேறொன்றும் செய்கிறதில்லை. பாவத்துக்கும் பங்கு, புண்ணியத்துக்கும் பங்கு பிரித்துக்கொள்வார்கள். சுவிசேஷ போதனைகளை அனுசரிப்பது கடினமாக காண்கிறார்கள். தங்களுக்கு சௌக்கியமில்லை, ‘முழந்தாளிலிருக்க முடியாதென்று பத்திக்கிருத்தியங்களை நிறைவேற்றமாட்டார்கள். ஆத்தும இரட்சிப்போ அவர்ளுக்கு ஆசை. அதற்கு யாதொரு

பிரயாசை, ஒறுத்தல் முயற்சியோ அவர்களுக்கு அருவருப்பு. திருச்சபையின் கட்டளைக்குப்பதிலாய் தன் மனம்போன போக்குத்தான். மோட்சகரையேற அரைமனசுள்ளவர்கள், தங்களையே நரக பாதாளத்தில் விழத்தாட்டிக்கொள்ளுகிறார்கள்.

பரலோக பாக்கியமடைய உண்மையாகவே விரும்புகிறவர்கள் செய்யவேண்டியதாவது :—திறமும் உதாரமுமுள்ள மனதுடன் பிரதிக்கினை செய்து, தேவானுக்கிரகத்தால் வேத கடமைகளையெல்லாம் நிறைவேற்றி, கெட்ட வழக்கங்களையெல்லாம் மறுத்து, ஆசாபாசங்களை தைரியமாய் எதிர்த்து, சகல அநீதங்களையும், கீழ்ப்படியாமை முதலிய கனமான குற்றங்களையும் விலக்கி, புண்ணியங்களாலும் நற்கிரிகைகளாலும் நிறைந்தவர்களாய், பரிசுத்தமான ஜீவியத்தால் மற்ற கிறீஸ்துவர்களுக்கு சுகிர்த மாதிரிகை காண்பித்து நடக்கவேண்டியது. ஒரு வார்த்தையில் சொல்ல, தங்கள் ஆத்தும இரட்சிப்பை நிச்சயப்படுத்த அகத்தியமான பரித்தியாகங்களை முயற்சியாய்ச்செய்யக் கடன்.

• அர்ச்சியசிஷ்டவர்கள், வேதசாட்சிகளின் ஜீவிய சரித்திரத்தை வாசியுங்கள். தங்கள் ஆத்துமங்களை இரட்சிக்க இவ்வுலக சம்பத்துக்களையும் இன்பசுகங்களையும் வெறுத்துவிட்டு, தங்கள் பரிசுத்ததனம் மாசுபடா



தபடி தங்கள் ஐம்புலன்களையும், மனுஷ சுபாவத்தையும் அடக்கி ஒடுக்கி, ஜெபம், தவம், அர்ச்சியசிஷ்டதனமடங்கிய விதமாய் தங்கள் வாழ்நாட்களைச் செலவழித்திருக்கிறார்கள். அவர்களில் 140 லக்ஷத்துக்கு மேலான பேர்கள், சர்வேசுரனுக்கு துரோகஞ்செய்து விசுவாசத்தை மறுதலிக்கிறதைப் பார்க்கிலும் கொடூர நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு, தங்கள் இரத்தத்தைச்சிந்தி, தங்கள் உயிரைப் பலியாக சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கத் துணிந்தார்கள். இவ்விதமாய் உயிரைப் பலியாக்கினதால், அற்ப சொற்ப காரியம் செய்ததாக இந்த அர்ச்சியசிஷ்டவர்களும் வேதசாட்சிகளும் எண்ணினார்கள். இவர்களல்லோ ஆத்தும இரட்சணியம் இன்னதென்று கண்டுபிடித்தவர்கள். இவர்களல்லோ இவ்வுலக அநித்திய இன்பசுக சொத்துகளைத் தேடிக்கொண்டு முடிவற்றதும் அளவற்றதுமான பாக்கிய செல்வத்தைத் தள்ளிவிடுவது எவ்வளவு பைத்தியமென்று கிரகித்தவர்கள்.

8-வது ஹென்றி அரசன் திருச்சபைக்கு விரோதமாய் கலகம் எழுப்பி, இங்கிலாந்து தேசத்தைப் பிரிவினைக்கு இழுக்கும்போது, தோமாஸ் மூர் என்ற பெரிய மந்திரி, அரசனுடைய கட்டளையைத் திடாரிக்கமாய் எதிர்த்ததால் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். அவர் மனைவி அவரைத் தரிசிக்கப்போய் அர

சன் மனப்படி பணிந்து நடக்கவும், அரசனைத் திருச்சபைக்கும், இங்கிலாந்து தேசத்துக்கும் தலைமையாக அங்கீகரிக்கவும் உற்சாகமாய் ஏவித்தூண்டினதுமல்லாமல், அவருக்குக் கிடைக்கும் சம்பாவனைகளையும் உபகாரங்களையும் எடுத்துக் காண்பித்தாள். இதற்குப் பதிலாக மந்திரி கேட்டதாவது :

"எத்தனை நாளுக்கு இந்த இராஜ பேருதவிகளை அனுபவிப்போம்?"

"நாம் வாலிபப் பிராயத்திலிருக்கிறோம், 20 வருஷமாகிலும் சுகித்தனுபவிப்போம்" என்றாள்.

"நீ ஒரு பைத்திக்காரி: அழிந்துபோகிற செல்வம் நிறைந்த 20 வருஷத்துக்கு ஈடாக, அளவற்ற நன்மைகள் நிறைந்த சதாகாலத்தை விற்கவா? புத்தியற்ற விற்பனை, மூடத்தனம். சர்வேசுரன் கிருபையால் நான் ஒருபோதும் இதற்கு சம்மதிக்கமாட்டேன்" என்று திடாரிக்கமாயுரைத்து, திருச்சபை முகாந்தரமாகவும், அர்ச். பாப்பானவர் பாரிசத்தாராகவும் வேதசாட்சியாய் மரித்து மகிமையடைந்தார்.

வேறொரு பிரபுவை ஒரு அரசன் மனச்சாட்சிக்கு விரோதமான கிரிகையைச் செய்ய வெகுவாய்த் தூண்டினபோது, அந்த பிரபு சொன்ன பதிலாவது: எனக்கு இரண்டு



ஆத்துமங்கள் இருந்தால், ஒரு ஆத்துமத்தை உமக்கு கீழ்ப்படிவதினால் நித்திய கேட்டுச்குள்ளாக்கிவிட்டாலும், வேறொரு ஆத்துமத்தை மோட்சகரை சேர்ப்பிக்கப் பார்க்கலாம். ஆனால் ஒரே ஆத்துமந்தவிர வேறில்லையே. எவ்வளவு துன்பதுரிதங்கள் நேரிட்டாலும் அந்த ஒரு ஆத்துமத்தை இரட்சிப்பேன். ஒரு சாவான பாவத்தைக் கட்டிக்கொள்வதைவிட மரண தண்டனையை ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறேன்."

மேற்சொன்னவர்களின் மாதிரிகையைப் பின்பற்றி, தங்கள் ஆத்தும இரட்சிப்பை நிச்சயமாக்குகிறதற்கு சகல ஒறுத்தல் முயற்சிகள் செய்ய முஸ்திப்பாயிருக்கிற கிறீஸ்துவர்களுமுண்டு. இவர்களைத்தவிர, இன்னொரு வகை கிறீஸ்துவ சபையார்களையும் காணகலாம். அவர்கள் எவ்வகையானவர்களென்றால், சிலர் ஓர் வீண் சிலாக்கிய விஷயத்துக்காக, ஓர் வெகு சொற்ப லாபத்துக்காக, தங்களுடையவும் தங்கள் பிள்ளைகளுடையவும் ஆத்துமங்களை நித்திய மோசத்துக்கிடமாக்குகிறார்கள். சிலர் ஒரு கண்டிப்பான வார்த்தையைப் பொறுக்கமுடியாமல், தங்களுக்கு விரோதமான தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாமல், பதிதர் பிரிவினைக்காரர் அஞ்ஞானிகளாகிவிடுகிறார்கள். ஆ! எப்பேர்ப்பட்ட மூடத்தனம்! இப்பேர்ப்பட்ட கிறீஸ்துவர்களை ஒருபோதும் கண்டுபாவியாதேயுங்கள். வேதசாட்சிகளையும்

அர்ச்சியசிஷ்டவர்களையும் உங்கள் கண்களை உயர்த்திப் பார்க்கிறதுபோல, அவர்களைக் கண்டுபாவித்து, சாகுமட்டும் நமதாண்டவருக்கும், திருச்சபைக்கும் பிரமாணிக்கமாயிருங்கள். மறுமையில் உங்கள் பேரின்ப பாக்கியத்தை இழந்துவிடாமலிருக்க இம்மையில் சகலவித பரித்தியாகங்களையும் பண்ண கற்றறிவீர்களாக.

3-ம் அதிகாரம்.

## பத்திமுயற்சிகள், காலை மாலை ஜெபங்கள்.

கிறீஸ்துவர்கள் சேசுக்கிறீஸ்துநாதரின் சீஷர்களாகையால், தங்கள் திவ்விய குருவானவரைப் பத்திவணக்கத்துடன் சிநேகித்து சேவிப்பதைப்பற்றி கருத்தாயிருப்பதே கடன். சேசுநாதர் பிரதியாக மோட்ச சம்பாவனையையும் பேரின்ப பாக்கியத்தையும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். ஆகையால் நீங்கள் அதிகாலையில் எழுந்திருந்தவுடன் முதல் கடமையாக, உங்கள்மேல் சிலுவை வரைந்து, நமதாண்டவரை நோக்கி உங்களிருதயத்தை உயர்த்தி, அவரை ஸ்தோத்தரிக்கவும், கடந்ததைப் பரிகாரம் பண்ணவும், இனிமேல் நித்தியத்துக்கும் பேறுபலன்களடையவும் ஓர் புதுநாள் அளித்திருக்கிறதால், அவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் புரிவீர்களாக. பிற்பாடு சேசுவின் திரு இருதயக் கருத்துக்காகவும், ஜெப அப்போஸ்தல

சபையாருக்கு குறிக்கப்பட்ட கருத்துக்காகவும், அன்று செய்யும் சகல கிரிகைகளையும் ஒப்புக்கொடுங்கள். இந்த காணிக்கை முயற்சியினால் உங்கள் செய்கைகள் எல்லாவற்றிற்கும் உன்னத பேறுபலன் கிடைத்து, நாள் முழுதும் சேசுவின் திரு இருதய ஆசீர்வாதம் பொழிந்தருளப்படும்.

### (1) அதிகாலை ஜெபம்.

அதிகாலையில் எழுந்திருந்து வஸ்திரம் உடுத்தினவுடன், உங்கள் வேலைகளை ஆரம்பிக்குமுன்னே, காலை ஜெபத்தைப் பத்தியோடு ஜெபித்துவாருங்கள். தேவநற்கருணை ஸ்தாபித்த கோவில் அருகாமையிலிருந்தால், ஓர் நல்ல வழக்கமாக, ஒவ்வொருநாளும் அதிகாலையில் கோவிலுக்குச் சென்று, அங்கே திவ்விய பூசைகண்டு, கூடுமானால் நன்மை வாங்க வேண்டியது. இந்த நல்ல வழக்கத்தை அனுசரித்தால், காலைநேரம் வேலையின்றி வீணாய்க் கழிந்துபோகிறதென்று நினைக்கவேண்டாம். தேவ ஆசீர்வாதம் உங்களுக்கு கிடைத்து உங்களின் குடும்ப நன்மைகள்,மென்மேலும் அதிகரிக்க ஏதுகரமாயிருக்கும்.

ஒவ்வொரு நாளும், உங்கள் ஜீவியகால அந்திய நாளாயிருக்கக்கூடுமென்று நிதானித்து, ஜெபத்தினாலும், பத்தி முயற்சிகளினாலும் அந்தந்த நாளை அர்ச்சிக்கப் பிரயாசப்படுவீர்களாக.



### (2) இரா ஜெபம்.

அதிகாலை ஜெபத்துக்கு ஒப்பனைபொருந்திய ஜெபம் இராச்செபம். மெய்யான கத்தோலிக் குடும்பத்தார் இராச்செப வழக்கத்தைத் தங்கள் வீட்டிலே ஸ்தாபித்தால் அவர்களுக்கு மகிமை. குடும்பங்களில் தகப்பன் தாய் தங்கள் பிள்ளைகளோடும் குடும்பத்தாரோடும் கூடி சேர்ந்து பொதுவாய் இராச்செபம் ஜெபிக்கக்கடவார்கள். ஒவ்வொரு நாளும் பொதுவாய்ச் செய்ய சாவுகாசப்படாவிட்டால் ஒவ்வொருவரும் தனியாய் ஜெபம் செய்ய ஒருபோதுந் தவறக்கூடாது. ஒவ்வொரு நாள் காலையில் அன்றையத்தினத்தை சேசுவின் திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்ததுபோல, படுக்கப்போகுமுந்தி, உங்கள் நித்திரையை ஒப்புக்கொடுங்கள். இரா நேரத்தில் யாதொரு பாவமின்றி உங்களைக் காப்பாற்றும்படி தேவமாதாவையும், காவல் சம்மனசையும் வேண்டிக்கொள்ளுங்கள். அநேகருக்கு நித்திரையிலேயே சடுதிமரணம் நேரிட்டதுபோல, ஒவ்வொரு இராத்திரியும் உங்களுக்கு கடைசி இராத்திரியாயிருக்கக் கூடுமென்று நிதானித்து, அன்று நீங்கள் சிந்தனையினாலும் வாக்கினாலும் கிரிகைகளினாலும் கனமான துரோகஞ் செய்திருந்தால் உத்தமமனஸ்தாபப்பட்டு, ஆண்டவரிடம் பொறுத்தல் கேட்டு, இனிமேலொருக்காலும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லை

யென்றும், கூடிய சீக்கிரம் பாவசங்கீர்த்தனம் பண்ணுவதாகவும் கெட்டியான பிரதிக்கினை செய்யவேண்டியது.

இப்பேர்ப்பட்ட மனஸ்தாப முயற்சி செய்த பிறகு மரணமடைகிற எவரும் இரட்சிக்கப் படுவார்கள். இந்த மெய்யான மனஸ்தாப முயற்சியை அலட்சியம் செய்து சடுதியாய் மரித்தால், நரகபாதாளந்தான் கதி. உத்தம மனஸ்தாப முயற்சியிலே சதாகால ஜீவிய பாக்கியம் சார்ந்திருக்கக்கூடுமானதால் ஒவ்வொரு இராச்செப சமயத்தில் இந்த வழக்கத்தைப் பிரமாணிக்கமாய் அனுசரிப்பீர்களாக.

### (3) அசனத்துக்கு முன் பின் ஜெபம்.

நல்ல கிறீஸ்துவர்கள், அதிகாலைச்செபம் இராச்செபம் ஜெபித்தாலும் வேறு ஜெபம் தேவையில்லையென்று சொல்லமாட்டார்கள். பத்தியுள்ள கத்தோலிக்கர்கள் அசன சமயங்களிலும் சிலுவை வரைந்து சர்வேசுரனுடைய ஆசீர்வாதங் கேட்கிறதற்கு யாதொரு சிறு ஜெபமாவது செய்யாமல் சாப்பிடத் துவக்கமாட்டார்கள். இந்த நல்ல வழக்கத்தைப்பற்றி பரிசுத்த சுவிசேஷ வாக்கியங்கள் நமக்கு ஞாபகப்படுத்துகிறதென்னவெனில், சேசுநாதர் அப்போஸ்தலர்களோடு போஜனம் செய்யுமுந்தி பரலோகத்தை அண்ணார்ந்து பார்த்து, பிற்பாடு ஆகாரங்களை



ஆசீர்வதித்தார். நமதாண்டவர் காண்பித்த இந்த சுகிர்த மாதிரிகையைப் பூர்வீக கிறீஸ்துவர்கள் சரியாய்ப் பின்பற்றி வந்தார்கள். இதை ஒப்புவிக்க, **தேர்த்துல்லியான்** எழுதிவைத்திருக்கிறதாவது: "தேகத்துக்கு ஆகாரங்களால் பொசிப்பு கொடுக்குமுந்தி திருச்செபத்தால் ஆத்துமத்துக்கு பொசிப்பு கொடுக்க ஆரம்பித்து, அந்த அசனத்தை ஜெபத்தினாலேயே முடிப்பார்கள்." உங்கள் குடும்பங்களில் இப்பரிசுத்த வழக்கம் உண்டாகும்படி அசனத்துக்கு முன்பின் எப்போதும் ஜெபம் பண்ணும் கடமையை நிறைவேற்றுவீர்களாக.

### (4) வேலைசமயத்தில் ஜெபம்.

உங்களில் அநேகர் எவ்வளவோ பிரயாசையான வேலைகளை ஏற்றுக்கொண்டு இதினால் வெகுவாய் களைப்பும் இளைப்புமடைகிறீர்கள். இத்தோடு மோட்சத்துக்காக சம்பாதிக்கக்கூடிய பேறுபலன்களை இழந்துபோகாதேயுங்கள். வேலை சமயத்தில் இலௌகீக காரியங்களிலே உங்கள் எண்ணமெல்லாம் கவர்ந்துகொண்டிருக்காமலும், கற்பு, பிறர்சிநேகமுதலிய புண்ணியங்களுக்கு விரோதமான சம்பாஷணையில் செலவழிக்காமலும், சேசுநாதரையும் தேவமாதாவையும் நோக்கி உங்கள் இருதயத்தை உயர்த்தி, உங்கள் அலுவல்களின் களைப்பு சலிப்புகளை ஒப்புக்கொடுங்கள். உங்

கள் வேலைகள்மேல் அவர் ஆசீர்வாதம் பொழியவும், இவ்வுலகத்திலே ஏராளமாய் லாபம் விளைவிக்கவும், மறுலோகத்திலே நித்திய மகிமை அளித்தருளவும், சர்வேசுரன் தயவுகூறும்படி மன்றாடுவீர்களாக.

(5) ஜெபத்தின் அவசரமும், அனுசரணையும்.

உங்கள் நேரத்தை வீண் சம்பாஷணையிலும் வியர்த்தமான பேச்சிலும் செலவழிக்காமல், **இடைவிடாமல் ஜெபம் பண்ணவேணுமென்று** கர்த்தராகிய சேசுநாதர் கற்பித்தபிரகாரம் அடிக்கடி ஜெபம் செய்கிற நல்ல வழக்கத்தைப் பிரயோகியுங்கள். மேலும் ஜெபஞ் செய்வது அவசரமான காரியம். சரீர உயிரை வளர்க்க ஆகாரம் தேவை. ஆத்தும உயிருக்கு ஜெபம் தேவை. ஒருநாள் முழுதும் பட்டினியாயிருந்தால், தேகமானது மெள்ள மெள்ள தளர்ந்து மெலிந்துபோக, சீக்கிரம் சாவுக்கு இடமாயிருக்குமே. அப்படியே ஜெபத்தைக் கைவிட்டால் உங்கள் ஆத்தும உயிருக்கு சாவு நேரிடும்.

அனேக கிறீஸ்துவர்கள் ஆத்தும இரட்சண்ய கவலையில்லாமல் ஜீவித்து, தங்கள் கடமைகளைப் புறக்கணித்து, சாவானபாவத்தில் சுலபமாய் விழுகிறார்கள்—ஏன்? அவர்கள் ஜெபம் பண்ணுகிறதில்லை. சர்வேசுரனுடைய அநுக்கிரகமின்றி, பசாசின் சோதனையை ஜெயிக்கவும், புண்ணியங்களை பயிற்சிக்கவும்




நல்வழியில் நடக்கவும் முடியாது. அந்த தேவானுக்கிரகத்தை ஜெபத்தினாலடையலாம். ஆகையால் இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.

ஜெபத்தின் மன்றாட்டு தவறாமல் அளிக்கப்படும்.

ஜெபத்தை நன்றாய்ச் செய்து, நம்முடைய இரட்சண்யத்துக்கு உதவக்கூடியதும் தேவையானதுமான உபகார சகாயங்களை மன்றாடிக் கேட்போமானால், அந்த மன்றாட்டு தவறாமல் கொடுக்கப்படும். இவ்வுலக சம்பத்துக்களையும் இலௌகீக செல்வங்களையும் நாம் கேட்கும்போது, சர்வேசுரன் அவைகள் நமது ஆத்தும இரட்சண்யத்துக்கு உதவக்கூடுமென்று பார்த்தால் தவறாமல் கொடுப்பார், விக்கினமாயிருந்தால் மறுதலித்துவிடுவார். நம்மைச் சிநேகித்து கேட்ட சகாயங்களுக்கு பதிலாய், வேறு விலையுயர்ந்த நன்மைகளை அளித்தருளுவார். ஓர் சிறுபிள்ளை தன் தகப்பன் கையில் வெட்டுக் கத்தி இருக்கிறதைக் கண்டு அதைக் கொண்டு விளையாடும்படி கேட்டால், தகப்பன் கொடுக்கமாட்டானென்பதற்கு சந்தேகமேயில்லை. இப்படி மறுதலிப்பதால் தன் பிள்ளைக்கு வருத்தம் உண்டாக்க அவனுக்கு கருத்தோ? பரிச்சேதமில்லை. தன் பிள்ளையை அவன் சிநேகித்ததால் அந்த பிள்ளை தானே கண்டுபிடிக்கக்கூடாத ஓர் பெரிய மோசத்திலிருந்து காப்பாற்றவேண்டுமென்பதே அவனுடைய கருத்து.

பரமண்டலங்களிலிருக்கிற பரம பிதா நம்மையும் இவ்விதமாய் நடத்துகிறார். நீங்கள் சர்வேசுரனை நோக்கி அந்தந்த வியாதி சொஸ்தமாக மன்றாடுகிறீர்கள். நீங்கள் திரவிய சம்பத்துள்ளவர்களாக அந்தந்த முயற்சி அனுகூலமாக கெஞ்சி கேட்கிறீர்கள். ஆனால் நீங்கள் கேட்டு, மன்றாடுகிற சுக சௌக்கியம், ஆஸ்திபாஸ்தி, உங்களாத்தும கேட்டுக்கு காரணமாயிருக்கிறதாகவும், அதற்கு விரோதமாய் துன்பம், தரித்திரம், வியாதி, இரட்சண்யத்துக்கு ஆதாரமாயிருக்கிறதாகவும் சர்வேசுரனே கிரகிப்பாரானால், மோட்சகரை சேருவதற்கு ஏதுவான வரப்பிரசாதங்களை அளித்தருளுவதினால் உங்கள் ஜெபத்தைக் கேட்டருளுகிறார். குடும்பத்தின் பெற்றோர்களே, ஜெப முதலிய புண்ணியமுயற்சிகளையும் பத்தி கிருத்தியங்களையும் உங்கள் குடும்பத்தில் நிறைவேற்றும்படி நீங்கள் சொல்லும் புத்திமதிகளாலும், காண்பிக்கும் சுகிர்த மாதிரிகைகளாலும், உங்கள் குடும்பம், நசரேத்தூர் திருக்குடும்பத்தாருக்கு உத்தம சாயலாயிருக்கச் செய்யுங்கள். சேசுமரியாயின் திரு இருதயங்களின் ஆசீர்வாதம் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் கிடைக்கும். நசரேத்தூர் திருக்குடும்பத்தின் மாதிரிகையைக் கண்டுபாவிக்கிற கிறீஸ்துவ குடும்பத்தார்கள் இகலோகத்தில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் சுகித்தனுபவிப்பார்கள்.



௪-ம் அதிகாரம்.

## ஞாயிற்றுக்கிழமை ஆசரித்தல்.

ஞாயிற்றுக்கிழமை ஆசரிக்கவேண்டுமென்று சர்வேசுரன் கற்பனையும் திருச்சபையின் கட்டளையும் திட்டமாயுண்டு. இந்த கட்டளையை மீறினால் கடின ஆக்கினையும் விதிக்கப்பட்டிருக்கிறது. சர்வேசுரன் ஆறுநாளுக்குள்ளே உலகத்தைச் சிருஷ்டித்து சகல வேலையும் முடித்தபிற்பாடு, ஏழாம் நாளில் இளைப்பாறி அந்த நாளை ஆசீர்வதித்து, அர்ச்சித்தார். (ஆதியாகமம் II.) ஆகையால் ஒவ்வொரு வாரத்தின் 7-ம் நாளைப் பரிசுத்த நாளாகக் கொண்டாடவும், சர்வேசுரனுடைய ஆராதனைக்கும் ஊழியத்துக்கும் ஒப்புக்கொடுக்கவும், நமது ஆதித்தாய் ஆதித்தகப்பனுக்கே கட்டளையிருந்தது. வெகுகாலமானபிறகு, சர்வேசுரன், மோசேஸ்வழியாக இந்தக் கட்டளையை புதுப்பித்து, இதின் முக்கியத்தைச் சரியாய் காண்பிக்கும்படி, **"ஓய்வு நாளை ஆசரிக்கத் தக்கதாக நினைப்பாயாக"** என்று ஓர் கற்பலகையில் அவரே வரைந்துகொடுக்க மனதானார்.

பழைய ஏற்பாட்டில் சர்வேசுரன் ஆராதனைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள் சனிக்கிழமையாம். ஆனால் திருச்சபை ஆரம்பத்திலேயே, அப்போஸ்தலர்கள் கட்டளையால், சேசுநாதரின் மகிமையான உயிர்த்தானத்தின் தேவ இரகசியத்தை ஸ்தோத்தரிக்கிறதற்காக, சனிக்கிழமைக்குப் பதிலாய் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளாய் மாற்றப்பட்டது. ஆண்டவர் ஊழியத்துக்காக அந்த நாள் ஒப்புக்கொடுக்கக் கடனென்று அர்த்தங் கொடுக்கும்படியாக, ஞாயிற்றுக்கிழமை **ஆண்டவர் நாள்** என்று அப்போஸ்தலர்கள் பெயரிட்டார்கள்.

ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கிறதற்கு இரண்டு காரியம் அவசரம் :—

(1) கூடுமானபோது பூசை காணுதல்.

(2) அடிமை வேலையைத் தவிர்த்தல்.

## i. திவ்விய பூசை காணுதல்.

நமதாண்டவர் திவ்விய பூசைப்பலியை உண்டாக்கின மேரை எப்படியென்றால் : தாம் பாடுபட்டு மரிக்கிறதற்கு முந்தின நாள் அப்பத்தையும் இரசத்தையும் தமது கரங்களிலெடுத்து ஆசீர்வதித்து தமது அப்போஸ்தலர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்போது சொன்னதாவது : "இது என் சரீரம், இது என் இரத்தம். இதை வாங்கி புசியுங்கள், பானம் பண்ணுங்கள். என் ஞாபகமாக செய்வீர்களாக."



திவ்விய பூசைப்பலியும் திருச் சிலுவைப் பலியும் சரிசமானமாயிருக்கிறதெப்படியென்றால், இரு பலிகளிலும், நமக்காக பிதாவாகிய சர்வேசுரனுக்கு பலியாய் ஒப்புக்கொடுக்கிற பொருளாயிருக்கிறவர் சேசுக்கிறீஸ்துநாதர்.

அந்தத் தேவ பலிப்பொருளை ஒப்புக்கொடுக்கிற விதத்தைக் கவனித்தால் இரண்டு பலிகளில் வித்தியாசமுண்டு. திருச்சிலுவையில் சேசுக்கிறீஸ்துநாதர் பிரத்தியட்சமாயும், இரத்தம் சிந்தினதாயும் தம்மை ஒப்புக்கொடுத்தார் ; திருப்பீடத்திலேயோவெனில், காணக்கூடாதவிதமாய் குருக்களுடைய கைங்கிரியத்தைக்கொண்டு இரத்தம் சிந்தாத விதமாய் ஒப்புக்கொடுக்கிறார். ஆகையால் சேசுநாதர், நமக்காக தமது பரம பிதாவுக்கு, தம்மைத் தாமே அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும் இரசத்தின் குணங்களுக்குள்ளேயும், பலிப்பொருளாக ஒப்புக்கொடுக்கிற திவ்விய பூசையில், திருச் சிலுவைப்பலியைத் தொடர்ந்து நடத்துகிறார்.

திவ்வியபூசைப் பலியானது சர்வேசுரனுக்கு மாத்திரம் நாலு கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

அவைகளாவன :—

(1) சர்வேசுரனுக்குரிய தேவாராதனை செலுத்தவும்.

(2) அவர் செய்த உபகாரங்களுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்யவும்.

(3) நம்முடைய பாவங்களுக்கு பொறுத்தலடையவும்.

(4) நமக்குத் தேவையான உபகார சகாயங்களை மன்றாடி கேட்கவும்.

## பூசைகாண கண்டிப்பான கடமை:—

ஞாயிற்றுக்கிழமை, கடன் திருநாட்களில் பூசைகாண வேண்டுமென்று, திருச்சபை கட்டளையிட்டு, நியாயமான தடைகளிருந்தாலன்றி, இந்தக் கட்டளையை மீறினவர்களுக்கு சாவான பாவமென்று நிரூபித்திருக்கிறது. வேதகாரியத்தில் வெகுவாய் அறிவீனமுள்ளவர்கள் முதலாய் இந்த கட்டளையை அறிந்திருக்கிறார்கள். ஆனால், சோம்பேறித்தனத்தினாலே, கவனக் குறைவினாலே, ஞானக்காரியத்தில் அசமந்தத்தினாலே, மிகவும் எளிதாய் யாதொரு முகாந்தரமின்றி இந்தக் கண்டிப்பான கடமையில் வழுவி தவறி, தங்கள் ஆத்துமம் நித்திய கேட்டுக்குள்ளாக்க ஏதுகரம் பண்ணுகிறார்கள்.

பங்கு விசாரணைக் குருசுவாமிமார்கள் இந்த கடமையைப்பற்றி ஓயாமல் பிரசங்கித்து வருகையில், அந்தக் கடமையின் ஆதாரமாக, தங்கள் சுய வார்த்தைகளையல்ல, சேசுக்கிறீஸ்துநாதருடைய சித்தத்தையும், திருச்சபையின்



விவரமான அதிகாரத்தையுந்தான் ஸ்தாபிக்கிறார்கள். ஆகையால் சாவான பாவத்தை விலக்கும்படியாக, தனவந்தர்களானாலும், தரித்திரர்களானாலும், யாவரும், புத்திவிவர பிராயமடைந்தவுடன் இந்தக் கடமையை அனுசரிக்கக் கடன். மேலும் பெற்றோர்கள் தாங்களே பூசை காண்கிறதுமன்றி, தங்கள் பிள்ளைகளும் பூசை கண்டார்களோவென்று விசாரிக்க வேண்டியது. அப்படியே எஜமான்களும் தங்கள் ஊழியர்களைக் கண்காணிக்கவேண்டியது.

ஞாயிற்றுக்கிழமைக் கடமையைச் செலுத்துவதற்கு **முழுப்பூசையும்** காணவேண்டும். அந்த முழுப்பூசையும் **பத்தி வணக்கத்தோடு** காணவேண்டும். ஆனால் அநேக அசட்டைத்தனமுள்ள கிறீஸ்துவர்கள் செய்கிறதுபோல, பூசை முடிவாகிற தருணத்தில் மனது பொருந்தி கோவிலுக்கு தாமதமாய் வந்தால் சாவான பாவமாகும்.

மேலும் சரீரவகையில் ஆஜராகுவது போதாது. முழுக் கருத்துடன், முழு இருதயத்துடன் கோவிலில் சமுகமாயிருப்பவர்கள்தான் சுமுத்திரையாய் கடமையநுசரிக்கிறார்கள். ஆகையால் அங்குமிங்கும் பராக்கு பார்த்துக்கொண்டும், அடுத்தவர்களோடு பேசிக்கொண்டும், சில இலெளகிக காரியங்களைப்பற்றி வேணுமென்று தங்கள் மனதில் கவலைப்பட்டுக்கொண்டும் பூசை

நேரத்தைப் போக்குகிற கிறீஸ்துவர்கள் பாவவாளிகளாகிறார்கள். திவ்விய பூசையில் பீடத்தில் நடந்தேறுகிறதை ஒன்றுக்குப் பின்னொன்றாய் கவனித்துப் பார்த்து, குருவானவர் கையால் பலியாகிற சேசுநாதருக்கு ஆராதனை முயற்சி செய்யவேண்டும். இப்படியிருக்க, கெட்ட எண்ணத்தோடு கோவிலுக்குப் போகிறவர்கள், கோவிலில் அசுசியான நினைவுகளுக்கு இடங்கொடுக்கிறவர்கள், கனமான பாவத்தில் விழுகிறார்கள்.

பூசைக்கடனிலிருந்து ஒருவனைத் தவிர்க்க அநேக முகாந்தரங்களிருக்கக்கூடும். அவைகளில் வியாதி, தூரம், குருவானவர் வராமலிருத்தல் முக்கியமானவைகள். குருவானவர் வராத ஊர்களில் ஒரு கோவில் இருந்தால், அங்கே எல்லாக் கிறீஸ்துவ சபையார்களுங்கூடி பொது ஜெபம் பண்ணுவார்கள். இந்த பூசைமந்திரத்துக்குப் போவது புகழ்ச்சிக்குரிய வழக்கம். சர்வேசுரன் நிருபித்த பிரகாரம் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கிறதற்கு மிகவும் நிச்சயமான வழி இதுதான். ஏனெனில் நியாயமான தடையால் திவ்விய பூசை காண விக்கினப்படும்போது, ஜெபத்தினாலும், மற்ற பத்தி கிருத்தியங்களாலும் அந்த நாளை அனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேற்கூறியதைக்கொண்டு, பூசை காண்பது அதிக பிரதானமும் பிரயோஜனமான



தும் என்று சரியாய்க் கண்டுபிடித்து, ஞாயிற்றுக்கிழமை மாத்திரமல்ல, வாரத்தின் ஒவ்வொரு நாளுமே, உங்களுக்கு முடியுமானால், திவ்விய பூசை காண இனிமேலாக பிரயாசப்படுவீர்களாக. இன்னும் பூர்வீககால கிறீஸ்துவர்களின் பரிசுத்த நடபடிக்கைகளைப் பின்பற்றுகிறதாய், ஒவ்வொரு நாளும் பூசை காணும்போது, திவ்வியநற்கருணையும் உட்கொள்ளுவீர்களாக. இது ஓர் கற்பனையென்றெண்ணாமல், உங்கள் ஆத்துமத்துக்கு வெகு பயனைக் கொடுக்கிற புத்திமதி என்று ஏற்றுக்கொள்ளுங்கள். குருவானவரிருக்கும் ஊர் கோவிலுக்கு 3-மைலுக்கு அதிக தூரத்திலிருந்தால், உங்களுக்கு பூசை காண கண்டிப்பான கட்டளையில்லையென்பது மெய்தான், ஆகிலும் பெலனும் சௌக்கியமுமுள்ளவர்கள் தூரந்துலையை ஒரு போக்காகச் சொல்லி, சுளுவாய் அந்தக் கட்டளையைத் தவிர்க்கக்கூடாது. நல்ல பத்தியுள்ள கிறீஸ்துவர்கள் திவ்விய பூசை காணும் பாக்கியத்தை இழந்துபோகாமலிருக்க, 4-5-6-மைல் தூரம் நடந்துபோகத் துணிகிறதுபோல, நீங்களும் விசுவாசத்தினால் தூண்டப்பட்டு அவர்களைப்போல செய்வீர்களாக.

## ii. அடிமை வேலைகளைத் தவிர்த்தல்.

ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கிறதற்காக, திவ்விய பூசை காணவேண்டியதுந்தவிர

வேறுகட்டளை ஒன்று உண்டு. இதை மீறினாலும் சாவான பாவம். அதாவது: அடிமை வேலைகளை, தன் உயிரைக் காப்பாற்ற, கூலிக்கென்று அமர்ந்து செய்யும் கைவேலைகளை விலக்கவேண்டும். சர்வேசுரன், மோசேஸ் வழியாக, பின்வரும் திட்டமும் பிரஸ்தாபமுமான மொழிகளால், அவர் சட்டத்தை விளம்பரம்பண்ணி, அப்படிப்பட்ட வேலைகளை விலக்கியிருந்தார். "நீங்கள் 6 நாள் வேலை செய்யுங்கள். 7-ம் நாள் ஆண்டவர் நாள். அந்த நாளில் உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், உங்கள் ஊழியர்களுக்கும், உங்கள் மிருகங்களுக்கும், ஒருவருக்கும் யாதொரு வேலையிருக்கக்கூடாது. ஏனெனில் ஆண்டவர் ஆறுநாட்களில் பரலோகத்தையும் பூலோகத்தையும் சமுத்திரத்தையும் அவைகளிலடங்கிய சகலத்தையும் உண்டாக்கி 7-ம் நாளில் இளைப்பாறினார். இதோ ஆண்டவர் அந்த நாளை ஆசீர்வதித்து பரிசுத்தப்படுத்தினதற்கு காரணம்." (Exodus xx.)

**"ஓய்வுநாளில் வேலைசெய்கிற எவரும் சாவார்கள்"** என்ற பயங்கரமான வார்த்தைகளையும் சேர்த்து வசனித்திருக்கிறதால் (Numb. XXV. 28), இந்தக் கற்பனையின் கனத்தைக் கிரகித்துக்கொள்ளலாம். இந்த வார்த்தைகள் வீண் மிரட்டுதலென்று எண்ணுவீர்களோ? பழைய ஏற்பாட்டில் எண்ணாகம புஸ்தகத்திலெழுதியிருக்கிறதை வாசியுங்



கள். ஓய்வுநாளில் வேலை செய்த ஒரு மனிதனைத் திடமொன தடுத்துப்பிடித்து, ஆண்டவரிடம் யோசனை கேட்க, அவன் சகல ஜனங்களால் கல்லாலெறிந்து கொலை செய்யப்படுவானாக என்று ஆண்டவர் தீர்ப்புப்பண்ணினார். ஓய்வுநாளில் வேலை செய்தவர்களை சர்வேசுரன் நடப்பிக்கிற விதம் இதுவே. ஆகிலும், ஞாயிற்றுக்கிழமை வேலை செய்கிற கணக்கில்லாத கிறீஸ்துவர்களுக்கு அருள்வேத புதிய ஏற்பாட்டில் அநித்திய சாவின் ஆக்கினையை விதிக்காத போனாலும், அதிமிக பயங்கரத்துக்குரிய சததமான சாவையும் நரக ஆக்கினைகளையும் தீர்ப்புச் செய்வார்.

சிலவிசை ஞாயிற்றுக்கிழமை வேலை செய்வதற்கு முகாந்தரமாக, தங்களுடைய வழக்கமான அலுவல்களை நிறுத்தினால், தங்களுக்கு பெரும் நஷ்டமுண்டாகிறதென்று சொல்லக்கூடும். அப்படி நியாயமான முகாந்தரமிருந்தால், இந்த சந்தர்ப்ப விசேஷத்தை நீங்களே தீர்மானிக்காமல் பங்குசுவாமியார் கையில் விட்டுவிடவேண்டியது. அவர், கண்டிப்பாய் அவசரமானது எந்த வேலையென்றும், எவ்வளவு நேரத்துக்குள் முடிக்கவேண்டுமென்றும், அதிகாரத்தோடு நிரூபித்து, வேலைசெய்தாலும் கடமை மீறமலிருக்கவேண்டிய வகைகளையும் குறித்து காண்பிப்பார். ஆனால் மேற்கண்ட சந்தர்ப்பம் வெகு அரிதாயிருக்கும். ஞாயிற்றுக்கிழமை வேலைசெய்கிறவர்களில் பெரும்

பாகமானவர்கள், மெய்யான அவசரத்தைமுன்னிட்டு செய்யாமல், வேதவிஷயத்தில் அசமந்தத்தினாலும், இரட்சிப்பின்மேல் அசட்டைத்தனத்தினாலும், உலக ஆஸ்திபாஸ்திமேல் பாவத்துக்கு ஏதுவாய் தாறுமாறான பாசபற்றுதலினாலும் ஞாயிற்றுக்கிழமை வேலை செய்கிறார்கள். சர்வேசுரன்மேலும் பரமண்டலத்தின்மேலும் தங்கள் கண்களை உயர்த்திப் பாராமல், தங்களாத்தும இரட்சண்யத்தைப் பற்றி யாதொரு கவலைப்படாமல், ஓயாமல் பூமியின்கீழ் கவிழ்ந்த பார்வையாய், இலௌகீக சுக செல்வங்களின்மேல் கண்ணும் கருத்துமாயிருந்து அற்பசொற்ப நிலையற்ற சம்பத்துகளைச் சேகரிக்க நாடி தேடுகிறதால், ஞாயிற்றுக்கிழமை வேலை செய்கிறார்கள். ஒரு வாரத்தில் சர்வேசுரனுக்கென்று நியமித்திருக்கிற விசேஷ நாளை ஆசரிக்காமலிருக்கிறவர்கள் ஆண்டவரின் வெளியரங்கமான கட்டளையை நிந்தித்து தங்கள் கெட்ட மாதிரிகையால் மற்ற கிறீஸ்துவர்களுக்கு இடறலாகி, இதினால் சர்வேசுரனுடைய சாபத்தையும், தண்டனைகளையும் தங்கள் தலைமேல் வருவித்துக்கொள்ளுகிறார்கள். “**ஞாயிற்றுக்கிழமை வேலை ஒருவரையும் ஆஸ்திபந்தராக்கியதுமில்லை. அதற்கு விரோதமாய் குடும்பத்துக்கு நிர்ப்பாக்கியத்தையும்நாசத்தையும்வருவிக்காமலிருந்ததுமில்லை**” என்ற முதுமொழியை நன்றாய் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.



சர்வேசுரன் சர்வத்துக்கும் கர்த்தர். நிலம் செழிப்பாகி வெள்ளாண்மை பலன் கொடுக்கப் போதுமான **மழையை** நிறுத்தக்கூடியவர் சர்வேசுரன். மனுஷனுக்கு பெலனும் உயிரும் கொடுத்து ஆதரித்துக்கொண்டிருக்கிறவர் சர்வேசுரன். அப்படியிருக்க, ஞாயிற்றுக்கிழமைக் கடனை மீறுகிறவர்களுக்கு தண்டனையாக, ஓர் வியாதி ஓர் துரதிர்ஷ்ட சம்பவம் நேரிட சித்தமாகி இதினால் அவர்கள் ஞாயிற்றுக்கிழமையும் இளைப்பாறுகிறதோடுகூட, மற்ற ஜீவிய நாட்களிலும் வலிய இளைப்பாறும்படிக்கு சர்வேசுரன் நிரூபிக்கக்கூடும். இதை ஒப்புவிக்க அனேக திருஷ்டாந்தங்களில் பின்வரும் சம்பவம் ஒன்று. பொலோனு தேசத்தின் ஓர் கிராமத்தில், ஓர் பெரிய திருநாளன்று, ஒரு கெட்ட கிறீஸ்துவன் கிணறு வெட்டி வேலை செய்துகொண்டிருந்தான். ஓர் பத்தியுள்ள கிறீஸ்துவப் பெண்பிள்ளை அந்தப் பக்கம் போனபோது வேலை செய்கிறவனைப் பார்த்து “இன்று திருநாளே” என்று நினைப்புக் கூட்டினாள். “அதைப்பற்றி எனக்கென்ன” என பதிலுரைத்தான். சிறிதுநேரத்துக்குப் பிறகு, வெட்டின கிணறு எப்பக்கமும் இடிந்து விழ, அந்த கெட்ட கிறீஸ்துவன் அதினால் நசுங்கிப்போய், மண்கட்டிக் குவியலின்கீழ் புதைக்கப்பட்டான்.

ஞாயிற்றுக்கிழமை அனுசரிக்காதவர்களுக்கு இந்த உலகத்திலேயே பிரசித்தமான ஆக்

கினைகளிடுகிறதில்லை. ஆகிலும் அவர்கள் பாவங்களுக்கு பரிகாரம் பண்ணாதபோனால், இம்மையின் வாழ்நாட்கள் அவர்களுக்கு நிர்ப்பாக்கியமாயிருக்கவும், மறுமையில் நித்திய ஆக்கினைகளுக்கு காத்திருக்கவும் விட்டுவிடுகிறார்.

இதற்கு நேர்விரோதமாய், ஞாயிற்றுக் கிழமையைச் சுமுத்திரையாயனுசரிக்கிறவர்களைக் கவனித்துப்பாருங்கள். சர்வேசுரனுடைய வரப்பிரசாதங்களால் நிரப்பப்பட்டிருக்கிறார்கள். வாரத்தில் தினசரி வேலைகளும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றன. ஞாயிற்றுக் கிழமைக்கும் தேவையான போஜனத்தை எளிதாய்க் கண்டடைந்துகொள்ளுகிறார்கள்.


முற்காலத்தில் அலெக்சாந்திரியா பட்டணத்தில் இரண்டு எளிய தொழிலாளிகள் ஒரேவகையான வேலையை நடப்பித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஜீவியவகைதான் முழுதும் வித்தியாசம். ஒருவர், ஞாயிற்றுக்கிழமைக் கடனைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றும்படி, கைவேலையைத் தவிர்த்துவிடுவார். பத்தியோடு பூசைகாணப்போவார். கூடுமானபோதெல்லாம், தினசரி பூசைக்கும் போக வழக்கமாயிருந்தார். ஆகையால் தன் வேலைகள் சர்வேசுரனால் பூரணமாய் ஆசீர்வதிக்கப்படுகிறதாயும், தன் தாய், தந்தை, பிள்ளைகளைச் சுளுவாய்ப் போஷிக்கக்கூடியதாயுமிருக்கிறதென்று கண்டு சந்தோஷித்தார். வேறொருவன் கோவிலுக்கு போவது அபூர்வம்.



இராவும் பகலும் அடிமைபோல வேலை செய்துகொண்டேயிருப்பான். ஆகிலும் தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் ஒன்றுமில்லையே, அட்டதரித்திரம் நீங்கவில்லையே என்று கத்துவதுதான் பலன். முந்தின தொழிலாளியை இவன் ஒருநாள் கண்டு "உனக்கு சகலமும் சித்தியாகி, பாக்கியமாய் ஜீவிக்கிறாயே—என்ன உபாயம் கையாடுகிறாய்" என்று வினவ, இதற்கு பதிலாக: "என்வேலையில் அனுகூலங் கிடைக்கிறதானால், ஞாயிற்றுக்கிழமையை நான் பிரமாணிக்கமாயனுசரிப்பதினால் வரும் பலனென்று ஐயமின்றி ஏற்றுக்கொள்ளுகிறேன். உனக்கு துன்பத்துக்குமேல் துன்பம் குவியலாய்ச் சேருகிறதற்கு காரணம் ஞாயிற்றுக் கிழமை அனுசரிக்காமல் உனக்குள்ள அசட்டைத்தனந்தானென்று உரைத்தார். உடனே தன் குற்றத்தை அங்கீகரித்து, முழுதும் சீர்திருத்தஞ் செய்யத்துவக்கினான். அந்நாள் துவக்கி தன் விஷயங்களெல்லாம் செழிப்பாயிருக்கிறதாகவும், தன் ஜீவியம் பாக்கியமாயும் மங்களகரமாயிருப்பதாகவும் கண்டுணர்ந்தான். **"சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் முந்த முந்தத் தேடுங்கள். மற்றவைகள் உங்களுக்குக் கூட்டிக்கொடுக்கப்படும்"** என்று சேசுநாதர்சுவாமி அருளிச் செய்த வாக்கு அவனில் நிறைவேறிற்றென்று பார்த்தான்.

நீங்களும் ஆண்டவர் சொன்ன வார்த்தைகளைக் கண்டுபிடித்து, அனுசரித்து, சர்வேசுரனுடைய ஊழியத்தையும் ஆத்தும இரட்சிப்பையும் முந்தத்தேடுங்கள், சரீர உயிரைக் காப்பாற்றும்படி உழைக்கிறதற்கு சர்வேசுரன் ஆறு நாள் கொடுத்திருக்கிறதால், ஏழாம்நாளையாவது நித்திய ஜீவியத்துக்காக பரலோக பேரின்பத்துக்காக பேறுபலன் கைக்கொள்ள சர்வேசுரனுக்கு வசீகரம் பண்ணுங்கள்.

ஞாயிற்றுக்கிழமை வேலையைத் தவிர்த்துவிட்டு பூசைக்குப்போன சகலருக்கும் 500 ரூபாய் இனாம் அளிப்பதாக, பங்குசுவாமியார் விளம்பரம் செய்தால், இதைக்கேட்டு ஞாயிற்றுக்கிழமை முழுதும் வேலை செய்யாமல், எவ்வளவு தீவிரமாய்க் கோவிலுக்குச் செல்வீர்கள்! சர்வேசுரனுடைய கற்பனைகளையும், விசேஷமாய் ஞாயிற்றுக்கிழமைக் கட்டளையையும் சுமுத்திரையாயனுசரிக்கிறவர்களுக்கு சர்வேசுரனே நித்திய சம்பத்துக்களை நியமித்திருக்கிறார். ஆகையால் நித்திய சம்பாவனையை நினைவுகூர்ந்து ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்தமாய் அநுசரிப்பீர்களாக.



5-ம் அதிகாரம்.

## பிள்ளைகள் மட்டில் பெற்றோர்களுக்குள்ள கடமைகள்.

சர்வேசுரனுடைய நான்காம் கற்பனையால் பெற்றோர்கள்பேரில் பிள்ளைகளுக்குள்ள கடமைகளும், பிள்ளைகள்மட்டில் பெற்றோர்களுக்குள்ள கடமைகளும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளுக்கு இந்த கற்பனையால் விதிக்கப்பட்டிருக்கிற கடமைகள் மூன்று. அதின் முதலாவது: பெற்றோர்களைச் சிநேகித்து, சங்கித்து, மரியாதை செய்கிறது.

2-வது: ஞாயமுள்ளதும் சர்வேசுரனுக்கு விரோதமில்லாததுமான சகலத்திலும் அவர்களுக்கு கீழ்ப்படிகிறது.

3-வது: அவர்கள் அன்னவஸ்திரத்துக்கு அவசியமானவைகளில் ஒத்தாசைசெய்கிறது. இந்தக் கடமைகள் எவ்வளவு கண்டிப்புள்ளதென்றால், பழைய ஏற்பாட்டில் இந்தக் கற்பனையை மீறி நடந்தவர்கள்மேல் சாபமிட்டு அவர்களை ஜனங்கள் கல்லாலெறிந்து சாக

டிக்க சர்வேசுரன் தீர்ப்புச் செய்திருக்கிறார். **தாய் தந்தையருக்கு சங்கை மரியாதை செலுத்தாத பிள்ளை சபிக்கப்பட்டவனாயிருப்பானாக என்று ஆண்டவர் வசனித்திருக்கிறார். (Deut. 27. 16) தன் தாய் தந்தையை அடிக்கிறவன் எவனோ அவனுக்கு மரணத் தண்டனையென்பது சர்வேசுரனுடைய கட்டளை. (Exod.)**

இப்படி சுருக்கமாய்ப் பிள்ளைகளின் கடமைகளை விவரித்த பிற்பாடு பிள்ளைகள் விஷயத்தில் பெற்றோர்களுக்குள்ள பெருங்கடமைகளை வெளிப்படுத்துவோமாக.

குடும்பத்தின் தாய்தந்தைகளே! சர்வேசுரன் உங்களுக்கு பிள்ளைகளைக் கொடுத்திருப்பாரானால், அவர்களுடைய முக்கியமானகாரியம் உங்களுடைய பிழைப்பு அலுவல்களில் கையாட்களாயிருக்கிறதும், உங்கள் குடும்பச் சொத்துக்களை காப்பாற்றுகிறதுமென்று எண்ணவே ஒண்ணாது. இதை விட உன்னதமும் உயர்ந்ததுமான நியமகம் அவர்களுக்குண்டு. சர்வேசுரனைச் சிநேகித்து, சேவித்து, இதினால் ஆத்தும இரட்சண்யத்தையடையும்படியாக இந்த உலகத்திலிருக்கிறார்கள். அவர்கள் நல்ல கிறீஸ்துவர்களாய், இரட்சண்யவழியிலே நடந்து மோக்ஷகரை சேரும்படி நீங்கள் உதவி செய்யும்படியாக உங்கள் பராமரிப்பில் சர்வேசுரன் அவர்களை



ஒப்புவித்திருக்கிறார். உங்கள் பிள்ளைகள் மேலுள்ள சிநேகப்பெருக்கமானது அவர்களுக்கு சரீர உணவைச் சேகரித்துகொடுத்து தீர்க்காயுசாய் அவர்களைக் காப்பாற்ற சர்வ பிரயாசையுடன் கண்காணிக்கச்செய்கிறது. சரீர ஜீவியத்தைவிட அதிகமாக விலையேறப்பெற்ற ஆத்தும ஜீவியத்தைப்பற்றி உங்களுக்கு பிரயாசையாயிருக்கிறதோ? பெற்றோர்களில் எத்தனையோபேர் அகத்தியமாயனுசரிக்கவேண்டிய இக்கடமைகளை அறியாதிருக்கிறார்கள், அல்லது மறந்துபோகிறார்கள். இந்த துயரத்துக்குரிய அசட்டைத்தனத்தினால், தங்கள் பிள்ளைகள் ஞானக்காரியங்களில் நித்திய கேட்டுக்குள்ளாக காரணமாகிறார்கள். இதைப்பற்றி சர்வேசுரனுக்கு பயங்கரமான கணக்கு ஒப்புவிக்க ஏதுவாகிறார்கள். இப்பேர்ப்பட்ட நிர்ப்பாக்கியத்தைத் தடுக்கிறதற்காக உங்கள் பிள்ளைகள் ஆத்தும விஷயமாய் உங்களுடைய பிரதான கடமைகளை விவரிப்போம்.

## i. குழந்தைகளுக்கு அதிசீக்கிரமாய் ஞானஸ்நானம் கொடுக்கச் செய்கிறது:

ஓர் குழந்தை பிறந்தால் குடும்பத்தில் சந்தோஷமும் அக்களிப்புமுண்டாகியிருந்தாலும், அந்த சிறு குழந்தை பலவீனமும் ஒன்றுக்கும் ஏலாத ஒரு பிராணிதானே. ஆகிலும் அந்த சிறு உடலில் சாவில்லாத

ஓர் ஆத்துமம் அடங்கியிருக்கிறது. இந்த ஆத்துமத்தின் கதி சர்வேசுரனைச் சேவித்து ஸ்தோத்திரம்பண்ணி இதினால் மோட்சத்தின் நித்திய பேரின்பத்தை அடைகிறதேயாம். ஆகிலும் இந்த ஆத்துமம் ஜென்மப் பாவதோஷத்தால் அசுத்தப்பட்டிருக்கிறதினால் சர்வேசுரனுக்கு சத்துராதி. பசாசுக்கு அடிமை. அந்தப் பாவதோஷத்திலிருந்து சுத்திகரமாகுமட்டும் அந்த ஆத்துமம் பரலோக பாக்கியத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க பிசாசின் வல்லப வசத்திலிருந்து அந்த ஆத்துமத்தைப் பறித்தெடுக்கக் கூடியது ஞானஸ்நானமாம். ஞானஸ்நானமாவது தேவ இஷ்டப்பிரசாத ஜீவியத்தை அளித்து, சர்வேசுரனுடைய் பிள்ளையாகவும், திருச்சபையின் அங்கத்தாராகவும், மோட்ச இராச்சியத்துக்கு சுதந்தரவாளியாகவும் செய்கிறது.

குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கூடிய சீக்கிரமாய்க் கொடுக்கப் பார்ப்பது எவ்வளவு அத்தியாவசியமென்று மேற்கூறியதால் நீங்கள் கண்டுபிடிக்கிறீர்கள். ஞானஸ்நானத்தை தாமதிப்பீர்களானால், குழந்தையை சர்வேசுரனுடைய சாபத்தில் விட்டுவிடுகிறீர்கள். ஞானஸ்நானம் பெறுமலேயே மரிக்கக்கூடிய ஆபத்துக்குள்ளாக்கி, பரலோகபேரின்பத்தை எக்காலமும் இழந்துவிடும்படிக்கு மாக்குகிறீர்கள். இப்படியிருக்க ஓர்வித அலட்சியத்தினா



லோ, சகுனசாஸ்திர விநோசாரங்களினாலோ அநேக வாரங்களாக, அநேக மாதங்களாக குழந்தைகளுக்கு ஞானஸ்நான பலனைத் தவிர்ப்பிக்கிற பெற்றோர்களுமுண்டு. இவர்கள் எத்தன்மையான பொறுப்பைச் சுமந்துகொள்ளுகிறார்களென்று சொல்லமுடியுமோ? எந்தவித தாமதமும் குழந்தையின் இரட்சிப்புக்கு அபாயமாம். இப்படிப்பட்ட தாமதம் நேரிட்டதற்கு சர்வேசுரனுக்கு முன்பாக கனத்த முகாந்தரம் காண்பித்து தப்பித்தாலொழிய, இதற்கு உத்தரவாதியானவர்கள் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். பிரபலியமான ஓர் திரு யாத்திரை ஸ்தலக்கோவிலில் தங்கள் குழந்தைக்கு ஞானஸ்நானங் கொடுக்கச் செய்ய வார்த்தைப்பாடு கொடுத்து, அந்தத் திருநாள் சமயத்தில் தேவாலயத்துக்குப் போகுமட்டும் ஞானஸ்நானத்தை தாமதிக்கிற பெற்றோர்களுமுண்டு. அந்த நேரம் வருமுன், குழந்தை ஞானஸ்நானமின்றி மரிக்கக்கூடும். ஆகையால் இப்படிப்பட்ட வார்த்தைப்பாடு கொடுக்காதேயுங்கள். இது ஒரு பத்திக்கிருத்தியமல்ல. அதற்கு விரோதமாய் இது பாவமாகிறது. அந்த தேவாலயத்தில் கொண்டாடப்படுகிற அர்ச்சியசிஷ்டவரின் ஆசீர்வாதம் இந்தப் பிள்ளைமேல் பொழிகிறதேயில்லை. அதற்கு விரோதமாய், ஞானஸ்நானத்தைத் தாமதித்து பிள்ளையின் ஆத்துமம், பரலோக சிங்காரவனத்திலிருந்து

தள்ளிவைக்கும்படியான அபாயத்துக்குட்படுகிறதால், அந்த அர்ச்சியசிஷ்டவரின் சாபத்துக்கும் கண்டனை தண்டனைக்கும் ஆளாகிறார்கள்.

ஞானத்தாய் ஞானத்தகப்பனை முன்னமேயே நியமித்திருந்தால் பிள்ளை பிறந்த மறுநாள், அல்லது 3-ம் நாள் அல்லது பின்வரும் ஞாயிற்றுக்கிழமையாவது ஞானஸ்நானங்கொடுக்க சாத்தியப்படும்.

சாதாரணமாய் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியவர் ஓர் குரு சுவாமியார். ஆனால் அவசர சமயத்தில் ஆராகிலும் ஞானஸ்நானம் கொடுக்கலாம். கொடுக்கவும் வேண்டும். ஆகையால் குருவானவர் தூரந்தலையிலிருக்கும்போது, குழந்தை மரண அவஸ்தையாயிருக்குமானால், ஞானஸ்நானம் கொடுக்கத் தெரிந்த ஒருவர் கொடுக்கவேண்டும். இதற்காக மந்திரித்த தீர்த்தத்தையோ, அல்லது சுபாவமான தண்ணீரையோ, கையிலெடுத்து அந்த குழந்தையின் தலையின்மேல் வார்க்கும்போதே பிள்ளையின் பெயரை உச்சரித்து: "**பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே நான் உன்னைக் கழுவுகிறேன்**" என்கிற வார்த்தைகளை நன்றாய் உச்சரிக்க வேண்டியது. குழந்தை மரித்தால், உடனே பரலோக இராச்சியத்தில் பிரவேசித்து



பேரின்ப பாக்கியத்துக்கு சுதந்தரவாளியாகும். குழந்தை பிழைத்திருந்தால் பெற்றோர்கள் அதைக் கோவிலுக்குக் கொண்டுபோய் குருவானவர் ஞானஸ்நான சடங்கை நிறைவேற்றி முடிக்கும்படி ஜாக்கிரதை செய்வார்களாக.

## ii. பிள்ளைகளுக்கு கிறீஸ்துவ கடமைகளைப் படிப்பிக்கிறது.

பிறந்த குழந்தையானது ஞானஸ்நானத்தால் சர்வேசுரனுடைய பிள்ளையாகவும் மோட்ச சுதந்தரவாளியுமானதால், அந்தக் குழந்தையினிடம் பரிசுத்ததனம் காப்பாற்றப்பட்டிருக்குமட்டும், சேசுநாதர்சுவாமி அந்தக் குழந்தையிடத்தில் வாசமாகி, தமது ஜீவியத்தில் அது உயிர்பிழைக்கச் செய்கிறார். குழந்தை வளர்ந்து, மெள்ள மெள்ள புத்தி விவரப் பிராயமடைந்தாலும், வேத காரியத்தில் ஒன்றுமறியாத பிள்ளையாயிருப்பதுண்டு. சர்வேசுரனை அறிந்து அவருக்கு ஊழியம் பண்ணி, சேசுநாதருடைய போதனைக்கும் மாதிரிகைக்கும் ஒத்தபிரகாரம் ஜீவிக்க, ஒரே வார்த்தையில், நல்ல கிறீஸ்துவனாய் நடக்க, பெற்றோர்கள்தான் அந்தப் பிள்ளைக்கு படிப்பிக்கவேண்டும். அதை அவர்களுடைய விசாரணையில் சர்வேசுரன் ஒப்புவித்திருக்கிறதால் அவர்களிடமே கண்டிப்பான கணக்கு கேட்

பார். வேதாகமத்தில் எழுதியிருக்கிறபடி, சர்வேசுரன் பெற்றோர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதாவது: "**உங்கள் பிள்ளைகளை, வெகு இளம் பிராயத்திலேயே, கூடிய சுறுசுறுப்புடன் நல்ல வழியில் சீர்ப்படுத்தவும், சரியானவிதமாய் வேத விஷயங்களைப் படிப்பிக்கவும் தவறாதேயுங்கள்.**' (Eccl. 7-25)

ஆனால் அனேக பெற்றோர்கள் அதிமிக பிரதான இந்தக் கட்டளையை அலட்சியம் பண்ணுகிறதினால் கனமான குற்றவாளியாகிறார்கள். தங்கள் அலுவல்களில் தங்கள் பிள்ளைகள் கையுதவியாயிருந்து ஒத்தாசை பண்ணவும், குடும்பத்துக்கு இலௌகீக திரவியங்களைச் சம்பாதிக்கவும், ஏக கவலையாய் பழக்குகிறார்களே தவிர, அவர்களைப் பத்திக் கிரிகைகளில் பழக்குகிறதற்கு கவனமேயில்லை. அர்ச். சிலுவை மந்திரம், பரமண்டல மந்திரம், பிரியதத்த மந்திரம், சேசு மரியே என்கிற திரு நாமங்கள், பிரதான விசுவாச சத்தியங்கள், கிறீஸ்துவர்களின் மிகவும் முக்கியமான கடமைகள், இவைகளைப் பிள்ளைகளுக்கு படிப்பிக்கிறதேயில்லை. அவர்களுக்கு இரட்சிக்கிறதற்கு ஓர் ஆத்துமம் உண்டோவென்று முதலாய் அறியாதபடி அவர்களை வளர்த்து வருகிறார்கள். விசேஷமாய் கத்தோலிக் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்காமலிருக்கிற ஊரிலும், பங்கு விசாரணைக் குருசுவாமியார் அபூர்வமாய்



வந்து சில நாள் மாத்திரம் தங்கியிருக்கக்கூடிய கிராமங்களிலும் வசிக்கிற கிறீஸ்துவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கத்தோலிக் படிப்பு வருவிக்க அசட்டையாயிருந்தால் எப்படி அவர்கள் வேத காரியங்களைக் கற்றுக்கொள்வார்கள். மேற்றிராணியாண்டவர், விசாரணைக்கு ஊர்களைச் சுற்றிப் போகும்போது, சற்று பெரிய ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகளைப் பார்த்து, அவர்களுக்கு என்ன தெரியுமென்று கேட்டால், மந்திரங்களும், வேதத்தின் பிரதான சத்தியங்களும் அறியாமலிருக்கிறதையும், ஈடேற்றத்துக்கு ஓர் ஆத்துமம் அவர்களுக்கிருக்கிறதோவென்று முதலாய் தெரியாமலிருக்கிறதையும் மேற்றிராணியாண்டவர் கண்டு கஸ்திப்படுவதுண்டு. இப்பேர்ப்பட்ட அறிவீனம், பெற்றோர்களின் அசட்டைத்தனத்தால் விளைகிற தின்மை என்கலாம்.

ஆனால் சில பெற்றோர்கள் என்ன சொல்லுகிறார்களென்றால்: "எங்களுக்கே மந்திரங் குறிப்பிடம் தெரியாதே, நாங்கள் என்ன சொல்வோம், எங்கள் பிள்ளைகளுக்கு நாங்கள் எப்படி படித்துக்கொடுப்போம்?" பெற்றோர்கள் தாங்களே தங்கள் பிள்ளைகளுக்கு படித்துக் கொடுக்க சக்தியற்றவர்களானால், தங்களாலாகக்கூடிய வகைகளைக்கொண்டு அந்தக் குறையைத் தீர்க்க கடன். இந்தக் கண்டிப்பான கடனுக்கிரக்க தங்கள் பிள்ளைகளைக் கத்தோலிக் பள்ளிக்கூடத்துக்கும், ஞானோப

803 03 224149

தேசத்துக்கும், புதுநன்மை ஆயத்தத்துக்கும் அனுப்பும்படி முயற்சி செய்வார்களாக.

குடும்பத்தின் தாய் தந்தையரோ, சில சந்தர்ப்பங்களை முன்னிட்டு, உங்களுடைய பெற்றோர்கள் உங்களைச் சரியான கிறீஸ்துவர்களாக வளர்த்திருக்காதேபோனால், நீங்கள் பதிலுக்குப்பதில் உங்கள் பிள்ளைகளுக்குச் செய்யாதேயுங்கள். நமதாண்டவர் உங்கள் பெற்றோர்களைவிட அதிக உசிதமான ஸ்திதியில் உங்களை வைத்திருக்கிறதால், சரியான கத்தோலிக் படிப்புக்கு ஏற்பாடு பண்ணுங்கள். இக்காலத்தில் பங்குவிசாரணைச் சுவாமிமார்கள் தொகையில் அதிகரித்து, ஒவ்வொருவருக்கும் பங்குக் கிராமங்கள் குறைந்து, பள்ளிக்கூடங்களை எவ்விடத்திலும் பரம்பும்படி செய்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட வழிகளை உங்களுக்கு கொடுத்திருக்கும் சர்வேசுரன் உங்கள் பெற்றோர்களைப் பார்க்கிலும் நீங்கள் அதிகமாய்ச் செய்ய எதிர்பார்த்திருக்கிறார். கணக்கில்லாத பாவங்களுக்கும், ஆத்தும மோசத்துக்கும் காரணமான வேத அறிவீனத்தைக் குடும்பங்களில் நீளித்திருக்கவிட்டு விடுவீர்களானால், சர்வேசுரன் உங்களுக்கு கண்டிப்பான தீர்வையிடுவார்.

கத்தோலிக் பள்ளிக்கூடங்களிலும், முக்கியமாய் கன்னியாஸ்திரீகள் நடத்திவருகிற பெண்கள் பள்ளிக்கூடங்களிலும், உபாத்தியா



யர்களாயிருக்கிற சகோதரிகளும், மற்ற கத்தோலிக்கர்களும் தங்கள் முக்கிய கடமையாக எண்ணி செய்கிறது என்னவென்றால், படிக்கிற பெண்கள் தாய்மார்களாகும்போது, தங்கள் குழந்தைகளைப் பத்தியுள்ள பிள்ளைகளாய் வளர்க்க எவ்வளவு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறார்களென்றும், இதற்காக, தங்கள் பிள்ளைகளுக்கு வெகு இளம் பிராயத்திலேயே, மந்திரங் குறிப்பிடங்களையும், பிரதான சத்தியங்களையும் படித்துக் கொடுக்க வேண்டுமென்றும், அவர்களிடம் நமதாண்டவரைப்பற்றியும், அர்ச். தேவமாதாவைப் பற்றியும் பேசி, நல்ல கிறீஸ்துவர்களாய் அவர்களைச் சிநேகித்துச் சேவிக்க, பிள்ளைகளை ஆயத்தம் பண்ணவேண்டுமென்றும் இவ்விதமாய் படிக்கிற பெண்களுக்கு போதித்து வருகிறார்கள்.

### iii. பிள்ளைகளைக் கண்டித்து திருத்துகிறது.

உங்கள் பிள்ளைகள் உத்தமமான கிறீஸ்துவர்களாகும்படி, அவர்களுக்கு வேதப் பயிற்சி எவ்வளவு முக்கியமும் அவசியமுமென்று கண்டுபிடித்திருக்கிறீர்கள். ஒவ்வொரு குழந்தையும் சகலவித புண்ணியங்களின் விதையைத் தனக்குள் அடக்கிக்கொண்டிருந்தாலும், ஜென்மப்பாவத்தின் தோஷத் தொடர்பினால், ஆசாபாசங்களும், கெட்ட உணர்ச்சிகளும்,

அவர்களுக்கு குறையாதென்பது திண்ணம். இவைகளை அடக்கி ஒடுக்காமலும், புண்ணியக் கிரிகைகளைச் செய்யாமலுமிருந்தால், பிள்ளைகள் நித்திய ஆக்கினைக்கு பாத்திரவான்களாகக் கூடும். ஆகையால் பிள்ளைகளை உண்மையாகவே சிநேகிக்கிற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கண்டித்து திருத்துவது மிகவும் பூசிதமான கடமை என்று எண்ணுவார்களாக. சர்வேசுரனே இந்தக் கட்டளையைத் திட்டமாய் அருளிச்செய்திருக்கிறார். வேதாகமத்தில் ஓரிடத்தில் எழுதியிருக்கிறதாவது : **உங்கள் பிள்ளைகளைக் கண்டியுங்கள். அதினால் அவர்கள் ஆத்துமத்தை நரகத்திலிருந்து இரட்சிப்பீர்கள்** (Prov. 23, 14). வேறிடத்தில் **மகனைக் கண்டித்து நடத்த அசட்டை பண்ணுகிற தகப்பன், அவனைப் பகைக்கிறான். தண்டித்து திருத்துகிறவனோ, கிரமப்படி நேசிக்கிறான்.** (Prov. 23, 24).

விவசாயஞ் செய்கிறவர்களையும் தோட்டக்காரர்களையும் பாருங்கள். நிலத்தில் விதையை விதைத்துவிட்டு சும்மா இருக்கிறார்களோ? விதைத்த பிறகு வெள்ளாண்மையை எச்சரிக்கையாய்க் கண்காணித்துப் பார்க்கிறார்கள், முளைத்த பயிரைப் பண்படுத்துகிறார்கள். தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். விசேஷமாய் நல்ல பயிர்கள் வளரவிடாதபடி அமிழ்த்திப்போடக் கூடிய அடர்த்தியான களைகளை வெட்டியெறிவார்கள். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளைச் சீர்திருத்தும் விஷயத்தில், ஆண்டவர் கொடுத்த கற்பனையை இதுவரை நீங்கள் பிறக்கணித்திருந்தால், இனிமேலாக அந்தக் கடமையை நேர்மையாய் நிறைவேற்றி, உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் இம்மையிலும் மறுமையிலும் மெய்யான பாக்கியத்தையும், அழியாத திரவியங்களையும் சேகரித்துக் கொள்வீர்களாக.



## எந்தப் பிராயத்தில் பிள்ளைகளைக் கண்டிக்கத்தகும்?

ஒரு பிள்ளையைப் பாலப்பருவத்திலே பெற்றோர் மனம்போல் நல்வழியில் பழக்க சுலபமாயிருக்கிறதினாலே, பாலப் பருவத்திலேயே பிள்ளைகளைக் கண்டித்து திருத்துவது அவசியம். மரக்கன்றுகளை, ஒருவர் விரும்புகிறபடி, அந்தந்தமாதிரி, இந்திந்தத் திசையை நோக்கி, வளைக்கக்கூடும், நிமிர்த்தக்கூடும். இந்தக் கன்றுகள் கனத்த பெருத்த மரங்களாகிவிட்டால், வளைக்கவோ, நிமிர்த்தவோ, பிரயாசப்படுவது வீண். வலிமை பலவந்தமாய்ச் செய்தால் மரமுறியும். பிள்ளைகள் விஷயத்திலும் இப்படிச் சம்பவிக்குமென்பதற்குத் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் வாக்கியங்களே அத்தாட்சி: **இளம்பிராயத்திலுண்டான ஜீவியப்பழக்கம், விருத்தாப்பியத்தில் அவனைவிட்டுப் பிரியாது** (Pro. 22-6.) ஆகையால் பிள்ளை

களை வெகு இளம்பிராயத்திலேயே கண்டிப்பது ஒழுங்கு.

## கண்டித்து திருத்துவது எவ்வண்ணம்?

பிள்ளைகளின் பிரயோசனத்தை முன்னிட்டு செய்கிற கண்டிப்பானது புத்தி நியாயத்துக்கொத்ததாயும், கிறீஸ்துவ மேரையாகவும், விவேகமுள்ளதாகவும் இருக்கவேண்டியது. சில தாய் தகப்பன்மார்கள் கோபத்தோடும், மனவெறிவேகத்தோடும், எரிச்சல் நிறைந்த கூக்குரலோடும், தங்களுக்கும் பிள்ளைகளுக்கும் அவமானம் வருவிக்கக்கூடிய தூஷணை வார்த்தைகளைக் கக்கி, இருதயத்தைக் குத்தும்படியான நிந்தையான பேச்சுகளால் வைது திட்டி கண்டிப்புச் செய்வார்கள். இப்பேர்ப்பட்ட கண்டிப்பால் பிள்ளைகளுக்கு நன்மை விளையமாட்டாது. பிள்ளைகள் தாய் தகப்பனுக்கு மரியாதை செலுத்துவதற்குப் பதிலாய் அவர்கள்மேல் சினந்துகொண்டிருக்கும்படியாகும். பிள்ளைகள் பெரிய குற்றத்தைச் செய்யும்போது அதற்களவாக கண்டிப்பும் அகோரமாயிருக்கலாம். ஆனால் எப்போதும் யோக்கியமாயும் சுபாவத்துக்கு மேலான சுத்த கருத்தோடும் உங்களுக்கும் பிள்ளைகளுக்கும் சங்கை வருவிக்கிறவிதமாய்க் கண்டியுங்கள். அப்படியானால், பிள்ளைகள் தங்கள் நன்மையைப் பெற்றோர்கள் தேடுகிறார்களென்று கண்டறிந்து, அந்தக் கண்டிப்பினால் பலனடைந்து,



தங்களுடைய நன்றியறிதலைக் காண்பிப்பார்களென்பது உறுதி.

சில தாய்தந்தைகள் அற்பசொற்ப குறைவுகளுக்காக பிள்ளைகளைத் தண்டிக்கிறார்களேயொழிய ஆத்துமத்துக்குக் கேடுகள் வருவிக்கிற கனமான குற்றங்கள் செய்வதைக் கவனிக்காமல் கண்ணை மூடிக்கொள்ளுகிறார்கள். தங்கள் பிள்ளைகள் வேதக்கடமைகளை அனுசரியாமல், அஞ்ஞான மத உற்சவங்களைப் பார்க்கப் போக விட்டுவிடுகிறார்கள் துஷ்டத்தோழர்களைப் பின்பற்றி, உதாசன வார்த்தைகள் பேசி, தின்மையைப் படிப்பித்து பரிசுத்தத்தைப் பறிக்கக்கூடிய ஆட்களிடம் அடிக்கடி நெருங்கி பழக்கமாயிருக்கிறதைப் பார்த்தும் சும்மா இருப்பார்கள். ஒரு விஷசர்ப்பம் தங்கள் பிள்ளைகள் கிட்ட வருகிறதைக் கண்டால், உடனே அலறிப்பதறி பாம்பை விரட்டி அடித்து, மிகுந்த படபடப்பாய் ஓடி பிள்ளையின் உயிரைக் காப்பாற்றுவார்கள். சரீர உயிருக்காக இவ்வளவு விழிப்பாயிருப்பார்களானால், ஆயிரமடங்கு மேலாய் விலையுயர்ந்த ஆத்தும உயிரைக் காப்பாற்ற எவ்வளவு விழிப்பாயிருக்கவேணும். இவ்விளவு பிரதான கடமையைக் கைநெகிழ்வதற்காக, பெற்றோர்களைச் சர்வேசுரன் அகோரமாய்த் தீர்வையிடுவாரென்பது திண்ணம்.

சில குடும்பங்களில், ஓர் துஷ்ட மகன் தன் தாயைச் சங்கையீனமாய் நடத்தும்படி ஒரு

வேளை துணிவான். இந்தச் சந்தர்ப்பத்தில் தகப்பன் கவனமின்றி ஒன்றும் பேசாமலிருந்து பிள்ளைக்கு தைரியங்காட்டினதுபோலிருக்கக்கூடாது. அதற்கு விரோதமாய், அவன் குற்றத்தின் கனாகனத்தைக் கண்டுபிடிக்கச் செய்து, இனிமேல் மறுபடியும் அதே குற்றத்தில் விழாதபடி தடுக்கவேண்டியது.

சுருக்கிச்சொல்ல, பெற்றோர்கள் பிள்ளைகளைக் கண்டிப்பதில், கோபத்தையும் வெறிவேகத்தையும் தவிர்க்கவேண்டியது; மிதமிஞ்சினதும், குற்றத்துக்கு ஏதுவானதுமான இளக்காரத்துக்கு இடங்கொடுக்கலாகாது.

பெரிய குருப்பிரசாதியான **ஏலி** என்பவருக்குச் சர்வேசுரன் இட்ட கொடூர ஆக்கினையைப்பற்றி பழைய ஏற்பாட்டில் வாசித்து அறிந்திருக்கிறீர்கள். அவர் தமது பிள்ளைகளின் அக்கிரம நடத்தையைப்பற்றி அறிந்திருந்தும், அவர்களுக்குச் சரியான தண்டனை கொடுக்காமல் மிகுந்த தாட்சணியமாய் விட்டுவிட்டார். இதின் முகாந்திரமாகவே, சர்வேசுரன் தகப்பனுக்கும் பிள்ளைகளுக்குமாக சாவு கட்டளையிட்டதுமன்றி, இஸ்ராயேல் ஜனத்தார்மேல் ஓர்வித சாபத்தைச் சுமத்தினார். பெற்றோர்கள், பிள்ளைகளைத் தண்டிக்காத குற்றத்துக்காக, ஒரு குடும்பத்துக்கும், ஒரு ஜாதி ஜனத்துக்கும் சர்வேசுரன் இடுகிற ஆக்கினையின் அகோரம் எவ்வளவு கொடூரமானதென்று இதினால் அறியலாம்.



அர்ச். பெர்நார்தின் சரித்திரத்தில் எழுதியிருக்கிற ஓர் வர்த்தமானமாவது: ஓர் வாலிபன் மரணத்தீர்ப்புக்குள்ளாகி, தூக்கப்படப்போகிற தருணத்தில், தன் தகப்பனும் கொலைக்களத்தில் கஸ்தி துயரத்தோடு நிற்கிறதைக் கண்டு, அவரோடு பேசும்படி உத்தரவு கேட்க, தகப்பனும் கிட்டவர, அந்தத் துஷ்ட மகன் இரகசியம் பேச விரும்பினதுபோல பாசாங்கு பண்ணி, தகப்பனிடம் நெருங்கி தன் பற்களால் அவன் கன்னத்தைக் கடித்தான். பிறகு இரத்தம் நிறைந்த வாயைத் திறந்து, தகப்பன் மேல் குற்றஞ்சாட்டி பயங்கர சத்தமாயுரைத்ததாவது: "ஓ பொல்லாத தகப்பனே! என் வாலிபப்பிராயத்திலே எனக்கு கண்டனை தண்டனை செய்யாததினாலே நான் ஓர் பெரும்பாதகனானேன். இந்த ஈன இழிவான சாவுக்கு நானல்ல, நீர்தான் பாத்திரமாயிருக்கிறீர்."

தாய்தந்தைகளே, கேட்டீர்களா! இளம்பிராயத்திலே தங்கள் பிள்ளைகளைக் கண்டிக்காத பெற்றோர்கள் தங்களுக்கும் பிள்ளைகளுக்கும் துன்ப துயரமும் நிர்ப்பாக்கியமும் வரும்படி வழிபண்ணிக்கொள்ளுகிறார்கள். உங்கள் பிள்ளைகள் பேரில் பாசபட்சமாயிருங்கள். ஆனால் குருட்டுப் பட்சம் வேண்டாம், உண்மையும் விவேகமும் பொருந்தின பட்சமாயிருக்கட்டும். அமரிக்கையும் உறுதியுமான கண்டிப்பினால் உங்கள் பட்சத்தைக் காண்பியுங்கள். இதினால் நீங்கள் உங்கள் பிள்ளை

களுக்கு மெய்யான திரவியத்தைச் சேகரித்துக் கொடுக்கலாம். அவர்களும் உங்களுக்கு இவ்வுலகில் சந்துஷ்டியையும் ஆறுதலையும் தந்து, மறு உலகில் மகிமை பெருமையையும் பெற்றுக்கொடுப்பார்கள்.

## iv. பிள்ளைகளுக்கு நன்மாதிரிகை காண்பிக்கிறது.

பிள்ளைகளை நல்வழியில் நடப்பிக்க, வேதப் பயிற்சியும் கண்டிப்பும் பிரதானமானாலும், இதினால் கைகண்டபலன் சித்திக்க, மற்றொரு காரியம் அவசியம். அதாவது: பெற்றோர்கள் பத்திக்கிருத்தியங்களாலும், நல்ல வார்த்தைகளாலும், நன்னடத்தையாலும் சுகிர்த மாதிரிகை காண்பிக்கவேண்டும். நன்மையை நாட ஒருவனைத் தூண்டிவிடவோ, தின்மை வழியில் இழுக்கிறதற்கோ, மாதிரிகையைப் போல வல்லபமுள்ளது வேறொன்றுமில்லை. ஓர் பிள்ளை தன் குடும்பத்தாரின் நடபடிக்கைகளைக் கண்டு தன் மனதில் பதித்துக்கொள்ளுகிறதாலும், அநுதினம் தன் கண்முன்பாக நிறைவேறும் செய்கைகளைப் பார்த்துக்கொள்ளுகிறதாலும் விசேஷமாய் தன்னைச் சீர்ப்படுத்துகிறதுண்டு. உத்தமமான கிறீஸ்துவனைப் போல தன் கடமைகளை நிறைவேற்றாமல், தாறுமாறாய் ஜீவிக்கும் தகப்பன் தன் மகனுக்கு பத்தியையும், நன்னடத்தையையும் புகழ்ந்தேற்றி கற்பிப்பதில் பலனே யில்லை.



பிள்ளை வளரவளர தகப்பனுடைய மாதிரிகைகளைச் சாதாரணமாய்ப் பின்பற்றும். “ தந்தை எப்படியோ மைந்தன் அப்படியே ” என்ற பிரபலிய முதுமொழி ருசுவாக்கப்படும்.

தாய் தந்தைகளே, உங்கள் குடும்பத்தில் பத்தியானது மென்மேலும் அதிகரிக்கும்படி செய்ய மிகுந்த ஜாக்கிரதையுடன் விசாரித்துக்கொண்டு, உங்கள் வாசஸ்தலத்தை நசரேத் வீட்டின் சாயலாக்கி, அங்கே, பத்தி, பிறர் சிநேகம், உத்தம நன்மாதிரிகை முதலியவை விளங்கச் செய்யுங்கள். பிள்ளைகளுக்கு இடறலாகி, அவர்களாத்துமத்தை கேட்டுக்குள்ளாக்கக்கூடிய வார்த்தைகள், சம்பாஷணைகள், கிரிகைகளை விலக்கி நீக்கிவிடுங்கள். அவர்கள்முன்பாக நல்ல கிறீஸ்துவர்களாய்த் துலங்கி நன்மாதிரிகை காண்பித்தால், உங்கள் சுகிர்தமாதிரிகையைக் கண்டுபாவிப்பார்கள்; தாங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது தங்கள் சரீரத்தின் கெட்ட ஆசாபாசத்தில் அமிழ்ந்திருக்கிறதற்காகவல்ல, இவ்வுலக ஆஸ்திபாஸ்திக்காகவும், அழிந்துபோகிற மகிமை கீர்த்திக்காகவுமல்ல, சர்வேசுரனுடைய மகிமைக்காகவும், தங்கள் ஆத்தும ஈடேற்றத்திற்காகவும், பரலோக பேரின்ப பாக்கியத்துக்காகவுமே யென்று சரியாய் அறிந்துகொள்வார்கள்.

ஓர் அர்ச்சியசிஷ்டவருக்கு பேருபகாரமாக, ஒருநாள் சர்வேசுரன் திறக்கப்பட்ட நரகத்தை அவருக்கு காண்பிக்க, நெருப்புச் சுவாலை

மத்தியில், ஒரு தகப்பனும் ஒரு மகனும், ஒருவரொருவரைச் சபித்துக்கொள்ளுகிற சப்தத்தை அவர் கேட்டார். தகப்பன் சொன்னதாவது : "நிர்ப்பாக்கியனே, உனக்குச் சாபம், எனக்குப் பொல்லாப்பு வர நீயே காரணம்; ஏனென்றால் உன்னை ஐசுவரியனாக்கும்படி நான் அநீதங்களைக் கட்டிக்கொண்டேன். இதனால் ஆக்கினைப்படுகிறேன்." மகன் பதில் உரைத்ததாவது : "சபிக்கப்பட்டவனே, என் ஆத்தும இரட்சண்யத்துக்காக நீ உழைக்கவேயில்லை; உன்னுடைய துர்மாதிரிகை என்னைக் கேட்டுக்குள்ளாகத் தூண்டினது. நித்தியகாலம் அக்கினி பாதாளத்துக்குள் அமிழ்த்தப்பட்டிருக்கிறேன்."

எத்தனையோ பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு நித்தியகாலம் நீளித்திருக்கும் திரவியங்களைத் தேடிக்கொடுக்காமல், தங்கள் அலுவல்களுக்கும் பிழைப்புக்கும் கதியாக இலௌகீக சம்பத்துக்களைக் குவித்து வைக்கிறதென்று நிர்ப்பாக்கியமாய் ஜீவிக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் மேற்சொன்ன வார்த்தைகளை நன்றாய்க் கண்டுபிடித்து முழுதும் மனந்திரும்புவார்களாக.

தோபியாஸ் தன் மகன் விஷயமாய் நடந்துகொண்டவிதம் எவ்வளவோ மேலானது. தன்னிடம் தன் மகனை அடிக்கடி வரச்செய்து கற்பித்ததாவது : "உன் தாயை நேசித்து மரியாதைசெய். பாவத்தைவிட்டு விலகு. சர்வே



சுரனுடைய கற்பனைகளை அனுசரி. உன்னாலானமட்டும் தருமஞ் செய். துஷ்ட தோழர்களுக்கும் மோகம் அகமியாகமனம் பண்ணுகிறவர்களுக்கும் அரோசிகம் அருவருப்புக் காட்டி ஓடிப்போ. அநீதக்கிரிகை ஒன்றாவது செய்யாதே கடைசியாய் உன் ஜீவிய நாட்களில் தினந்தோறும் சர்வேசுரனைச் சிநேகித்து ஊழியஞ் செய்." இந்தப் புத்திமதிகளுக்கு முடிவுரையாக சொன்னதாவது : **நாம் தரித்திரர்களாயிருப்பது மெய்தான். சர்வேசுரனுக்குப் பயந்து, பாவத்தை விலக்கி, புண்ணியத்தைச் செய்வோமானால், எப்போதும் தனவந்தர்களாயிருப்போம்.** (தோபியாஸ் 2-23). பிரான்ஸ் தேசத்து இராஜாவாகிய அர்ச். லூயிஸ் சிறுபிள்ளையாயிருக்கும்போது, அவர் தாயார், பிளான்ஷ் தே காஸ்தில் என்பவள் (Blanche de Castille) தன் மகனை நோக்கி, "அருமை மகனே, உன்னை எவ்வளவு உருக்கமாய்ச் சிநேகிக்கிறேனென்று உனக்கே தெரியும். ஆகிலும், நீ சாவானபாவத்தைக் கட்டிக்கொள்வதைப் பார்க்கிறதைவிட, நீ உயிர்விடுகிறதைப் பார்க்க அதிக ஆசையாயிருக்கிறேன்" என்றாள். இப்பேர்ப்பட்ட போதனையும், மாதிரிகையும் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கிற தாய் தகப்பன்மார்களே பாக்கியவான்கள்.

ஓர் குடும்பத்தில் உத்தம மாதிரிகை காண்பிக்க பெற்றோரின்மேல் கண்டிப்பான கடமை

சுமந்திருக்கிறதுபோல, ஒரு ஊரில் வயதில் மூத்தோர்கள்மேலும் அதிகாரஞ் செலுத்தக் கூடியவர்கள்மேலும் அதேமாதிரி கடன் சுமந்திருக்கிறது. மெய்யாகவே ஒரு ஊர் ஒரு குடும்பம்போலிருக்கிறது. ஊரில் தலைமைக்காரர், பிரதானிகள், குடும்பத்தின் பெற்றோர்களுக்கு பதிலாளிகளாயிருக்கிறார்கள். சில ஊர்களில் தலைமையாட்கள் தடுக்கப்படாத இராஜாங்க அதிகாரம் செலுத்தி வருகிறதால், சில இடங்களில் குடிகளுக்கு ஞான நன்மைகளை வருவிக்கிறார்கள். ஆனால், ஐயோ நிர்ப்பாக்கியம், வேறிடங்களில், திருச்சபை அதிகாரிகளை எதிர்க்கிறதற்கும், ஜனங்கள் கலகஞ்செய்ய ஏவுகிறதற்கும் தூண்டுகோலாயிருந்து, இதினால் ஊருக்குச் சாபத்தையும், ஆத்தும நாசத்தையும் விளைவிக்கிறார்கள். இப்படிப்பட்ட தலைவர்கள் தங்கள் நடத்தையைப்பற்றி சர்வேசுரனுக்குப் பயங்கரமான கணக்கு ஒப்புவிக்கவேண்டும். அநேக ஊர்களில், தேவ கிருபையால் மேற்சொன்ன துர்மாதிரிகைகளுக்கு இடமில்லாதபோனாலும், வயதாளிகள், செல்வாக்குள்ளவர்கள் வேத கடமைகளை அனுசரிக்காமல், ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்காமல், தேவதிரவிய அநுமானங்களை அடிக்கடி பெற்றுக்கொள்ளாமல், ஈடேற்றத்தின்மேல் கவலையில்லாமல் ஜீவிக்கிறதை அடிக்கடி காணலாம். மூப்பானவர்களும் அதிகாரிகளும் வேத கடமைகளை அலட்சியம்



பண்ணினால், அவர்களை ஓயாமல் கண்ணாற் பார்க்கிற வாலிபர்களும் பிள்ளைகளும் என்ன செய்வார்கள்? இவர்களும் வயதாளிகளைக் கண்டுபாவித்து, பற்பலதரம் கேடுகள் விளைவிக்கிற அசமந்தத்தில் விழுவார்கள். இப்படியான வேதானுசாரக் குறைவு சில ஊர்களில் நிர்ப்பாக்கியமாய் நிலைநிற்கிறது. இதினால் பங்கு சுவாமிமார்களின் ஊக்கமான முயற்சிகள் வியர்த்தமாகி, அநேக ஆத்துமங்கள் நித்தியமாய் நரகத்தில் தள்ளப்பட காரணமாயிருக்கிறதைக் கஸ்தியுடன் கண்டுவருகிறோம்.

ஊரில் தலைமையும் செல்வாக்குமுள்ள கிறீஸ்துவர்கள் சர்வேசுரனால் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறவர்கள் இரட்சணியமடையும்படியாய், குருமார்களோடு சேர்ந்து முயற்சியெடுக்கவேண்டும் இல்லாதபோனால் கண்டிப்பான கணக்கு செலுத்தவேண்டியதாயிருக்கும். இவர்களுடைய கருத்தைப் பிரகாசிப்பித்து, மனதையும் சீராக்கி ஸ்திரப்படுத்த சேசுவின் திரு இருதயம் தயை புரிவாராக.

## V. தங்கள் பிள்ளைகளிடமாய் வருங்கால கிறீஸ்துவர்களை ஆயத்தம்பண்ணுகிறது.

சர்வேசுரன் நாமெல்லோரும் மோட்சகரை சேரும்படி நம்மைச் சிருஷ்டித்திருக்கிறார். ஆனால் அந்த மோட்சகரை சேர, நம்மெல்லோரையும் ஒரே ஒரு பாதை வழியாய் மாத்திரம் நடத்திக்கொண்டுபோகிறதில்லை. கிறீஸ்து

வர்களில் பெரும்பாகமானவர்கள் பின்தொடர்கிற சாதாரண வழி ஒன்று. சுவிசேஷ போதனைகளடங்கிய புண்ணிய சாங்கோபாங்க வழி வேறொன்று. குடும்பத்தின் தாய்தந்தைகளே, உங்கள் குமாரன் சாதாரண வழியான கல்யாண அந்தஸ்தில் நிலைநிற்கவேண்டுமானால், புண்ணியங்களாலும், நற்குணத்தாலும், குடும்ப ஸ்திதியினாலும் சரியான விதமாய்ப் பொருந்தக்கூடிய ஓர் வாலிபப் பெண்ணைத் தெரிந்துகொள்ளுங்கள். அநேக பெற்றோர்கள் தங்கள் அதிகார சுதந்தரத்தைக் கொடுங்கோன்மையாய் விபரீதப்படுத்துவதுபோல நீங்களும் செய்யாமல். கல்யாணத்துக்கு முந்தி உங்கள் பிள்ளைகளோடு ஆலோசனை செய்யுங்கள். நீங்கள் ஒரு பெண்ணைத் தெரிந்தெடுத்திருக்கிறதாக சொல்லலாமொழிய, ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தாதேயுங்கள். அப்பெண்ணைப்பற்றி அவர்களுக்குப் போதுமானமட்டும் விளக்கிக் காண்பித்தபிறகு, சம்மதத்துக்கு உடன்படும்படியாக, பயத்தாலும் மிரட்டுதலாலும் பலவந்தம்பண்ணாதேயுங்கள். சந்தேகமின்றி பிள்ளைகள், தங்கள் பெற்றோர்கள் செய்த நியமகத்தை மறுக்கிறதற்கு சரியான முகாந்தரங்களில்லையானால், அதற்கு இணங்கி ஏற்றுக்கொள்ளக்கடவார்கள். மறுதலிக்கிறதோ அல்லது சம்மதிக்கிறதோ, அந்தத் தீர்மானம் பிள்ளைகளின் மன சுவாதீனத்தில் விட்டுவிடவேண்டியது. பிள்ளைகளுக்கு



ஏற்காத கல்யாணத்தைக் கட்டாயமாய் முடித்தால், அவர்கள் ஜீவிய முழுதும் நிர்ப்பாக்கியத்துக்கிடமாக்குகிறதுமன்றி, பெருந் துர்மாதிரிகைகளுக்கு ஆயத்தம் பண்ணுகிறீர்களென்று நீங்களே அநேகமாய் அனுபவத்தால் அறிந்திருக்கலாம்.

சாதாரண வழியைக்குறித்து இவ்வளவு சொன்னது போதும். இதைவிட அதிக உத்தமமான வேறொரு வழி உண்டென்று சொன்னோம். நம்முடைய இரட்சண்யத்துக்காக நாம் அநுதினம் அநுசரிக்கவேண்டிய கற்பனைகளைத்தவிர, கிறீஸ்துவ உத்தமதனத்தில் உயர்ந்திருக்கிறதற்கேதுவான சுவிசேஷப் போதனைகளை, தேவவரப்பிரசாத உதவியால் அனுசரிக்க தைரியமுள்ளவர்களுக்கு, நமதாண்டவர் கூட்டிச் சேர்த்திருக்கிறார். அதாவது: சந்நியாச அந்தஸ்திலாவது குருப்பிரசாத அந்தஸ்திலாவது பிரவேசித்து விசேஷ விதமாய் திருப்பணிவிடை புரிய சில கிறீஸ்துவர்களைத் தெரிந்தெடுக்கிறார்.

சன்னியாச ஜீவியமென்னவென்றால்: அதில் சேருகிறவர்கள் பத்தி நிறைந்த ஒழுங்குகளை அனுசரித்து, தரித்திரம், கற்பு, கீழ்ப்படிதல் என்கிற புண்ணியங்களை அனுசரித்து, தங்கள் இரட்சண்யத்தை இதினால் நிச்சயமாயடையவும், சர்வேசுரனுடைய ஸ்தோத்திரத்துக்கும், ஆத்துமங்களின் நன்மைக்கும் வெகு பிரயோசனமாயிருக்கிறதற்கும், வார்த்தைப்பாடுகள்

கொடுத்து கட்டுப்பட்டிருக்கிறார்கள். குருப் பிரசாத அந்தஸ்து என்னவென்றால், அதில் சேருகிறவர்கள் குருத்துவமென்கிற தேவதிரவிய அநுமானம்பெற்று பலிபூசைப் பீடத்தில் திருப்பணிபுரிய தங்களை வசீகரம்பண்ணு கிறார்கள்.

விவாக அந்தஸ்தைவிட இவ்விருவித அந்தஸ்து மிகவும் உன்னதமானது. மெய்யாகவே, சந்நியாச அந்தஸ்துக்கு அழைக்கப் பட்டவர்கள் இப்பிரபஞ்சத்துக்கு மேலான விதமாய் உயர்த்தப்பட்டு, சுவிசேஷ போதனைகளையும், சர்வேசுரனைச் சார்ந்த கடமைகளையும் அநுதினம் அப்பியாசப்படுத்துவதினால் புண்ணிய சாங்கோபாங்கத்தில் நிலைநின்று, தங்களுடைய புத்தியறிவையும், சத்துவத்தையும், ஜீவியத்தையுமே, சர்வேசுரனுடைய ஸ்தோத்திரத்துக்கும், புறத்தியார்களின் ஆத்தும நன்மைக்குமாக உழைக்க ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். குருப்பிரசாத அந்தஸ்துக்கு அழைக்கப்பட்டவர்கள், தேவவரப்பிரசாதங்களைப் பகிர்ந்து கொடுக்கிறவர்களாய் சேசுக்கிறிஸ்துநாதருடைய பதிலாளிகளாயிருக்கிறார்கள். இன்னும் அதிகமாய், வேறொரு சேசுக்கிறிஸ்துநாதரென்றே சொல்லலாம். அவர்கள் சர்வேசுரனை விசேஷமாய் ஸ்துதித்து ஸ்தோத்தரிக்கிறதற்கும், மற்றவர்களும் சர்வேசுரனை அறிந்து சேவித்து சிநேகிக்கும்படியாய்ச் செய்யவும், அவர்கள் ஜீவிய



முழுதும் விசேஷமாய் ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஓ எவ்வளவு உன்னதமான தேவ அழைத்தல்! இந்த சந்நியாச அந்தஸ்தைப்பற்றியும், குருப் பிரசாத அந்தஸ்தைப்பற்றியும், போதுமான மட்டும் மதித்து அதிசயித்து புகழ்ந்தேற்ற யாரால் முடியும்? இந்த அந்தஸ்துகளுக்கு அழைக்கப்படுகிறவர்களுக்கு எவ்வளவோ மகிமை, எவ்வளவோ நன்மை உபகாரம்! அவர்கள் குடும்பத்தாருக்கு எவ்வளவோ ஆறுதல், ஆசீர்வாதம்! பழைய ஏற்பாட்டில் ஆரோன் குடும்பந்தான் சர்வேசுரனுக்கு குருப்பிரசாதிகளைச் சேகரித்துக் கொடுக்கிற ஏக குடும்பமாயிருந்தது. இப்பேர்ப்பட்ட மகிமையைப்பற்றி சிலாக்கியமாயிருக்க நியாயமுண்டு. சேசுக்கிறீஸ்துநாதர் இந்த விசேஷ சுதந்தரத்தை அதிகமாய் விரிவாக்கி, ஒவ்வொரு குடும்பத்தாரும் திருச்சபைக்கு குருப்பிரசாதிகள், சந்நியாசிகள்,கன்னியாஸ்திரிகளை ஒப்புக்கொடுத்து பாக்கியமடையும்படியாக சித்தமானார். ஆனபடியால் கிறீஸ்துவ பெற்றோர்களே! குருப் பட்டத்துக்கு அல்லது சந்நியாச அந்தஸ்துக்கு உங்கள் பிள்ளைகளில் யாரையாவது சர்வேசுரன் தெரிந்துகொள்வாரானால் நீங்கள் பாக்கியவான்கள். பிள்ளைகளைப் பக்தியிலும் பரிசுத்ததனத்திலும் தேவசிநேகத்திலும் வளர்த்து வருவீர்களானால், தேவ அழைத்தல் கிடைக்கும்படி நீங்களே உதவி செய்கிறீர்கள். உங்

கள் பிள்ளைகளிலொருவனை விட்டுப் பிரியும்போது உங்களுக்கு சகிக்கமுடியாத கஸ்தி வருத்தமுண்டென்பதும், கண்ணீர் சிந்தி அழுகிறதும் சுபாவமான விஷயம். உங்கள் வேலையைத் தொடர்ந்து நடத்த உங்கள் குடும்பத்தை நிலைநிறுத்த அந்தப் பிள்ளைமேல் நீங்கள் ஊன்றிவைத்த நம்பிக்கையும், பிற்கால கருத்தும் ஒழிந்துபோகிறதைப் பார்க்கிறீர்களென்பதும் நிசந்தான். சுபாவ உணர்ச்சிக்கு மேலாக உங்கள் விசுவாசத்தால் உங்கள் சிந்தனையை உயர்த்திக்கொள்ளப்பாருங்கள். பரலோகபிதா, தமது ஏக சுதனை இந்த உலகத்துக்கு அனுப்பி உலக இரட்சண்யத்துக்காக அவர் சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்தாரல்லவா? அர்ச். கன்னிமரியாயிக்கு அவளது திருக்குமாரனே ஏக சந்தோஷமும் பாக்கியமுமாயிருக்க, அவருடைய தேவ அப்போஸ்தலத்துவம் நிறைவேற்ற நேரம் வந்தவுடன் மனுக்குல இரட்சிப்புக்காக அவனைத் தமது பரம பிதாவுக்குத் தாராளமாய் ஒப்புக்கொடுத்தாள்.

இந்த சுகிர்த மாதிரிகைகளைப் பின்பற்றுங்கள்; தேவ அழைத்தல் உண்டென்று நிச்சயமாயறிந்தபிற்பாடு ஒருபோதும் அதற்கு எதிர்த்து நிற்காதேயுங்கள்; சர்வேசுரன் உங்கள் பிள்ளைகளுக்கு கர்த்தாவாயிருக்கிறார். பிள்ளைகள் உங்களுக்குச் சொந்தமாயிருக்கிறதைவிட அவருக்கல்லோ அதிக உரிததான



சொந்தம். உதாரகுணத்தோடு உங்கள் பிள்ளைகளைப் பரித்தியாகம் செய்வீர்களானால், ஆயிரமடங்குக்கு மேலாக உங்களுக்குச் சம்பாவனை அளிப்பார். உங்கள் பிள்ளைகள் சந்நியாச அந்தஸ்துக்காவது குருப்பட்டத்துக்காவது ஏற்பட்ட வரப்பிரசாதத்தைக் கொடுமையாய் தடுப்பீர்களானால், அவர்களே இவ்வுலகில் நிர்ப்பாக்கியமாய் ஜீவிக்க இதினால் வழிபண்ணுவீர்களானால், அவர்களுடைய ஆத்துமமும் அவர்களால் மோட்சகரை சேரவேண்டிய ஆத்துமங்களும் இரட்சண்யமடையாத அபாயத்திலிருக்க காரணமாயும் நீங்களிருக்கிறதினால், உங்களைக் கொடூரமாய் தண்டிப்பாரென்பது திண்ணம்.

6-ம் அதிகாரம்.

## அர்ச். பாப்பானவர், மேற்றிராணிமார், குருக்கள்மட்டில் கிறீஸ்துவர்களுக்குள்ள கடமைகள்.

வேத அறிவீனத்தின் முகாந்தரத்தால், அனேகானேக கிறீஸ்துவர்களுக்கு அசமந்தமும், தப்பான எண்ணங்களும் விசுவாசக் குறைவும் உண்டாகிறது. இதினால் அவர்கள் திருச்சபை அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியாமல் அவர்களை எதிர்த்து குழப்பமுண்டாக்கி நித்திய கேட்டுக்குள்ளாகக்கூடும். ஆகையால் திருச்சபை அதிகாரிகளாகிற அர்ச். பாப்பானவருக்கும், மேற்றிராணிமாருக்கும், குருக்களுக்கும், சர்வேசுரனே அதிகாரம் அளித்திருக்கிறாரென்றும், அவர்களைச் சாதாரண மனிதர்களென்றெண்ணாமல், சேசுக் கிறீஸ்துநாதரின் மெய்யான ஸ்தானாபதிகளென்றும், இன்னும் அவர்கள் சேசுக்கிறீஸ்துநாதர்போல என்றும் இதினால் அவர்களைச் சங்கிக்க கடமையுண்டென்றும் விளக்கிக்



காண்பிக்கிறது ஆத்துமத்துக்கு பிரயோசனமாயிருக்கும்.

1. **அர்ச். பாப்பானவர்.**—அர்ச். தமதிரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரன் நமது மேலுள்ள சிநேகத்தால் அவதரித்து, இந்த உலகத்தில் இறங்கி வந்து, தம்முடைய திருச்சபையை ஸ்தாபித்து உலக முடியுமட்டும் மனிதர்களுக்கு இரட்சண்ய ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகிலும் நமதாண்டவர் இப்பூமியில் 33-வருஷம் உயிரோடிருந்ததுபோல, பிரத்தியக்ஷவிதமாய் ஜீவித்திருக்கத் தேவையில்லாததால் அர்ச். இராயப்பரையும், அவருக்குப் பதிலாய் வருபவர்களையும் தமது ஸ்தானாபதியாகத் தெரிந்துகொண்டு, அவரைத் தமது திருச்சபைக்குத் தலைமையாகவும், பிரதான குருவாகவும் நியமித்தார். அவர்களுக்குத் தமது ஞான ஆளுகையையும் உன்னதமும் தெய்வீகமுமான அதிகாரத்தையும், உலகத்துக்குப் போதிப்பதில் தவறா வரத்தையும் பூரணமாயளித்து, பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களையும் கையில் கொடுத்தருளினார். உலக எத்திசையிலுமுள்ள கிறீஸ்துவர்கள் அவர்கள் கட்டளைக்கும் போதனைக்கும் கீழ்ப்படிந்து நடக்கக் கற்பித்து, மீறினால் நித்திய ஆக்கினை என்று நிர்ணயித்திருக்கிறார்.

சேசுநாதருடைய பிரதிநிதியாகிய அர்ச். பாப்பானவர் திருச்சபையின் பிரத்தியக்ஷ

தல்லவர் ; அர்ச். இராயப்பருக்கு பதிலாளி. இவர் நமதாண்டவருக்குரித்தான சர்வ ஞான அதிகாரத்தை உடைத்தாயிருக்கிறார். சேசுக் கிறீஸ்துநாதர், பாப்பானவர், திருச்சபை, என்றால் ஒரே ஒரு சரிசமான உயிர். இப் பூமியில் ஆண்டு ஆண்டுகளாய்த் தொடர்ந்து திருச்சபையை நடத்துகிறவர் சேசுநாதர் சுவாமிதான். அவர்தான் உலக முடிவுபரியந் தம் தமது திருச்சபையில் தங்கியிருந்து ஆத்தும இரட்சண்ய அலுவல்களை நிறைவேற்றி வருகிறார். ஆகையால் அர்ச். பாப்பானவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் நமதாண்டவராகிய சேசுநாதசுவாமிக்குக் கீழ்ப்படிகிறார்கள். அவரை எதிர்க்கிறவர்கள் சேசுநாதசுவாமியை எதிர்க்கிறார்கள். அர்ச். பாப்பானவரை விட்டுப் பிரிகிறவர்கள் சேசுநாதசுவாமியை விட்டுப் பிரிகிறார்கள் ; நித்திய சாபத்துக்குள்ளாகிறார்கள். அவருக்குப் புறம்பே இரட்சண்யமேயில்லை.

நமதாண்டவர், திருச்சபையை ஆளுகை செய்வதின்மேலும், தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றுவதின்மேலும் அர்ச். இராயப்பருக்கும் அப்போஸ்தலர்களுக்கும் பிரதான குறிப்புகளைக் கற்றுக்கொடுத்து திட்டப்படுத்தின பிறகு பரலோகத்துக்கு ஆரோகணமானார். அதற்குப்பின் பத்தாம் நாள் அர்ச். கன்னி மரியம்மாளும் அப்போஸ்தலர்களும் அசனசாலையில் கூடியிருந்த சமயத்தில்,



திவ்விய இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக் கொண்டார்கள். உடனே அர்ச். இராயப்பர் முதல் பாப்பானவராக அச்சாலையைவிட்டுப் புறப்பட்டு, புதிய ஏற்பாட்டுச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே, திரளான ஜனங்கள் திருச்சபையில் உட்பட்டு, ஈடேற்ற வழியைக் கைக்கொண்டார்கள்.

நமதாண்டவர் இருபது நூற்றாண்டுகளாக அர்ச். இராயப்பரின் பதிலாளியான பாப்புமார்களால் இவ்வுலகத்தில், இந்த அப்போஸ்தலத்துவத்தைத் தொடர்ந்து நடத்திவருகிறார். உரோமாபுரியில் பாப்புமார்கள் ஒருவரொருவரைப் பின்தொடர்ந்து, வெவ்வேறு நாமங்களைச் சூட்டிக்கொள்வார்களேயொழிய பாப்பானவர் மாறுகிறதில்லை. எக்காலமும் அவர் சேசுநாதரின் ஸ்தானாபதியாய் உள்ளபடியே சேசுக்கிறீஸ்துநாதராகவே யிருக்க, அவரே மேற்றிராணிமார்களையும், குருக்களையும், கிறீஸ்துவர்களையும் இரட்சண்ய பாதையில் நடப்பித்து வருகிறார். ஒரே ஒரு சர்வேசுரன், ஒரே ஒரு சேசுநாதரிருக்கிறதுபோல, ஒரே ஒரு பாப்பானவர், ஒரே ஒரு திருச்சபையுண்டு. அந்தத் திருச்சபை சேசுநாதர்மேலும், அர்ச். இராயப்பர் மேலும் அவரைப் பின்தொடர்ந்து வருபவர்கள்மேலும் ஊன்றி நிற்கிற கத்தோலிக் திருச்சபை ஒன்றுதான். பிரிவினைமதங்கள் தங்களைச் சேசுநாதரின் திருச்சபையுடைய **கிளைகள்** என்று சொல்

விக்கொள்வது வீண். பாப்பானவரினின்று பிரிக்கப்பட்டால், சேசுநாதர் இடத்தினின்று பிரிக்கலாயிற்று. அடிமரத்திலிருந்து தறிக்கப்பட்ட கிளைக்கு சாரமுமில்லை, உயிருமில்லை; பட்ட மரக்கிளையாம். "இவ்வுலகத்தில் சேசுநாதரின் திருச்சபையைத் தாயாராக ஏற்றுக்கொள்ளாதவர்களுக்குப் பரலோகத்தில் சர்வேசுரன் தந்தையாயிருக்கமாட்டார்" என்று அர்ச். சிப்பிரியான் வாக்குரைத்திருக்கிறார்.

இப்படியிருக்க, அர்ச். பாப்பானவரைவிட்டு அகன்றுபோன பிரிவினை மதக்காரரைப்பற்றி என்ன நினைக்கவேண்டும்? சேசுக்கிறீஸ்துநாதரின் ஸ்தானாபதியான அர்ச். பாப்பானவரின் கட்டளைகளையும் ஏவல்களையும் மீறத்துணிகிற கெட்ட கிறீஸ்துவர்களைப்பற்றி நாம் என்ன சொல்வோம்? இவர்கள் மற்ற கிறீஸ்துவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கு முன்பாக எவ்வளவோ பெரிய துன்மாதிரிகை காண்பிக்கிறார்கள்! எவ்வளவோ பயங்கரத்துக்குரிய கணக்குச் சர்வேசுரனுக்கு ஒப்புவிக்கப்போகிறார்கள்!

2. நமது ஆண்டவராகிய சேசுநாதர்சுவாமி அர்ச். பாப்பானவீருக்குக் கீழாக மேற்றிராணிமார்களை ஏற்படுத்தி, இவர்கள் பாப்புமார்களின் உன்னத அதிகாரத்துக்குப் பங்காளிகளாயிருக்கவும், அவருடைய மேற்பார்வையில், தங்களுக்குட்பட்டிருக்கிற தனித்தனிக் கோவில்களை ஆண்டு நடத்தவும் நிரூபித்திருக்கிறார்.



சேசுநாதர்சுவாமி அர்ச். பாப்பானவரிடத்தில் சர்வமாயிருப்பதுபோல, மேற்றிராணியாரிடத்திலும் சர்வமாயிருக்கிறார். மேற்றிராணியாரைக்கொண்டு கிறீஸ்துவர்களுக்கு சேசுநாதர்சுவாமி நல்ல ஆயனாயிருக்கிறார். அவர்தான் மேற்றிராணியார் மூலமாய் அவருடைய விசாரணைக்குள்ளடங்கிய பற்பல பாகத்திலுள்ள கிறீஸ்துவர்களுக்குப் போதித்து, நியாயந் தீர்த்து, அரசாட்சி செய்து, இவ்விதமாய்ச் சத்தியத்திலும் பரிசுத்தத்திலும் அவர்களை நிலைநிறுத்திக் காப்பாற்றிவருகிறார். ஆகையால் உங்கள் சுபாவக் கண்களுக்கு மேலாக விசுவாசக்கண்ணை உயர்த்தி, மேற்றிராணியாரிடத்தில் சேசுநாதரையும் அவருடைய தேவத்துவ அதிகாரத்தையும் பார்த்து, நமதாண்டவருக்குக் கீழ்ப்படிவதற்குச் சமானமாய் மேற்றிராணியாருக்கும் பிரமாணிக்கமாய்க் கீழ்ப்படியக் கற்றுக்கொள்வீர்களாக.

3. அர்ச். பாப்பானவருக்கும் மேற்றிராணிமார்களுக்கும் கீழ், நமதாண்டவர் குருப்பிரசாதிகளை ஸ்தாபித்திருக்கிறார். மேற்றிராணியார் அளிக்கிற குருப்பட்டத்தால் சேசுநாதர்சுவாமியே, குருக்களுக்குத் தம்முடைய குருத்தத்துவத்தைப் பங்கிட்டுக் கொடுத்து அவர்கள் குருவாகும்படி செய்கிறார். குருக்கள் வழியாய் சேசுக்கிறீஸ்துநாதரே கிறீஸ்துவர்களுக்குப் போதித்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். சேசுக்கிறீஸ்துநாதரே குருக்கள்வழி

யாய்ப், பாவங்களை மன்னித்து, தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றி அவர்களை மோட்சத்துக்கு நடத்திக்கொண்டுபோகிறார்.

இராஜாவின் ஓர் கட்டளையால், ஒவ்வொரு பங்கு சுவாமியாரும் நகரத்து அதிகாரியாக ஏற்படுத்தப்பட்டு, அவர் உத்தியோகங்கள் நியமிக்கவும், பண அபராதம் விதிக்கவும், போலீஸ்காரர்களைக்கொண்டு குற்றவாளிகளை அடக்கவும், சிறைச்சாலையில் அடைக்கவும், சர்வ அதிகாரத்தைக்கொண்டிருக்கிறானென்று வைத்துக்கொள்வோம். அப்படியானால், குருக்கள்மட்டில் பூரண சங்கையும் சிரவணமும் காண்பிப்பீர்களல்லவா? ஆகிலும் சேசுநாதசுவாமியுடைய ஸ்தானத்திலிருக்கிற ஓர் குருவானவரின் அதிகாரத்திலிருக்கும் மேற்சொன்ன உத்தியோகஸ்தரின் அதிகாரத்துக்கும் நிகருண்டோ? இவ்வுலகத்திலுள்ள சிறைச்சாலைகளுக்கு ஆயிரம்பங்கு அதிக பயங்கரத்துக்குரிய நரகபாதாள காவற்கூடத்துக்குப் போகாதபடி உங்களை ஒரே ஒரு வார்த்தையால் விடுதலையாக்குபவர் குருவானவரல்லவா? ஆம், மெய்யாகவே, இவ்வுலகில் மிகவும் வல்லபமுள்ள நீதி கர்த்தாக்களைவிட, அதிமிகச் செல்வாக்குள்ள அரசர்களைவிட, குருப்பிரசாதிகள் மேன்மையுள்ளவர்கள். அர்ச். அமிர்தநாதர் எழுதிவைத்திருக்கிறதாவது: "சாதாரண லோகங்களைவிட பொன் தங்கம் எவ்வளவுக்கு விலையுயர்ந்ததோ, அவ்வளவுக்கு குருக்



களின் கீர்த்தி மகிமை இராஜாக்களின் பெருமையைவிட அதிக விலையுயர்ந்தது."

ஆகையால், உங்கள் விசுவாசக்கண்ணைத் திறந்து, குருவானவரின் மாட்சிமை மகத்துவத்தைக் கண்டுபிடித்து, இனிமேலாக அவருக்குரிய சங்கை சிரவணம் செலுத்துவீர்களாக.

பழைய ஏற்பாட்டில், குருப்பிரசாதிகளுக்குச் சங்கை மரியாதை செலுத்தாமலும், கீழ்ப்படியாமலுமிருக்கிறவர்களுக்குச் சர்வேசுரன் மரண தண்டனையிட்டார். புதிய ஏற்பாட்டில் குருக்களுக்கு விரோதமாய் அவசங்கை காண்பிப்பவர்களுக்கும் கீழ்ப்படியாதவர்களுக்கும் மரண தண்டனையில்லையென்பது மெய்தான். ஆனால் நமதாண்டவர், அவர்களைக் கொடூர நித்திய நரகாக்கினைக்கு நிறுத்திவைக்கிறார்.

சேசுநாதர்சுவாமி தமது ஸ்தானாபதிகளான குருக்களுக்குக் காண்பிக்கிற **மரீயாதையோ** அல்லது **அவசங்கையோ** தமக்கென்றே எடுத்துக்கொள்ளுகிறார். "உங்களுக்குக் காது கொடுக்கிறவர்கள் எனக்குக் காது கொடுக்கிறார்கள். உங்களைப் பிறக்கணிக்கிறவர்கள் என்னைப் பிறக்கணிக்கிறார்கள்" (லூக்காஸ் X-16). இதைப்பற்றி அர்ச். எரோணிமுஸ் சொல்வதைக் கேளுங்கள்: "அப்போஸ்தலர்களலுவல்களைச் செய்யவும், சேசுக்கிறீஸ்துவின் விலைமதிக்கப்படாத சரீரத்தை வசீகரம்

பண்ணவும், உன்னத மகிமை அதிகாரத்தைக் கொண்டிருக்கிற குருக்களுக்கு விரோதமாய் ஒரு வார்த்தையும் நான் வாய்தவறிப் பேசாதபடி சுவாமி இரட்சிக்க!" இனிமேலாக சேசுநாதசுவாமியுடைய ஸ்தானாதிபதியாக மதித்து அவருக்குச் செய்வதுபோல குருவானவருக்கு மரியாதையும் கீழ்ப்படிதலும் காண்பியுங்கள். மேலும் குருவானவரை உங்கள் ஆத்தும பிதாவாகவும், ஓர் பெரிய பரோபகாரியாகவும் அங்கீகரித்து அவரைச் சிநேகியுங்கள். ஏனெனில் குருவானவர் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததால், நீங்கள் சர்வேசுரனுடைய பிள்ளைகளானீர்கள். உங்களை விசாரித்துக் கண்காணித்து உங்கள் ஆத்துமங்களில் தெய்வீக ஜீவியத்தைக் காப்பாற்றி வருகிறவர் குருவானவர்தான். மற்றவர்களோ உங்களைக் கைவிட்டு, உங்களுக்குச் சதிதுரோகம் பண்ணக்கூடும். குருவானவரோவெனில் உங்கள் ஆவிபிரியும் கடைசி நிமிஷமட்டும் உங்களைக் கைவிடாமல், உங்கள் ஆத்துமத்துக்கு சததமான நித்திய பாக்கியத்தை உறுதிப்படுத்தி உங்கள் சரீரத்தையும் கல்லறையில் அடக்கஞ் செய்கிறார். உங்கள் வாழ்நாட்களில் குருவானவர் உங்களுக்குச் செய்த சகலவித நன்மைகளையும், நீங்கள் அவருக்குக் கைமாறாகச் செய்யவேண்டிய பிரதியையும் மறுமையில்தான் சம்பூரணமாயறியக்கூடும். அவர் உங்களைப் பலவந்தமாய்ச் சீர்திருத்துவாரானால் உங்கள் நன்மையைக் கோரியே அவ்வாறு செய்வார். உங்களை விசாரித்து நடத்தவும், சத்திய திருச்சபையின் சட்டங்களை உங்களுக்குக் கற்பித்து, நீங்கள் அவைகளை அனுசரிக்கச் செய்யவும், அனுசரிக்கத் தவறியிருந்தால் நல்ல வழியில் திரும்பி மோட்சகரை சேரும்படி, வேண்டிய ஏற்பாடு செய்யவும் குருவானவர் கடமைப்பட்டிருக்கிறார். உங்கள் குற்றங்களைப் பாராமல் கண்ணை முழுதும் மூடிக்கொண்டிருக்கிறதும், உங்கள் மனம் போன போக்கில் நீங்கள் நடந்துகொள்ள விட்டுவிடுவதும், குருவானவருக்கு முழுதும் சுலபமான காரியம். ஆகிலும் அவரின் அசட்டைத்தனத்தாலும் மவுனத்தாலும், அவருடைய குற்றமுள்ள இரக்கத்தாலும் நீங்கள் நித்திய கேட்டுக்குள்ளாக அவர் விட்டுவிடுவாரானால், அவருக்கே சாவான பாவம். அவரோ சர்வேசுரனுக்குப் பயங்கரமான கணக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது.

சுருக்கத்தில் சொல்ல, அர்ச். பாப்பானவர், மேற்றிராணியார், குருக்கள் இவர்களிடம் நமதாண்டவரையே பார்க்கிறதாக, உங்கள் விசுவாசத்தைப் புதுப்பிக்கக்கடவீர்களாக. இந்த விசுவாசக் குறைவினால், சில கிறீஸ்துவர்கள் குருக்களைச் சாதாரணமான மனிதனாக எண்ணிக்கொண்டு, மிகவும் இலேசாய் அவர்களுக்கு விரோதமாய்ப் பேசி, அவர்கள் கட்டளைகளிலும் புத்திமதிகளிலும் குற்றம் கண்டுபிடித்து

ஆத்தும நன்மைக்காக அவர்கள் ஏற்படுத்துகிறவைகளுக்கு விக்கினஞ்செய்து, அவருக்கு எதிராளியாய் நின்று கலகஞ்செய்யத் துணிந்து, மற்றக் கிறீஸ்துவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்குமே வெகு இடறலாயிருக்கிறார்கள். உங்களுக்கு மெய்யான விசுவாசமிருக்குமானால், உங்கள் கருத்திலும் மனதிலும் சுலபமாய்ச் சிரவணமுண்டாகி, குருவானவரின் போதனைகளும் கட்டளைகளும் சேசுநாதரிடமேயிருந்து வருகிறதாக, அவைகளுக்குப் பணிந்து நடந்து, உங்கள் வேத ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்தக்கூடும்.

உங்களுக்கு ஸ்திரமான விசுவாசமிருக்குமானால், கெட்ட கிறீஸ்துவர்கள் உங்களுக்குத் துர்ஆலோசனை கொடுத்து, உங்களைக் கலகத்துக்கிழுத்து நித்திய கேட்டுக்குள்ளாக்கத் தேடும்போது நீங்கள் அவர்களை எதிர்க்கத் தைரியமுண்டாகும். லூசிப்பேரும் வேறு கெட்ட அரூபிகளும், சர்வேசுரனை எதிர்த்துக் கலகஞ் செய்தபோது, அதிதூதரான அர்ச். மிக்கேல் மற்ற நல்ல சம்மனசுகளை உதவிக்குச் சேர்த்துக்கொண்டு, தானே தலைமையாயிருந்து, கலகக்காரர்களுக்கு விரோதமாய்ச் சர்வேசுரன் பாரிசமாய்ச் சண்டை செய்தார். முடிவு என்னவென்றால், குழப்பஞ்செய்த அரூபிகள் நரகபாதாளத்தில் தள்ளப்பட்டார்கள். அர்ச். மிக்கேல் சம்மனசானவர், தன் பிரமாணிக்கத்துக்குப் பிரதி சம்பாவனையாக,



மோட்சத்தில், தூதர்கள் அதிதூதர்களுக்குத் தலைமையாக்கப்பட்டு, மகிமைப் பிரதாபத்தையடைந்தார்.

கீர்த்திபெற்ற வேதசாட்சிகளின் சரித்திரத்தை வாசியுங்கள். நிஷ்டூரர்களின் அக்கிரமமான துர்ப்போதனைகளுக்கு இணங்கினார்களோ? அவர்களின் அகோர மிரட்டுதலுக்கு அஞ்சினார்களோ? இல்லை. அவர்கள் பட்டபாடுகளிலே, சர்வேசுரனுக்கு விசுவாசப் பொறுமையைக் காண்பித்துத் தங்கள் ஜீவனையும் இரத்தத்தையும் பலியாக ஒப்புக்கொடுத்தார்கள். நீங்கள் வேதத்தில் பிரமாணிக்கமாயிருப்பதால் உங்களுக்கு நிர்ப்பந்தங்களும், இக்கட்டு இடைஞ்சல்களும் நேரிடக்கூடும். வேதசாட்சிகளிடத்தில் விளங்கின விசுவாசத்தின் மேலான மாதிரிகையைக் கண்டுபாவியுங்கள். அவர்களுக்குக் கிடைத்த சம்பாவனையிலும் பங்கு அடைவீர்கள்.

சிலவிசை, கெட்ட கிறீஸ்துவர்கள் தங்கள் பேச்சினாலும் ஆலோசனையினாலும், உங்களுக்குக் குருக்கள் மட்டிலுள்ள சங்கை மரியாதையையும், நம்பிக்கையையும் அழிக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். அவர்களுக்குக் காது கொடுக்காதேயுங்கள். நரகபாதாள சர்ப்பம் போல் உங்கள் ஆத்துமத்துக்கு மோசஞ்செய்வார்கள். அதெப்படியெனில், நரக பசாசானது சர்ப்ப ரூபம் எடுத்து, சிங்காரத் தோப்புக்கு வந்து, ஆதித்தாய் ஆதித்தகப்பனோடு இரண்

டகமான வார்த்தைகளைக்கொண்டு செய்த சம்பாஷணையாவது :— "ஜீவிய விருட்சத்தின் கனியை ஏன் சாப்பிடுகிறதில்லை?"

"சர்வேசுரன் விலக்கியிருக்கிறார். நாங்கள் புசிப்போமானால் சாவோம்."

"இல்லவே இல்லை—சாகவேமாட்டீர்கள், சர்வேசுரன் உங்களை ஏமாற்றிவிட்டார்." இவ்விதமாய் நரகசூளி தேவதூஷணம் கக்கத் துணிந்தது. ஆதாம் ஏவை என்பவர்கள் சர்வேசுரன் வார்த்தையைவிடப் பசாசின் வார்த்தையை அதிக நம்பிக்கையோடு கேட்டுச் சொல்லொண்ணாத பைத்தியத்தைக் காண்பித்து, விலக்கப்பட்ட கனியைத் தின்றதால், தங்களுக்கும் மனுக்குலத்தாருக்கும் சர்வ நாசத்தை வருவித்துப் பாழ்முடிவடையச் செய்தார்கள்.

இப்பேர்ப்பட்ட தண்டனையைப்பற்றித் தியானித்துக்கொண்டு,சாத்தானுக்கும் அதன் கூட்டாளிகளுக்கும் ஒருபோதும் காதுகொடுக்காமல், சர்வேசுரனுக்கும் அவருடைய குருக்களுக்கும் கீழ்ப்படியக் கெட்டியான பிரதிக்கினை செய்வீர்களாக.

இந்த அதிகாரத்தை முடிக்குமுன் இரண்டு விஷயங்களைக் குறித்தெடுத்து, அவைகளில் நல்ல கிறீஸ்துவர்கள் பாப்பானவருக்கும், மேற்றிராணிமார்களுக்கும், குருக்களுக்கும்



கீழ்ப்படிந்து, விசேஷ நன்மாதிரிகை காண்பிப்பது எப்படியென்று விவரிப்போம் :—

## 1. கலியாணம் குருவானவரால் ஆசீர்வதிக்கப்படுதல் :

கத்தோலிக்கர்களுடைய கலியாணம் மெய்யானதாயிருக்கத் தேவையான விஷயங்களைப் பற்றி, காலஞ்சென்ற மாட்சிமைதங்கிய 10-ம் பத்திநாதர் என்னும் பாப்பானவர் 1907-ஆல் பிரசித்தமான கட்டளை ஒன்று வெளிப்படுத்தியிருக்கிறார். அந்தக் கட்டளையின் 3-ம் பிரிவு என்னவெனில் :—"ஒரு பங்குசுவாமியாருக்குமுன்பாக, அல்லது, பங்கின் மேற்றிராணியாராண்டவருக்கு முன்பாக, அல்லது மேற்றிராணியாராலாவது பங்குசுவாமியாராலாவது பிரதிநிதியாகக் குறிக்கப்பட்ட வேறொரு குருவானவருக்கு முன்பாக இன்னும் இரண்டு சாட்சிகளுக்கு முன்பாக முடிக்கப்படுகிற கலியாணம் மாத்திரம் செல்லும்." அபாயமான சடுதி மரணத்துக் கேதுவாயிருக்கிறவர்களில், பங்கு சுவாமியாருக்குமுன்பாக, மேற்றிராணியாருக்கு முன்பாக அவர்களின் பிரதிநிதியான குருவானவருக்கு முன்பாக கலியாணமுடிக்கக்கூடாத விதமாய் அவர்களிடம் போகவோ, அவர்களை வரவழைக்கவோ இயலாத ஸ்திதியிலிருக்கிறவர்களை அர்ச். பாப்பானவர் இந்தக் கட்டளையினின்று விடுதலை செய்திருக்கிறார். மற்று

படி, மேற்சொன்ன கட்டளைக்கு விரோதமாக முடிக்கப்படுகிற கலியாணங்கள் செல்லவே செல்லாது.

இந்தக் கட்டளையிடுவதற்காக, அர்ச். பாப்பானவரின் கருத்தென்னவென்றால், மெய் விவாகமென்கிற தேவதிரவிய அநுமானத்தின் மகத்துவத்தைத் தற்காக்கவும், கத்தோலிக் குடும்பங்களில் வேத விசுவாசத்தை நிலைநிறுத்தி பாதுகாக்கவுந்தான். இதே கருத்துக்காக, திருச்சபை சில விஷயங்களைக் கலியாண விக்கினங்களாக ஏற்படுத்தி, பெலத்த முகாந்தரமின்றி, மேற்றிராணிமார்களும், குருக்களும் அவைகளிலே விடுதலை செய்யக் கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறது.

இப்படியிருந்தாலும், அறிவீனத்தாலே, விசுவாசக்குறையினாலே, கீழ்ப்படிதலின்மையினாலே, மூர்க்கமாய்ச் சிலர் சொல்லத் துணிகிறதென்னவென்றால்—"மேற்றிராணியாரும் குருவானவரும் என் கலியாணத்துக்குச் சில நிபந்தனைகள் கொடுக்கிறார்கள். விக்கினத்தை நீக்கி உத்தரவுதரப் பிரியமில்லை. இருக்கட்டும், அவ்வளவு கஷ்டங்களும் தடங்கல்களும் பண்ணுகிறபடியால், அவர்களை விட்டு அப்பாலே போய்விடுவேன். அஞ்ஞானியைப்போல கலியாணமுடிப்பேன். ரிஜிஸ்தராரிடம் போய் முடிப்பேன்."

இப்படி வீரியம்பேசி காரியத்தை நிறைவேற்றுகிற கெட்ட கிறீஸ்தவர்களும் உண்டு



அவர்களுக்கு ஐயோ, நிர்ப்பாக்கியம். தாங்களே குற்றமான கிரிகை செய்கிறார்கள். மற்றவர்களுக்கும் பகிரங்கமாய்த் துர்மாதிரிகை காண்பிக்கிறார்கள். அர்ச். பாப்பானவர் கட்டளைப்பிரகாரம், இந்த ஒப்பந்தம் ஒன்றுக்கு முதவாது. விவாகபந்தனமென்ற பேரோ இதுக்கு செல்லாது. தேவசமுகத்திலும் திருச்சபைக்கு முன்னும் இது ஓர் அயோக்கியமான விபசாரம். இரண்டுபேரும் குற்றவாளிகளாகவேயிருந்து ஒன்றித்து ஜீவிப்பார்களேயானால், பாவத்தின்மேல் பாவத்தைக் குவித்துவைத்து, தங்கள்மேலும் தங்கள் பிள்ளைகள்மேலும் தேவகோபாக்கினையை மென்மேலும் வருவித்துக்கொள்ளுகிறார்கள். சாவு தலைக்குமேல்! எப்போது தலைமேல் விழுகுமோ அறியோம். அப்படியானால், நீங்களே இதைப்பற்றிப் பயப்படுங்கள், மற்றவர்களும் இப்படிக் கலியாணம் நடத்தாதபடி முயற்சி செய்யுங்கள். இதினால் இம்மையிலும் மறுமையிலும் விளையும் நிர்ப்பாக்கியத்தைத் தடுப்பீர்களாக.

## ii. கோவில் சொத்துகளைப்பற்றி விசாரணை அதிகாரத்தின்மேல்: ..

நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தமது பிரதிநிதியாகிற அர்ச். பாப்பானவரைப் பொதுவாயிருக்கிற திருச்சபை முழுமைக்கும் தலைமையாகவும் விசாரணைக் கர்த்தாவாகவும்

ஸ்தாபித்திருக்கிறார். ஒவ்வொரு மேற்றிராசனத்திலும், சேசுநாதரின் பிரதிநிதியாக, ஒரு மேற்றிராணியார், அர்ச். பாப்பானவரின் அதிகாரத்துக்குள்ளடங்கி, விசுவாசிகளை இரட்சண்ய வழியில் நடப்பித்து, மேற்றிராசனக் கோவில்களைக் குருக்கள் உதவியைக்கொண்டு விசாரித்து வருகிறார். கடந்த அநேக வருஷ காலமாக இந்திய கத்தோலிக் மிஷனின் ஸ்திதியானது கோவில் சொத்துகளைத் திருச்சபை ஒழுங்குக்கேற்க விசாரணை செய்வதற்கு பெரிய விக்கினமாயிருந்தது. அதெவ்வாறெனில்: தென் இந்தியாவில் சுற்றியிருந்த பங்கு விசாரணைக் குருசுவாமிமார்கள் வெகு சொற்பப்பேர்கள். ஒவ்வொரு ஊரும் கோவிலும் அதிக தூரந்தொலையிருந்தன. ஆகையால், பங்கு சுவாமிமார்கள் கிறீஸ்துவர்களை அந்தந்த ஊர் கோவிலில் விசாரணை செய்யப் போவது அபூர்வந்தான். இப்படியிருக்க, கோவில் சொத்துகளைக் கண்காணித்து, வருமானங்களைத் திட்டம்பண்ணித் திருச்சபைச் சட்டத்தைக் கூடியமட்டும் அநுசரிக்க கிறீஸ்துவர்கள் கையில் அவைகள் விடப்பட்டிருந்தது; இந்த ஒழுங்கானது அக்காலத்துச் சந்தர்ப்பத்தால் அவசியமானதாயிருக்க, சொற்ப காலத்துக்கென்றே அங்கீகரிக்கப்பட்டுவந்தது.

ஆனால் அறிவீனரான கிறீஸ்துவர்கள் இக் கண்காணிப்பைச் சாதாரண ஒழுங்கென்று



நினைக்கப் பழக்கமாகி நாள் போகப்போக, கோவில்களையும் அதின் சொத்துகளையும் விசாரித்துவருவது கிறீஸ்துவர்களுக்குரியதான சுதந்தரமென்றும் எண்ணிக்கொள்ளுகிறார்கள். நம்முடைய நாட்களில் முதலாய், சில ஊர்களில் கிறீஸ்துவர்கள் திருச்சபை அதிகாரிகளைத் துணிகரமாய் விரோதித்துப் பிதற்றுகிறதென்னவென்றால்: "எங்கள் கோவில் எங்கள் பணத்தைக்கொண்டு எங்களால் கட்டப்பட்டது. ஆதலால் எங்களுக்குச் சொந்தம். ஆதலால் இந்தக் கோவில் சொத்துக்களை விசாரிக்கும் அதிகாரம் எங்களுக்கல்லோ, மேற்றிராணியாருக்கும், குருக்களுக்குமல்ல."

இப்படிப்பட்ட நடபடிக்கைத் திருச்சபைச் சட்டத்துக்கு விரோதம். பாப்புமார்களாலும், பொதுச் சங்கத்திலும், மேற்சொன்ன கோட்பாடு அநேகமுறை சபிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சாதாரண வீடு, கட்டினவனுக்குப் பாத்தியம் என்கிறதுபோல, ஒரு பொதுவான கோவிலை எண்ணக்கூடாது. கோவில் மெய்யாகவே 'சர்வேசுரன்' வீடு என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

ஓர் பொதுவான கோவில் மேற்றிராணியாரால், அல்லது ஒரு குருவானவரால் ஆசீர்வதித்து மந்திரிக்கப்பட்டுப் பிரசித்தமான ஆராதனை ஸ்தலமாகக் குறிக்கப்பட்ட அந்த

க்ஷணமே, அந்தக் கோவில் சர்வேசுரனுக்கே வசீகரம் பண்ணப்பட்டு அவருடைய வாசஸ்தலமாகிறது. கோவிலை மந்திரித்த க்ஷணமே, கோவில் சொத்தும், சொத்தை விசாரிக்கும் அதிகாரமும் சர்வேசுரனுக்குரியது. கோவில் சர்வேசுரனுக்கு ஓர் **சந்திப்பாக** ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் ஒரு பெரிய துரைக்கு விலையுயர்ந்த ஜாமான்களடங்கிய சந்திப்பு முஸ்திப்புச்செய்யும்போது அந்த ஜாமான்களை உங்கள் சொந்தப்பணத்தால் விலைக்கு வாங்குகிறீர்கள். அவைகள் முழுதும் உங்களுக்குச் சொந்தம். ஆனால் அந்தச் சந்திப்பை ஒப்புக்கொடுத்தபிறகு, சந்திப்பைப் பெற்றுக்கொண்ட அந்தத்துரைக்கு அந்த ஜாமான்கள் சொந்தமேயன்றி உங்களுக்கல்ல. சந்திப்பை ஏற்றுக்கொண்ட துரையின் சம்மதமில்லாமல், உங்களில் ஒருவர், அந்த ஜாமான்களைத் திரும்ப எடுத்துக்கொண்டு தன் பிரியம்போல உபயோகப்படுத்தத் துணியலாமா? அப்படிச் செய்வது **களவு செய்கிறதென்று**, நீங்கள் சுளுவாய்க் கண்டுபிடிக்கலாம்.

கோவில் விஷயம் இதேமாதிரிதான். உங்கள் கோவிலைச் சந்தோஷத்துடன் சந்திப்பாக ஏற்றுக்கொண்ட சர்வேசுரன், அதைத் தமக்குரிய பொருளாக சுதந்தரப்படுத்தி, அதை விசாரிக்கும் அதிகாரத்தை, மேற்றிராசனத்தில் தமக்குப் பிரதிநிதியா



யிருக்கிற மேற்றிராணியாருக்கும், குருவானவருக்கும் கையளித்திருக்கிறார். ஆம், மேற்றிராசனத்தில் சகல பொதுக் கோவில்களையும், அவைகளைச் சார்ந்த பொருள்களையும் கண்காணித்து விசாரித்து நடத்த சர்வேசுரனால் நியமிக்கப்பட்டவர் மேற்றிராணியார்தான். கிறீஸ்துவர்கள் தங்கள் காணிக்கைகளை ஜனங்களுக்கு அல்ல, கோவிலுக்கே செலுத்துகிறார்கள். ஆகையால் அந்தக் காணிக்கை வகைகளும், கோவில் சொத்துப்போலவே, மேற்றிராணியாருக்குப் பதிலாக பங்கிலிருக்கிற குருசுவாமியார் பாதுகாத்து வரவேண்டியது. என்றாலும் "Fabrica" "வாபிரிக்கா" என்ற ஓர் சங்கத்திற்குச் சில கிறீஸ்துவர்களைத் தீர்மானித்து, கோவிலின் வரவு செலவைச் சரிவர பார்க்கும்படி அவர்கள் கையில் விட்டுவிட மேற்றிராணியாரும் குருவானவரும் சம்மதிப்பார்கள். இந்தச் சங்கம் மெய்யாகவே பிரயோஜனமுள்ளது. இன்னும் தூரந்தொலையான கிராமங்களில் விசேஷமாய்த் தேவை என்கலாம். ஆனால் இந்தச் சங்கத்தின் அங்கத்தார் மேற்றிராணியாரால் அங்கீகரிக்கப்பட்டு ஜனங்கள் பேராலே அல்லாமல், மேற்றிராணியார் பேரால் விசாரணை அதிகாரம் செலுத்தி, மேற்றிராணியாருக்கும் அவருடைய பதிலாளியான குருவானவருக்கும், வரவு செலவு கணக்குகளைச் சரிவர ஒழுங்குடன் ஒப்புவிக்கக் கடன்.

இதுதான் திருச்சபையின் சத்திய போதகமும் சட்டமுமாயிருக்கிறது. மேற்றிராசன கத்தோலிக்கர்களெல்லோரும் இந்தச் சட்ட திட்டத்தை அனுசரிக்கும்படி கண்டிப்புச் செய்தல்; மேற்றிராணியாருடைய மனச்சாட்சியைச் சார்ந்த கடமை. இக்கடமையினால் பிரயாசையும் கவலையும், கஷ்டமும் நஷ்டமும் விளைந்தாலும் பரவாயில்லை.

ஆனால், இந்தச் சத்திய போதகத்தைப் பற்றி, கிறீஸ்துவர்களுக்குள்ள அறிவீனத்தினாலே, கெட்ட எண்ணத்தினாலே, விரோதமான மாமூல்களினாலே, அனேகமாய் நல்வழி தவறிப்போய், சண்டை சச்சரவுகளையும், சிலவிசை கலகங்களையும், இதினால் துர்மாதிரிகையான பிராதையுந்தானே இழுத்துவிட்டு, கடைசியாய்த் தங்கள் குடும்பத்தின்மேலும், முழுக்கிராமத்தின்மேலும் தேவகோபாக்கினையைச் சுமக்கும்படியாகிறது.

கிறீஸ்துவர்களில், படிப்பில் தேர்ந்தவர்களும், பக்தியில் சிறந்தவர்களும், பணிந்து நடக்கப் பழக்கமுள்ளவர்களும், முக்கியமாய் வேதபோதனைகளும் ஞானோபதேசமும் சரியாய் நடந்தேறிவருகிற பட்டணங்களிலும் பெரிய பட்டிகளிலும் உள்ள கிறீஸ்துவர்களும், சத்திய திருச்சபையின் சட்டங்களைக் கற்றறிந்து, பணிந்து நடக்கிறார்கள். இவர்கள்மேல் நமதாண்டவர் தமது ஆசீர்வாதத்தைப் பூரணமாய்ப் பொழிகிறார். இவர்களும் தங்கள்



காணிக்கையானது கோவில் கட்டடங்களை மராமத்துச் செய்யவும், கோவிலை விசித்திரமாய் அலங்கரிக்கக்கூடிய விலையுயர்ந்த ஜாமான்கள் வாங்கவும், தேர்திருவிழா உற்சவங்கள் கோவிலுள் வணக்கப் பத்தியோடும், வெளி வணக்கச் சிறப்பு ஆடம்பரத்தோடும் கொண்டாடவும், அது வெகுவாய் உதவுகிறதென்று கண்கண்ட சாட்சியாக, பாக்கியமடைந்து ஆனந்த சந்தோஷமனுபவிக்கிறார்கள்.

சேசுவின் திரு இருதய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக, மேற்சொன்ன கிறீஸ்துவர்கள் காண்பிக்கிற **கீழ்ப்படிதல்** என்கிற புண்ணியத்தின் உத்தம மாதிரிகையைப் பின்பற்றி, பரிசுத்த திருச்சபையின் செல்வ மக்களெனப் பெயர்பெற்று, இவ்வுலகில் சேசுக்கிறீஸ்துநாதருடைய பிரதிநிதிகளாகிற அர்ச். பாப்பானவர், மேற்றிராணிமார்கள், குருமார் இவர்களுக்குப் பணிந்து நடப்பீர்களாக.

## 7-ம் அதிகாரம்.

# கிறீஸ்துவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் சிநேகமும் சுகிர்த மாதிரிகையும் காண்பிக்கிறதின்பேரில்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 22-ம் அதிகாரத்தை வாசிப்போமானால், நமதாண்டவராகிய சேசுநாதர், மூதலும் அதி முக்கியமுமான கற்பனை **தேவசிநேகம்** என்பதைப்பற்றி விஸ்தரித்தபிற்பாடு, "முதல் கற்பனைக்குச் சரியொத்த இரண்டாம் கற்பனையாவது: தன்னைத் தான் சிநேகிக்குமாப்போல பிறத்தியாரையும் சிநேகிப்பாயாக." என்று சேர்த்து அருளிச் செய்திருக்கிறார். அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தில் "ஒரு புதிய கற்பனை கொடுக்கிறோம். நாம் உங்களைச் சிநேகிக்கிறதுபோல நீங்களும் ஒருவரொருவனைச் சிநேகிப்பீர்களாக" என்று நமதாண்டவர் அப்போஸ்தலர்களுக்குச் சொன்னதுபோல சகல கிறீஸ்துவர்களுக்கும் வசனித்திருக்கிறார்.



அருள் வேதத்தைப் பரம்புவிக்கிறதற்காக இந்த உலகத்தில் சேசுநாதர்சுவாமி பிறந்த காலத்தில், மனுக்குலத்தாருக்குள், தனித்தனியாட்களுக்குள்ள சிநேகம், பொதுஜன சமுகத்தாருக்குள்ள சிநேகம் இன்னதென்று தெரியாது, **சீநேகம்** என்கிற புண்ணியத்தை அஞ்ஞான மதமானது இப்பூமியைவிட்டு அப்புறப்படுத்தி, அதற்குப் பதிலாக ஆங்காரத்தாலும் காய்மகாரத்தாலும் பூமியை நிரப்பியிருந்தது. அதிகார செல்வாக்குள்ளவர்களும், மேன்குலத்தாரும், தாழ்ந்த குலத்தார் மட்டில் அகங்கார கர்வத்தையும், நிஷ்டூரத்தையும், நிந்தை இகழ்ச்சியையும் காண்பித்தார்கள். தாழ்ந்த குலத்தார் மேன்குலத்தார் மட்டில் பகை வர்மத்தையும், காய்மகாரத்தையும் காண்பித்தார்கள். ஜன சமூகத்தில், பற்பல வகுப்பார்களை ஏவித்தூண்டின கருத்தும் நோக்கமும் இவைதான். இன்னும் இவ்வுலகில், முக்கியமாய் சேசுக்கிறீஸ்துநாதருடைய தாழ்ச்சியும் சிநேகமும் போதுமானமட்டும் அனுசரிக்கப்படாத இடங்களிலே, சாத்தானுடைய ஆங்காரம், காய்மகாரம், பகை, வர்மம், நிந்தை முதலிய தீயகுணங்கள் வெளியரங்கமாய் அரசாட்சி செய்கிறது.

நமதாண்டவர் இவ்வுலகத்தில் அருள் வேதத்தைப் போதிக்கும்போது முந்த தம்மைத்தாமே மாதிரிகையாக காண்பித்தார். சகல மனிதர்களையும், தனவந்தர்களோ, தரித்

திரர்களோ, பெரியவர்களோ, சிறியவர்களோ, யாதொரு வித்தியாசமின்றி சிநேகித்துவந்தார். இவ்வுலகில் அவர் உயிரோடிருக்குமளவும், சகலருக்கும் சகல நன்மைகளையும் புரிந்துகொண்டுவந்தார். வியாதிக்காரரைக் குணப்படுத்தினர். கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவு கொடுத்தார். நிர்ப்பாக்கியர்களுக்கு ஒத்தாசை செய்தார். ஜனங்களைத் திரளாய் தம்மிடம் வரச்செய்து அவர்களுக்கு இரட்சண்ய வழியையும், பரலோக பாதையையும் காட்டினர். அவர் ஜீவிய முழுவதும், அன்பும் சிநேகமும் அளவிறந்ததாகவே இருந்தது. தமது மரண சமயத்தில் தம்முடைய கொலையாளிகளை மன்னித்தார். தமது இரத்தத்தின் கடைசித் துளியையும் நமக்காகச் சிந்திப் பலியானர். தேவநற்கருணை என்ற தேவ திரவிய அநுமானத்தின் வழியாய் ஒவ்வொரு நாளும் இத்திருப்பலியைத்தொடர்ந்து நடத்தி வருகிறார்.

இவ்விதமாய் சேசுக்கிறீஸ்துநாதர் தமது பிறர்சிநேகத்தை வெளிப்படுத்தியிருக்கிறதால், அவருடைய முன்மாதிரிகையை நாம் நுணு நுணுக்கமாயனுசரித்து அப்பியாசப்படுத்தக் கடமையுண்டு. அப்படியிருக்க, யார்மேல் பிறர்சினேகத்தை முந்தமுந்த காண்பிக்கக் கடமை? முந்தமுந்த, எல்லோருக்கு மேலாக, உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்மேல் தான் காண்பிக்கவேண்டியது. சில குடும்



பங்களில், கிறீஸ்துவர்களுக்குரிய சிநேகம் அரசாட்சி செய்வதைப் பார்ப்பது சந்தோஷமான காரியம். ஆனால் மற்ற எத்தனையோ குடும்பங்களில் அப்படிப்பட்ட சிநேகம் அற்ப சொற்பம், அல்லது முற்றும் அற்றுப்போயிருக்கும். ஏனெனில் இக்குடும்பங்களில் ஒருவரொருவர் குற்றங்களைப் பொறுத்துக் கொள்வதில்லை. சண்டை சச்சரவு செய்து, நிந்தையான வார்த்தைகள் பேசி, தங்கள் பிள்ளைகளுக்கும் அடுத்த வீட்டாருக்கும் துர்மாதிரிகையாயிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட குடும்பங்களில் துன்பமும் நிர்ப்பாக்கியமும் விளைகிறது. சிநேகம் விளங்குகிற குடும்பத்திலோ சந்தோஷமும் பாக்கியமும் நிறைந்திருப்பதால் அதை ஓர்வகை பூலோக மோட்சமென்கலாம்.

குடும்பங்களில் சமாதானமும் பாக்கியமும் பிறந்து நிலைத்திருக்கிறதற்கு ஒருவரொருவர் குற்றங்குறைகளைச் சகித்து பரித்தியாக முயற்சிபண்ண ஒவ்வொருவருக்கும் நன்மனது அத்தியாவசியம். மேலும் பிறர்சிநேகத்துக்கு விரோதமான எந்தக் கிரிகைக்கும் இடம் கொடுக்கலாகாது. அப்படியே, குடும்பத்தில் ஒவ்வொருவரும், தன் சௌகரியத்தை மாத்திரம் கவனித்துத் தேடிக்கொண்டு, மற்றவர்கள் தலைமேல் பிரயாசையானதெல்லாம் சுமத்திவிடலாகாது. அற்பசொற்பக் காரியங்களில் குறை கூறிக்கொண்டேயிருக்கக்

கூடாது. தன் வருத்தத்தைக் கவனியாமல் மற்றவர்களுக்குப் பிரியப்பட நடந்துகொள்ள வேண்டும்.

இதுமுதல் நசரேத்து திருக்குடும்பத்தாரை உங்கள் முன்மாதிரிகையாக ஏற்றுக்கொள்ளுங்கள். சேசுநாதர்சுவாமி அர்ச். கன்னிமரியம்மாளையும் அர்ச். சூசையப்பரையும் சிநேகித்து சங்கித்திருந்ததுபோல, குடும்பத்தில் பிள்ளைகளும் தங்கள் தாய்தந்தையை நேசித்து மதித்து நடப்பார்களாக. மேலும் அர்ச். கன்னிமரியாயும் அர்ச். சூசையப்பரும் ஒருவருக்கொருவர் உருக்கமான நேசபாசத்துடன் ஜீவித்து வந்தார்கள். தங்கள் திருக்குழந்தையான சேசுநாதர்சுவாமியைக் கவனத்தோடும் அன்போடும் பராமரித்து விசாரித்தார்கள். அப்படியே நீங்களும் செய்யுங்கள். உங்கள் குடும்பங்களில், சிநேகமும் செல்வபாக்கியமும் சேசுவின் திரு இருதய ஆசீர்வாதமும் ஏராளமாய்ப் பொழியப்பட்டிருக்கிறதைக் காண்பீர்கள்.

ஆனால், உங்கள் பிறர்சிநேகத்தை உங்கள் குடும்பத்தாருக்கு மாத்திரம் காண்பிப்பது போதுமென்று எண்ணலாமோ? இல்லை. அந்தப் புண்ணியத்தை விஸ்தாரமாய்ப் பரம்பச் செய்யவேண்டும். இன்னும் உங்களைச் சுற்றியுள்ள கிறீஸ்துவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் பிறர்சிநேகம் காண்பிக்க கடன் உண்டு. அப்படியானால் கிறீஸ்துவர்களுக்கும் அஞ்



ஞானிகளுக்கும் பிறர் சிநேகம் காண்பிக்கிறதெப்படி? அவர்களுக்கு நன்மை செய்யத் தேடுகிறதே அவர்களைச் சிநேகிக்கிறதாம். மெய்யான சிநேகம் கிரிகைகளால் விளங்கும் என்னப்படுவதால், நம்மால் சிநேகிக்கப்படுகிறவர்களுக்கு நன்மைகளை வருத்துவிக்கவும், அவர்களுக்கு வர இருக்கிற தின்மைகளை விலக்கவும் முயற்சியெடுக்கவேண்டும்.

தங்கள் ஆத்துமத்தை நித்திய கேட்டுக்குள்ளாக்குகிற ஆயிரக்கணக்கான அஞ்ஞானிகளோடு நீங்கள் சேர்ந்து ஜீவிக்கிறீர்கள். அவர்கள் ஆத்துமத்தை ஈடேற்ற நீங்கள் என்ன செய்கிறீர்கள்? **சர்வேசுரன் ஒவ்வொருவர் கையிலும் பிறத்தியார் இரட்சண்யத்தை ஒப்படைத்திருக்கிறார்.** அவரவர் இரட்சிக்கக்கூடியதும் இரட்சிக்கவேண்டியதுமான ஆத்துமாக்கள் மோசம்போனால் கண்டிப்பான தீர்வை இடுவார். ஆகிலும் உங்களில் சிலபேர் "அஞ்ஞானிகளை மனந்திருப்ப நாங்கள் என்ன செய்யக்கூடும். நாங்கள் படிப்பில் தேர்ந்த சாஸ்திரிகளல்லவே, நமது வேத அறிவே வெகு சொற்பம். பங்கு விசாரணைச் சுவாமிமார்களைப்போல பிரசங்கம் செய்ய முடியுமா? முடியாதவிஷயம்" என்று சொல்வார்கள். இப்படிச் சொல்லிக்கொண்டே, தங்களுக்கு ஒன்றுஞ் செயயக் கடமையில்லையென்ற எண்ணத்தால் தங்களையே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள். அஞ்ஞானிகளை மனந்

திருப்ப அவர்கள் பிரசங்கிக்க முடியாதது நிசந்தான். பங்குசுவாமிமார்களின் அலுவல்களை நிறைவேற்ற முடியாதது மெய்தான். என்றாலும், தங்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி நன்மை செய்யக் கூடியதாயிருந்து அதைச் செய்யாவிட்டால், சர்வேசுரனுக்குக் கணக்கு கொடுக்கவேண்டியதாயிருக்கும்.

அஞ்ஞானிகள் மனந்திரும்ப, சொற்பமாகிலும், எல்லாரும் செய்யக்கூடியதென்னவென்றால், ஜெபமும் சுகிர்த மாதிரிகையுமாம். நாம் ஜெபம் செய்தால், சேசுக்கிறீஸ்துநாதரின் திரு இருதயத்தின் வழியாய் அஞ்ஞானிகளுக்கு தேவையான வரப்பிரசாதங்கள் கிடைக்கும். இதினால் அவர்கள் புத்தி தெளிவாகி, மனமானது மாறி, பசாசு அவர்களின் மனந்திரும்புதலுக்கு விரோதமாய், எவ்வளவுதான் எதிர்த்து நின்றாலும், அதைச்சட்டைபண்ணாமல், நமது பரிசுத்த வேதத்தைக் கைப்பற்றுவார்கள்.

ஜெபத்துடன் சுகிர்த மாதிரிகையையும் சேர்ப்பது அத்தியாவசியம். நன்மை தின்மை எதாவது செய்யவேண்டுமோ, தானே மாதிரிகை காண்பித்து செய்வதுபோல சித்திக்கக் கூடிய வகை வேறொன்றுமில்லை. கிறீஸ்து வேதம் பரம்பின ஆதித்துவக்கத்தில், கிறீஸ்துவர்களுடைய நன்மாதிரிகைகளைக்கண்டு, கணக்கில்லாத அஞ்ஞானிகள் நமது சத்திய திருச்சபையில் பிரவேசித்தார்கள். நீங்கள் அஞ்


224749

ஞானிகள் முன் [illegible] ஓயாமல் அவர்களோடு புழ[illegible]கிறார்கள். உங்களுடைய நடத்தையைக்கொண்டு நமது வேதத்தின் பரிசுத்ததனத்தையும் மகிமைப்பிரதாபத்தையும் நிதானித்துக்கொள்ளுகிறார்கள்.

உங்களில் அநேகர் அஞ்ஞானிகளுக்கு சுகிர்த மாதிரிகை காண்பிக்கிறீர்கள் என்பது மெய்யே. ஆனால் வேறனேகம்பேர்கள் ஐயோ கேடாய் அஞ்ஞானிகளைப்போல் ஜீவிக்கிறார்கள். தங்களுடைய ஆத்தும இரட்சண்யத்தையும் பரலோக பேரின்பத்தையும் அலட்சியம் பண்ணி, இவ்வுலக செல்வ சுகத்தை மாத்திரம் ஏகமாய்த் தேடுகிறார்கள். இவர்கள், சண்டை சச்சரவு, தர்க்கங்கள், தூஷணப் பேச்சு வார்த்தைகள் முதலியவைகளுக்கும் இடங்கொடுத்து, அநீத பிராதுகளும் ஏற்பாடு பண்ணுகிறார்கள். பசாசின் கிரிகைகளுக்கும், ஜோசியம் வீணாசாரமுதலிய அனுசரணைகளுக்கும் உடன்படுகிறார்கள். மேற்றிராணிமார்களுக்கும் குருக்களுக்கும் விரோதமாய் கலகமெழுப்பி, திருச்சபையின் விசேஷ தண்டனைக்கு அஞ்சாமல் அவர்களை அஞ்ஞான நீதிபதிகள் முன் நிற்கும்படி கச்சேரிக்கு இழுக்கிறார்கள். இவ்விதமாய் மற்ற கிறீஸ்துவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் இடறலாயிருப்பார்களானால், அஞ்ஞானிகள் மனந்திரும்புவார்களென்று என்ன நம்பிக்கை? இந்த வகையான நிர்ப்பாக்கிய கிறீஸ்துவர்கள், தங்களின்

வேத விஷய அலட்சியத்தாலும், துர் அப்பியாசங்களாலும் மற்றவர்கள் கெட்டுப்போக தூண்டுகோலாயிருக்கிறதால், எவ்வளவோ பயங்கரமான கணக்கு ஒப்புவிக்கவேண்டியிருக்கிறது.

பத்தியுள்ள கிறீஸ்துவர்கள், இனிமேலாக தங்கள்மேல் சுமந்திருக்கிற கடனைச் சரிவர அறிந்து, தங்கள் சக்திக்களவு பிறர் ஆத்தும ஈடேற்றத்துக்காக உழைக்க முயற்சி செய்வார்களாக. இப்படி முயற்சி செய்ய, பற்பல வகையும் இடமும் சந்தர்ப்பமும் ஒரு நல்ல ஊக்கமுள்ள கிறீஸ்துவனுக்குண்டு. ஒரு குடும்பத்தில் தன் சகோதரர்களுக்கும், ஒரு பள்ளிக்கூடத்தில் தன் தோழர்களுக்கும், ஒரு மடத்தில் தன் துணைவர்களுக்கும், ஒரு கிராமத்தில் மற்ற கிறீஸ்துவர்கள் அஞ்ஞானிகளுக்கும், தன் பத்திக் கிரிகைகளாலும், தன் நன்னடத்தையாலும், சுகிர்த மாதிரிகை காண்பிக்கலாம். முக்கியமாய், பசாசும் பசாசின் பாரிசத்தாரும், சில கிறீஸ்துவர்கள் திருச்சபைக் கட்டளைக்குப் பணியவிடாமல் ஆத்தும நாசமாகத் தூண்டிவிடும்போது ஒரு நல்ல கிறீஸ்துவன் குருவானவர்களுக்கு பிரமாணிக்கமாய்க் கீழ்ப்படிந்து சுகிர்த மாதிரிகை காண்பிக்கலாம்.

ஜெபத்தோடும் சுகிர்த மாதிரிகையோடும் பிறர்சிநேக புண்ணியக் கிரிகைகளைச் சேர்த்துப் பயிற்சிக்கக் கடன். அவைகளாவன :



**1. தர்மம் :** அதிதூதரான அர்ச். இரபேல் சம்மனசானவர் தொபியாசென்பவருக்கு சொன்னதாவது :—

"தர்மம் பாவங்களை நிவிர்த்திபண்ணும் ; தேவ கிருபையையும், நித்திய ஜீவியத்தையும் பெறுவிக்கும்." (தோபி. XII, 9.)

மேலும் வேதாகமத்தில் எழுதியிருக்கிறபிரகாரம், "ஏழைகளின் துன்பங்களைப் பார்த்து இரக்கப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் ; துன்பகாலத்தில் அதாவது மரணத்தறுவாயில் ஆண்டவர் அவர்களை இரட்சிப்பார்."

ஏனெனில், "இரக்கஞ் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நடுத்தீர்ப்பு கிடைக்கும், இரக்கமோ நடுத்தீர்ப்பை மேற்கொள்ளுகிறது." (யாக. II. 13.)

உலகமுடிந்து பொதுத்தீர்வைநாளில், தரித்திரர்களின் நேச உபகாரிகள், பரலோக நீதியதிபதியின் வலதுபாரிசத்தில் நிறுத்தப்பட்டு அவருடைய திருவாக்கிலிருந்து பிறக்கும் திவ்வியமான வார்த்தைகளைக்கேட்க, எவ்வளவோ ஆனந்த சந்தோஷமனுபவிப்பார்கள்.

"பின்பு வலது பாரிசத்தில் நிற்கிறவர்களைப் பார்த்து, அரசன் சொல்லுந் தன்மையாவது : என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே ! உலகமுண்டானது துவக்கி, உங்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள வாருங்கள்.

"ஏனெனில், நான் பசித்திருக்கையிலே அன்னங் கொடுத்தீர்கள். நான் தாகமாயிருக்கையிலே பானங் கொடுத்தீர்கள். பரதேசியாயிருக்கையிலே அழைத்துக்கொண்டீர்கள்.

"நான் வஸ்திரமில்லாதிருக்கையிலே எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள். நான் வியாதியாயிருக்கையிலே என்னைச் சந்தித்தீர்கள். நான் காவலிலிருக்கையிலே எனக்காறுதலாயிருந்தீர்கள் என்பார்." (மத். XXV. 34-36.)

ஆனால், இத்தகைய சதாகால சன்மானத்துக்குத் தகுதியாயிருக்கும்படி, தர்மத்தை, உண்மையாகவே தரித்திர அந்தஸ்தில் உபாதைப்படுகிறவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது அவசியம். மேலும், சுவிசேஷ வார்த்தைகளின் கருத்துப்பிரகாரம் தர்மம் அளிப்பது ஒருவர் வீண் சிலாக்கியத்துக்காகவோ மகிமை பெருமை இலாபத்துக்காகவோ, அல்ல; தரித்திரரிடமாய் சேசுக்கிறீஸ்துநாதரை நிதானித்து அவருக்கு ஆறுதல் செய்கிறதற்குச் சமானமாய், தர்மம் கொடுக்க கடன். ஒரு ஊர் திருநாட்காலங்களில் யாத்திரை ஸ்தலங்களிலே சில ஐசுவரியர்கள் பிற ஊராருக்கு விருந்து செய்யும்படி திரளான பணம் செலவழிக்கிறார்கள். இது மெய்யான தர்மமோ, இல்லை. ஏனெனில், மெய்யாகவே எளியவர்களுக்கு மாத்திரமென்று குறித்து தயாரான போசன பந்திக்கு ஆஸ்திக்காரரும் சாப்பிடும்படி வரவழைக்கப்படுகிறார்கள்.



மேலும், பகிரங்கமாய் உதவுகிற நன்கொடை வழியாய், அநேகம்பேர்கள் தங்களுடைய சுய மகிமை கீர்த்தியையும், மற்றவர்களுடைய மதிப்பான எண்ணத்தையும் தேடி நாடுகிறார்கள். நமதாண்டவர் சொல்வதுபோல், இம்மையின் வியர்த்தமான கைம்மாறை அபேட்சிக்கிறவர்கள் மறுமையின் சததமான சம்பாவனையைத் துவேஷிக்கிறார்கள். சிலபேர் வீணாய்ச் செலவழிக்கிற பணத்தைக்கொண்டு, எத்தனையோ ஏழைக் குடும்பங்களை ஆதரிக்கலாம், எத்தனையோ தர்மசாலைகளை நிலைநிறுத்தலாம், எத்தனையோ ஆத்துமாக்களை மோட்சகரை சேர்க்கலாம். மெய்யாகவே இக்கட்டு இடைஞ்சலுக்குள்ளாகி, பண உதவிக்கு பாத்திரமானவர் எவர்களென்றும், எந்தெந்த தர்ம ஸ்தாபகங்களுக்கு ஒத்தாசை தேவையென்றும், பங்கு விசாரணைச் சுவாமிமார்களுக்கு நன்றாய்த் தெரியும். அவர்களின் ஆலோசனையைக் கேட்டு தர்மஞ் செய்தால், உங்கள் பணம், தரித்திரத்தில் வருந்தினவர்களுக்குப் பிச்சையாகவும், ஆத்தும இரட்சண்ணியத்துக்கு ஏதுவாகவும், செலவழிக்கப்படுமென்பது நிச்சயம். நீங்கள் தர்மம் கொடுப்பதில், உலக மகிமை மதிப்பைத் தேடாமலிருந்தால், பரலோக நித்திய ஜீவியத்துக்கு நீங்களே பேறுபலன்களைச் சேகரிக்கிறீர்கள். சர்வேசுரன், உங்கள் நற்கிரிகைகளை இரகசியமாயறிந்து, தமது இராச்

சியத்தில் நூறுமடங்கு மேலாக வெகுமான மளிப்பார்.

**ii. வியாதிக்காரரைச் சந்தித்தல்:** வியாதிக்காரர்களில் கணக்கில்லாத பேர்கள், வாரக்கணக்காய், இன்னும் மாதக் கணக்காய் மற்றவர்களிடமிருந்து யாதொரு உதவி ஒத்தாசை பெருமல், ஆறுதல் தேறுதலாக ஒரு வார்த்தையும் கேளாமல், படுத்த படுக்கையிலிருந்து நிர்ப்பாக்கியமாய் நாட் களைப் போக்குகிருர்கள். அவர்களைச் சுற்றி யிருக்கிற கிறீஸ்துவர்கள் அந்த வியாதிக்கார ரைப்பற்றி அறிந்திருந்தும், அவர்களைச் சந் திக்க நேரமிருந்தும், இந்த நற்கிரிகை செய்ய நினைக்கிறதேயில்லை. நீங்கள் பிணியாளிகளைப் பார்க்கப் போவதினுல் அவர்களுக்குச் சரீர உபாதை வேதனை தணிய ஏதுகரமாயிருப்பீர் கள். அவர்களாத்துமத்துக்கு பிரயோசனமா யிருப்பீர்கள். ஆகையால், தாராளகுண முள்ளவர்களையும், சேசுவின் திரு இருதய சிநேகிதர்களையும், இந்தப் பிறசிநேகக்கிரிகை செய்யத் தூண்டுகிருேம். வியாதிக்காரரிட மாய், சேசுநாதரைப் பார்த்து சந்தித்தால், நமதாண்டவர் உங்களுக்கு நூறுமடங்கு சம் பாவனையளித்து, சம்பூரண ஆசீர்வாதங்களைப் பொழிந்தருளுவார்.

**iii. வேதவிஷயம் அறியாதவர்களுக்கு ஞானுபதேசம் படிப்பித்தல்:** தர்மிஷ்ட உபதேசிமாரின் வேலையைவிட அதிக பிரயோ



ஜனமுள்ளது வேறென்றுமில்லை. இத்தேசத் தில் எண்ணிக்கையிலடங்காத கிறீஸ்துவர் கள், பிள்ளைகளானுலுஞ்சரி, பெரிய ஆட்களா னுலுஞ்சரி, ஆத்தும இரட்சண்ணியத்துக்கு அவசியமான வேத சத்தியங்களைமுதலாய் அறியாமலிருக்கிருர்கள். சொற்பப்பேர்கள் ஞானுபதேசம் படித்திருக்கிருர்கள் என்பது மெய்தான். இவர்கள் ஒவ்வொருநாளுமே அல்லது ஞாயிற்றுக்கிழமைகளிலே, ஒரு மணி நேரம் அரை மணி நேரம் ஞானுப தேசம் படித்துக்கொடுக்கலாம், மற்றவர்கள் படித்துக்கொடுக்க உதவிசெய்யலாம். ஞானு பதேசம் கற்றுக்கொடுப்பதால், பிறத்தியார் புண்ணியநெறியில் நடந்து, மோட்ச பேரின் பம் அனுபவிக்கவும், தங்கள் ஆத்துமம் ஈடேற்றமடையவும் வழிபண்ணிக்கொள்ளு கிருர்கள். இந்த மகத்துவம் பொருந்திய அப்போஸ்தலத்துவத்தை நிறைவேற்றிஞல், அப்போஸ்தலர்களுக்கு நமதாண்டவர் வாக் குத்தத்தம் செய்தருளிய சம்பாவனைக்குப் பங்காளிகளாவீர்கள்.

—

## 8-ம் அதிகாரம்.

# “கற்பு” என்னும் புண்ணியத்தைப் பாதுகாத்தல்.

கிறீஸ்துவர்கள் அனுசரிக்கவேண்டிய புண்ணியங்களுக்குள்ளே சேசுவின் திரு இருதயத்துக்கும், அர்ச். அமலோற்பவமாதாவின் இருதயத்துக்கும் விசேஷ பிரீதியான புண்ணியம் ஒன்றுண்டு. அது ‘கற்பு’ என்கிற புண்ணியமாம். கற்புள்ள ஆத்துமாக்களுக்கே, நமதாண்டவர் தமது அரிய பெரிய உன்னத வரப்பிரசாதங்களையும், ஆசீர்வாதங்களையும் பத்திரமாய் வைத்து அளித்துக்கொண்டிருக்கிறார். **“தூய இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்களே சர்வேசுரனைத் தரிசிப்பார்கள்”** என்ற வாக்கியத்தைக் கற்புடையவர்களைப்பற்றி வசனித்திருக்கிறார். அப்போஸ்தலர்களுக்குள்ளே அர்ச். அருளப்பருக்கு அபரிமிதமான நேச வாஞ்சையை வெளிப்படுத்தி, கடைசி இராப்போசன சமயத்தில், தமது திரு நெஞ்சின்மேல் அவர் தலைசாய்க்க இடங்கொடுத்தார். தாம் மரிக்கும் தருணத்தில் தமது பரிசுத்த தாயாரை அவரிடம் ஒப்படைத்தார்.



அர்ச். அருளப்பர் சேசுநாதரால் சிநேகிக்கப்பட்டுவந்த விசேஷ நேச சீஷனென்னும் ஒப்பற்ற சிறப்புப் பெயரையடைந்தார். இத்தகைய கருணை அன்பைக் காண்பிக்கிறதற்குக் காரணமென்ன? என்னவெனில், அவர் அப்போஸ்தலராய்த் தெரிந்துகொள்ளப்படும்போதே விரத்தராயிருந்தார். அவர் வாழ்நாட்களில் அவர் கன்னிமையைப் பழுதறக் காத்து வந்தார்.

சர்வேசுரன், கற்பென்கிற புண்ணியத்தை வெகுவாய் விரும்புகிறதினாலே, அதற்கு விரோதமான மோகபாவத்தைக் கட்டிக்கொண்டவர்களுக்கு அதிமிக அகோர ஆக்கினையிட்டிருப்பதை அறிவது அதிசயமில்லை. காமாதுரர்களைத் தண்டிக்க, நோவை என்பவரின் குடும்பம் நீங்கலாக மனுக்குல முழுவதையும் ஜலப்பிரளயத்தால் சங்காரம்பண்ணினார். சோதோம், கொமரா பட்டணங்களையும் அவைகளை அடுத்த இராச்சியங்களையும் வானலோக நெருப்பினால் எரித்துச் சாம்பலாக்கினார். அர்ச். சின்னப்பர் எழுதிவைத்திருக்கிறபடி, நீங்கள் மாங்கிஷத்துக்கொத்தபிரகாரம் ஜீவிப்பீர்களானால் சாவீர்கள், அதாவது, சரீர சாவுமாத்திரமல்ல, ஆத்துமத்தின் நித்திய கேட்டுக்குள்ளாவீர்கள்.

ஆகிலும் நீங்கள், இந்த அருமையும் தூய்மையானதும் அத்தியாவசியமானதுமான புண்ணியத்தை, சர்வேசுரனுடைய விசேஷ அனுக்

கிரகப் பிரசாதத்தாலன்றி அனுசரிப்பது அசாத்தியம். நீங்களே விழித்திருந்து ஜாக்கிரதையாயிருந்தாலன்றிக் காப்பாற்றுவது கடினம். அர்ச்சியசிஷ்டவர்கள் இதைக் கண்டுபிடித்ததினாலல்லோ, இவ்வழகிய பரிசுத்ததனத்தைக் காப்பாற்ற என்ன பரித்தியாகஞ் செய்யவேண்டுமானாலும் பின்வாங்கவில்லை. அப்படியானால், எப்படி அர்ச்சியசிஷ்டவர்கள் நமக்கு முன்மாதிரிகையாயிருந்தார்களென்றும், எவ்வித வழி வகைகளைப் பிரயோகித்தார்களென்றும் ஆராய்வோமாக :—

1-வது. **பாவத்தின் சமயங்களை விட்டு விலகுகிறது:** ஆங்கார கர்வப் புகையினால், நித்திய பேரின்ப பாக்கியத்தை இழந்துவிடும்படியாக மதிமயங்கிப்போன பசாசானது, உங்களை நரக பாதாளத்திற்கு இழுக்கச் சகல விதத்திலும் தேடுகிறதுண்டு. ஒருவேளையில், உங்களுக்குக் கெட்ட விசாரங்களை ஏவித் தூண்டி, நேரில் சோதனையைக் கொடுக்கும். பல சமயங்களில் மற்றச் சிருஷ்டிகளால், முக்கியமாய் உங்கள் அருகில் வசிக்கிற மனிதர்களால், சோதனை உண்டாகும். சிலபேர்களைப் பார்ப்பதிலும், அவர்களோடு பேசுவதிலும், பசாசின் தந்திர சமயமாயிருக்கிறதென்று அறிந்தும், அவர்களை மனது பொருந்தி அடுத்து அடுத்துப் பழகினால், மோக பாவ ஆபத்தைத் தேடுகிறதுபோலாகிறது. "ஆபத்தைத் தேடுகிறவன் ஆபத்தில் நாசமாவான்" என்று



இஸ்பிரீத்துசாந்துவானவரே அறிக்கைசெய்திருக்கிறதை மறந்துவிடாதேயுங்கள். விளக்குப் பூச்சிகள், ஓர்விளக்கு வெளிச்சத்தின் சோதி சௌந்தரியத்தைத்தேடி, அதைச் சுற்றிச் சுற்றிப் பறந்து ஓடிக் கடைசியாய் அந்த அனலில் எரிந்து வெந்து போகிறதைக் கண்டிருக்கிறீர்கள். இவ்வண்ணமே காமாக்கினி ஆபத்தைத் தேடுகிறவர்களுக்கு நேரிடுகிறது. மேலும் நமதாண்டவராகிய சேசுநாதர்சுவாமி திருவாக்கருளிய சில கடினமான வார்த்தைகளைக் கவனியுங்கள்:—உன் வலதுகண் உனக்கு இடறலாயிருந்தால், அதைப்பிடுங்கித் தூர எறிந்துபோடு; ஏனெனில் உன் உடல் முழுதும் நரகத்தில் தள்ளப்படுவதைவிட, உன் அவயவங்களில் ஒன்று சேதமாய்ப்போவது உனக்கு நலமாம் (மத் V. 29.)— நமதாண்டவர் சரீரக்கண்களைப் பற்றி இங்கு பேசுகிறதில்லை. கண்மணிபோல நேசிக்கப்பட்ட ஒருவருடைய உற்ற அன்பர் நண்பர் ஓர் சாவான பாவத்திற்கு கிட்டின சமயமாயிருந்தால், அவரை விட்டுப் பிரியவேண்டியது. உங்களுடைய ஒரு கண்ணைப் பிடுங்கினால், உங்களுக்கு வலி வேதனையும் கஷ்டமும் நஷ்டமும் உண்டாகிறதுபோல, கண்ணுக்குக்கண்ணான சிநேகிதரைவிட்டுப் பிரிவதனாலுண்டானாலும் பரவாயில்லை. சேசுநாதருடைய திவ்வியபோதனைக்கு காதுகொடுத்து, தேவ வரப்பிரசாத உதவியைக்கொண்டு, கெட்ட தோழர்களையும்

பாவத்துக்கு ஏதுகரமான ஆட்களையும் விட்டு விலகுவீர்களாக.

2-வது. **ஐம்புலன்களையும் முக்கியமாய்க் கண்களையும் அடக்கி ஆளுகிறது.** விலையுயர்ந்த பூச்செடிகள் வைத்து வளர்க்கப்பட்ட ஒரு தோட்டம், பொதுவான சாலையின் ஓரமாயிருக்க, அதைச்சுற்றி வேலி போட்டுச் செப்பனிடாதேபோனால், ஆடுமாடுகள் உள்ளே போய், பாழாக்கி நாசஞ் செய்யுமென்று யாவரும் அறிந்த விஷயம். இதேமாதிரி, ஆத்துமத்தின் விலைமதிக்கப்படாத பொக்கிஷமான பரிசுத்ததனமானது மோக காம பசாசுக்கு இரையாய்ப் போகாதபடிக்கு உங்கள் பஞ்சேந்திரிய வாசல்களை இறுக்கிச் சாத்துங்கள். பிரதானமாய் உங்கள் கண் காதுமேல் ஜாக்கிரதையாயிருங்கள். ஜோப் என்பவர் தமது கண் பார்வையினால், யாதொரு பாவமாசு அணுகாதபடி, இடைவிடாமல் விழிப்பாயிருக்க, தமது கண்களோடு ஒரு உடன்படிக்கை செய்திருந்ததாக வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

ஆகையால் நீங்கள் மனப்பூர்வமாய், அயோக்கியமான வஸ்துக்களையும், அசுசியும் அபாயமுமான படங்களையும், சிலைகளையும் ஒருபோதும் கண்ணோக்கிப்பார்க்க ஒண்ணாது. தகாத வாசகங்களும், சிற்றின்பப்பாட்டுகளும் சம்பாஷணைகளும் ஒருவரிருதயத்தைக் காமவிசாரங்களாலும், அசங்கித உரூபிகரங்களாலும், நிரப்



புகிறதால், அவைகளை அருவருத்துத் தள்ளிவிடவேண்டியது. அர்ச்சியசிஷ்டவர்கள் இந்தப்புண்ணிய விஷயமாய் எவ்வளவு கவலையாயிருந்தார்களென்றும், பரிசுத்ததனத்தைப் பழுதாக்கக்கூடிய யாவையும் நுணுநுணுக்கமாய்ச் சோதித்துத் தவிர்த்து தள்ளுகிறதற்காக எவ்வளவு தங்களையே ஒறுத்து ஒடுக்கினார்களென்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ? அர்ச். ஞானப்பிரகாசியார், அர்ச். ஸ்தனிஸ்லாஸ், மற்றவர்கள் பேசும் துர்விஷய சம்பாஷணையைக் கேட்டவுடன், மூர்ச்சையாய்க் கீழே விழுகிறதுண்டு.

அர்ச். பெர்நார்தீன் காதில் தூஷணவார்த்தை விழுந்தால், அவருள்ளத்தில் அத்தியந்த வேதனை அனுபவிக்கிறதாக வெளியரங்கமாய்த் தெரியும். இதினால் அவர் தோழர்கள் அவர் நெருங்கி வருவதைக் காணும்போது "பேச்சில் எச்சரிக்கை, பெர்நார்தீன் வருகிறார்" என்று உரைப்பார்கள். இப்படிப்பட்ட புகழ்ச்சிக்கு நீங்களும் தகுதியாயிருப்பீர்களாக. உங்கள் நல்லொழுக்கத்தால் உங்கள் கூட்டாளிகளின்மேல் அதிகாரம் செலுத்த முயலுவீர்களாக.

3-வது. உங்கள் கருத்து துர்விஷயங்களில் சார்பாயில்லாமல், துர்விசாரம் பிரவேசிக்கவிடாதபடி, **உங்கள் அலுவலில் முயற்சியாயும் சுறுசுறுப்பாயுமிருக்கிறது.** சுறுசுறுப்பானது ஆத்துமாக்களைக் காப்பாற்றும் பெரிய

ஆதாரம். அதற்கு விரோதமாக, சோம்பலானது சகல அக்கிரமங்களுக்குந் தாய், சகல வித சோதனைக்கும் திறந்த வாசல்.

4-வது. **ஜெபம், ஒறுத்தல் முயற்சி, தேவ திரவிய அநுமானம், சர்வேசுரன் சன்னிதான** முதலிய பத்திக்கிருத்தியங்களை அப்பியாசமாய் அனுசரித்துவருகிறது.

5-வது. **சோதனைகளைத் தைரியமாய் ஜெயிக்கிறது.** சோதனைகள் உங்கள் அசட்டைத்தனத்தால் உண்டாகிறதுண்டு. இது உங்கள்பேரில் குற்றமாகும். உங்கள்பேரில் குற்றமில்லாமலே, பசாசின் தந்திரத்தினால் சோதனைகள் வரக்கூடும். உங்கள் புண்ணியத்தின் உறுதியைப் பரீட்சிக்கிறதற்கும், உங்களுக்குக் கைம்மாறு அளிக்கிறதற்கும், பசாசு உங்களைச் சோதிக்கும்படி சர்வேசுரன் விட்டுவிடுவார். ஆகிலும் உங்கள் சத்துவத்துக்கு மேலாகச் சோதனைகள் எழும்பாதிருக்கத் தம்முடைய வரப்பிரசாதத்தினால் உங்களுக்கு உதவி புரிகிறார். சோதனைக்குட்படுவீர்களானால், உங்கள் குற்றந்தான். சோதனைப்படுவது பாவமல்ல. பசாசானது "இந்தச் சுகபோகத்தை அநுபவியுங்கள், இந்தத் தீயசெய்கையை நிறைவேற்றுங்கள்" என்று சொல்லிப் பசப்பினாலும், உங்கள் மனமின்றி சோதனையில் உங்களை விழத்தாட்டுவதற்குப் பசாசுக்குச் சத்துவமேயில்லை. எதிர்த்து நில்லுங்கள், மறுதலியுங்கள். இதுதான் உங்களு



டைய உன்னதமான வெற்றி. அர்ச்சியசிஷ்டவர்களும் சோதனைப்பட்டார்கள். ஆனால் ஜெயசீலர்களாய் எதிர்த்தார்கள். நித்தியத்துக்கும் கிரீடம் தரித்துக்கொள்ளப் பாத்திரவான்களானார்கள்.

**சோதனைகளை ஜெயிக்கிறதெப்படி?** சோதனைக்குரிய விஷயங்களினின்று உங்கள் எண்ணத்தை அகற்றிவிட்டு, வேறே விஷயங்களின்மேல் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள். முக்கியமாய்ப் பத்திக்குரிய சிந்தனைகளைத் தியானித்து, சேசுநாதருடைய திரு இருதயத்தையும், அர்ச். அமலோற்பவமாதா இருதயத்தையும் நோக்கி உங்களிருதயத்தை உயர்த்தி, உங்களுக்கு உதவிபுரியவும், உங்களைக் காப்பாற்றவும் மன்றாடவேண்டியது. இராநேரத்தில் ஒரு திருடன் உங்கள் வீட்டில் பிரவேசிக்கிறதாகக் காண்பீர்களானால், அக்ஷணமே அயல்வீட்டார் உதவிக்கு வரும்படி கூக்குரலிட்டுக் கூப்பிடுவீர்கள். திருடன் ஓடியே போய்விடுவான். இவ்வண்ணமே மோக சோதனை நேரத்திலும் பசாசைத் துரத்தி ஓட்டும்படி நமதாண்டவரையும், அர்ச். கன்னிமரியாயையும், சம்மனசுகளையும், அர்ச்சியசிஷ்டவர்களையும் கூப்பிடும்படி ஜெபம் செய்வீர்களாக.

சோதனையை ஜெயிக்க மிகவும் சத்துவமுள்ள வழி **சர்வேசுரன் சன்னிதியில்** நீங்கள் என்றும் இருப்பதாக நிச்சயித்துக்கொள்ளுகிறதாம். நமதாண்டவர் சம்மனசுகளால்

சூழப்பட்டு உங்களுக்கு முன்பாக வீற்றிருந்து, நீங்கள் பாவத்துக்குச் சம்மதித்தால் உங்களைக் கோபித்து மரணத்தீர்வையிடத் தயாராயிருக்கிறாரென்று நிதானித்துக்கொள்ளத் தகும். மனுஷர்களுடைய பார்வைக்கு, நீங்கள் ஒருவரும் காணக்கூடாத தூரத்திலிருப்பதாக எண்ணிக்கொள்ளலாம். சர்வேசுரனுடைய பார்வைக்கோ ஏகாந்தமுமில்லை, அந்தகாரமுமில்லை. சர்வேசுரன் அதோ இருக்கிறார், உங்களைப் பார்க்கிறார் அப்படியானால், அவர் சன்னிதியில் அவருக்குத் துரோகஞ் செய்வீர்களோ? பாவக்கிரிகையிலேயே உங்கள் உயிரைப் பறித்து உங்களை நித்திய காலம் நரகபாதாளத்துக்குத் தள்ள அவராலே கூடுமன்றோ.

பாவச்சோதனையை ஜெயிக்க, சேசுநாதரின் பாடுகளைப்பற்றி, முக்கியமாய் அவர் முண்முடி சூட்டப்பட்டதைப்பற்றியும், திருச்சிலுவையிலறையப்பட்டு மரித்ததைப்பற்றியும் தியானிப்பதே உத்தமமான வழி. உங்கள்மேல் வைத்த சிநேகத்துக்காக சொல்லொண்ணாப் பாடுகளைப்பட்ட சேசுக்கிறீஸ்துநாதரைப்பற்றித் தியானிக்கும்போது, நீங்கள் பாவமான இன்பசுகத்துக்குச் சம்மதித்து அவருடைய பாடுகளைப் புதுப்பிப்பீர்களோ?

6-வது நிர்ப்பாக்கியமாய் உங்களிலொருவர் பசாசின் சோதனை வலையில் சிக்கி, சாவான பாவத்தைக் கட்டிக்கொண்டால், **என்ன**



**செய்யவேண்டும்**? சேறு சகதி நிறைந்த ஓர் குளத்தில் விழுந்த மனிதன் என்ன செய்வான்? கூடியசீக்கிரம் குளத்தைவிட்டு வெளியேவரவும், சகதியான வஸ்திரத்தைக் களைந்து போட்டு, சுத்தமான உடுப்பை அணிந்துகொள்ளவும் தீவரிப்பான். அம்மாதிரியாக சாவான பாவத்தில் விழுந்தவர்கள் அன்றையத்தினமே பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டும். அப்படி முடியாதபட்சத்தில் சேசுவின் திரு இருதயத்தை நோக்கிப் பத்தியோடு ஜெபித்து அதனிடம் பாவப்பொறுத்தலை உருக்கமாய் இரந்து மன்றாடி, அதிசீக்கிரம் பாவசங்கீர்த்தனம்பண்ணவும், இனிமேலாக அந்தப் பாவத்தை ஒருபோதும் கட்டிக்கொள்ளாதிருக்கவும் வாக்குத்தத்தம் செய்யக்கடவார்கள்.

7-வது. கற்பென்கிற புண்ணியத்தின் அழகு சௌந்தரியத்தைப்பற்றியும், அதைக் காப்பாற்றவேண்டிய அவசியத்தைப்பற்றியும், அதற்கான வகைகளைப்பற்றியும் சரிவர அறிந்து, இந்த உத்தமமான புண்ணியத்துக்கு விரோதமான பாவத்தை அருவருத்து விலக்கவேண்டியது. ஊரிலும் யாரொரு கிறீஸ்துவன் ஒழுங்கீனமான நடத்தையால் துர்மாதிரிகை கொடுப்பதைப் பார்த்துக்கொண்டிருக்க ஒண்ணாது. பசாசானது பாவத்துக்கேதுவான சமயத்தைக் காண்பிக்கும்போது, சங்கிலியால் கட்டப்பட்ட நாய்க்குச் சமானம். அந்த நாய் குலைக்கும். கிட்ட நெருங்கினவர்

களைத் தவிர மற்ற எவரையும் கடிக்காது. ஆகையால் பாவச்சமயத்தை விட்டு ஓடி விலகுங்கள். சேசுநாதரின் போதனைப்பிரகாரம், **சோதனையில் பிரவேசிக்காதபடி விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்.**

சரீரமானது ஆத்துமத்துக்குப் பாரமாகி, பஞ்சேந்திரிய சுகபோகங்களுக்கு அதை இணக்கமாக்குமென்று மறந்துவிடாதேயுங்கள். உங்கள் ஆசாபாசங்களின்மேல் ஜெயங்கொள்ளவும், உங்கள் சத்துராதிகளைத் தோற்கடிக்கவும் சண்டைபோட்டு கடும் போர்புரியக் கடன். பசாசை ஜெபத்தாலும் உபவாசத்தாலும் துரத்தக்கூடுமென்று நமதாண்டவர் சொல்லியிருக்கிறார். ஆகையால் ஜெபம், தவம், பரித்தியாகம் முதலிய பத்தி முயற்சிகளை அடிக்கடி செய்யும் நல்ல வழக்கத்தைக் கற்றுக்கொள்வோமாக.

9-ம் அதிகாரம்.

## பேய்க்காரியம் அஞ்ஞான சாஸ்திரம் முதலியவைகளை முற்றும் விலக்குதலின்பேரில்.

சர்வேசுரன் அருளிச்செய்த முதற் கற்பனையில், ஒரு விஷயத்தைச் செய்யவும், இன்னொரு விஷயத்தை விலக்கவும், கட்டளையிட்டிருக்கிறதால், சர்வேசுரனுக்குரிய ஆராதனை பத்தி முயற்சிகளைச் செய்யவும், விக்கிரக ஆராதனை, பேய்க்காரியம், அஞ்ஞான சாஸ்திரம், விசுவாசத்துக்கும், தேவ சிநேகத்துக்கும் விரோதமான குருட்டுப் பத்திக் கிரிகைகள் சகலத்தையும் விலக்குகிறதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். விக்கிரக ஆராதனையென்றால் சிருஷ்டிகருக்குரிய ஆராதனையை ஒரு சிருஷ்டிக்குச் செலுத்துகிறதாம். குருட்டுப்பத்தியென்றால் பரிசுத்த திருச்சபையால் சபிக்கப்பட்ட சில ஆசாரம் சடங்குகளின்மேல் நம்பிக்கை வைத்து அவைகளை அனுசரிக்கிறதாம். ஆகையால் குறிகாரர், மந்திரவாதிகள், ஜோசியர்கள் இவர்களிடம் சாஸ்திரங் கேட்கிறதும், அஞ்

ஞானிகள், துலுக்கர், இன்னும் கெட்ட கிறீஸ்துவர்களிடம் போய் மந்திரித்துக்கொள்வதும் குருட்டுப் பத்திதான். இப்படிச் செய்வது கனமான பாவம். ஏனெனில், சர்வேசுரன் மாத்திரம் அறிந்து கொடுக்கக் கூடியதைப் பசாசினிடம் அண்டிக் கேட்டால், சர்வேசுரனுக்குத் துரோகம். இப்பேர்ப்பட்ட குருட்டுப் பத்திக்கு வேத அறிவீனமும் விசுவாசக் குறைவுமே காரணம். வேத அறிவீனத்தால் சில கிறீஸ்துவர்கள் சர்வேசுரனும் பசாசும் சரிசமான வல்லமையுள்ளவர்களென்றும், இருவருக்கும் பயப்பட்டு, இருவர் கோபத்தையும் அமர்த்தி, இருவரையும் ஆராதிக்கக் கடனென்றும் எண்ணிக்கொள்ளுகிறார்கள். இதைவிட அதிக மூடத்தனமான பிசகு வேறுண்டோ? சர்வேசுரன் ஒருவரே சர்வத்துக்கும் வல்லவர். சர்வத்துக்கும் ஆதி கர்த்தாவான சிருஷ்டிகர்; சம்மனசுகளுக்கும் மனிதர்களுக்கும் உலகத்திலுள்ள சகல பிராணிகளுக்கும் உன்னத அதிகாரியான எஜமான். பசாசோவென்றால் நிசிதமான ஓர் அரூபி. சம்மனசின் அந்தஸ்திலிருந்து சர்வேசுரனுக்கு விரோதம்பண்ணத் துணிந்த க்ஷணமே தனது அந்தஸ்திலிருந்து தாழ்த்தப்பட்டு, தன் சுதந்தரங்களை இழந்துவிட்டு, தேவ வல்லமையின் பலத்தினால் நரக நித்திய அக்கினிப் பாதாளத்தில் தள்ளப்பட்டது. அப்போது துவக்கி, பசாசானது சர்வேசுரனுடைய நீச



அடிமையாகிவிட்டது. இன்னும் அதிகமாய்ச் சொல்ல, நமதாண்டவரின் சர்வ சக்தியுள்ள கரத்தினால் விலங்கிடப்பட்ட நாயைப்போன்றது. அங்குமிங்கும் அசைந்து நடமாடினாலும் சர்வேசுரனால் குறிக்கப்பட்ட எல்லையைத் தாண்டமுடியாது.

பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள பேர்பெற்ற ஜோப் என்பவர் சரித்திரத்தை வாசிப்போமானால், பசாசு தனது சொந்த பெலத்தினால் எதுவும் செய்ய முழுதும் சக்தியற்ற பிராணியென்று வெளியரங்கமாய்த் தெளிவாகும். தனவந்தரான ஜோப் என்பவர் சர்வேசுரனுக்கு முன் பயபக்தியுள்ளவரானதால் பசாசு அவர்மேல் வெறுப்பாகி அவருக்குத் துன்ப துரித துயரங்களை உண்டாக்கினால் சர்வேசுரன்மட்டிலுள்ள பிரமாணிக்கத்தில் பிசகிவிடுவாரென்று எண்ணமுற்று, தன்னால் ஒன்றும் இயலாததால், அவரைச் சோதிக்கும்படி சர்வேசுரனிடம் உத்தரவு கேட்க, சர்வேசுரனும் கேட்ட உத்தரவைக் கொடுக்கச் சித்தமானார். அக்ஷணமே, மனுக்குலத்தின் சத்துராதியானது அந்த மகாத்துமாவின்மேல் அகோர கோபாவேஷங்கொண்டு அவர் சொத்துகளைக் கொள்ளையிட்டது, ஆடுமாடுகளை நாசமாக்கினது, அவருடைய வேலைக்காரர்களையும் பிள்ளைகளையுமே கொன்றுபோட்டது. இதுவுந்தவிர, ஜோப் என்பவரின் தேக முழுவதும் அருவருப்புக்

குரிய புண்களால் நிறைந்து, உச்சந்தலை துவக்கி உள்ளங்கால் பரியந்தம் ஏக ரணமாயிற்று.

ஆகிலும் ஜோப் என்கிற மகாத்துமா, விசுவாசத்திலும் தேவ சிநேகத்திலும் ஸ்திரமாயிருந்து, சர்வேசுரன்பேரில் தமது நம்பிக்கையை ஊன்றி **"ஆண்டவர் கொடுத்தார், ஆண்டவர் எடுத்துக்கொண்டார், ஆண்டவர் திருநாமம் வாழ்த்தப்படக்கடவதாக"** என்னும் அமிர்தமான வார்த்தைகளை மிக்க மன அமரிக்கையுடன் பிரசித்தமாய் உச்சரித்துக்கொண்டுவந்தார். ஆகையால் சர்வேசுரன் அவருடைய மாறாத விசுவாசத்துக்கு கைம்மாறாக, அதிகமதிகமாய் நவ வரங்களையும் ஆசீர்வாதங்களையும் பொழிந்தருளத் திருவுளமானார். இந்தச் சோதனையிலே, ஜோப் என்பவருக்கு வெற்றி, சர்வேசுரனுக்கு மகிமை; பசாசுக்கோ நிசிதமான தாழ்மை.

இதனால் நீங்கள் அறிந்துகொள்ளவேண்டிய விஷயமென்னவென்றால்: பசாசு தன்னாலேயே, சர்வேசுரனுடைய பிரமாணிக்க ஊழியர்களுக்கும், மெய்யான பத்தியுள்ள கிறீஸ்துவர்களுக்கும் விரோதமாய் யாதொன்றும் செய்யமுடியாது; தன் கேட்டுக்குப் பிற்பாடு …ருஷ்டிகளுக்கெல்லாம் கேடுகெட்ட வஸ்து…யிற்று. இப்படியிருந்தாலும் தன் பூர்வீக அந்தஸ்தை மறக்கிறதில்லை, தன் அகங்கார கர்வத்தை மாற்றுகிறதில்லை; தனக்குக் கிடைத்த நரகத்திலேயே ஒருவகை ஆறுதல்



அடையும்படி சர்வேசுரனுக்குரிய ஆராதனை வணக்கத்தை மனிதர்களிடத்திலிருந்து அபகரித்துக்கொள்ள பிரயாசைப்படுகிறது. அஞ்ஞானிகள் தனக்குத் தெய்வ வணக்கம் காண்பிக்கவும், சில கிறீஸ்துவர்கள் பொய்யான குருட்டுப்பத்தி அனுசரிக்கவும் வழிபண்ணிக்கொள்ளுகின்றது. ஆனால் மெய்யான நன்மை யாதொன்றும் அதனால் செய்யவேமுடியாது.

இப்படியிருக்க, அஞ்ஞான சாஸ்திரங்கள், பார்த்து, பசாசின் உதவியைக் கேட்கும்போது பசாசின் வல்லபத்திலும், ஆதரவிலும் நம்பிக்கை வைக்கிறீர்களென்று அத்தாட்சி. இதைவிட சர்வேசுரனுக்கு அதிக விரோதமான நிந்தை, துரோகம் வேறுண்டா? உங்கள்மேலும் உங்கள் குடும்பத்தின்மேலும் தேவ கோபசாபமும் ஆக்கினையும் விழக் காரணமாயிருக்கும் பாவம் இதைப்பார்க்கிலும் பெரிதுண்டோ? வல்லமை பொருந்திய ஓர் இராஜாவின் சன்னதியில் ஒரு அடிமை நிற்க, பிரசைகளில் ஒருவன் இராஜாவைப் பார்த்தும் சட்டைபண்ணாமல் அடிமைக்கு விசேஷ இராஜ வணக்கம் செலுத்துவானாகில், உடனே அவனை இராஜ துரோகியென்றும், குழப்பக்காரனென்றும் கோபித்து, அடித்து உபாதிப்பார்களல்லவா? சர்வ வல்லபமுள்ள இராஜாவாகிய சர்வேசுரன்முன் பசாசானது சபிக்கப்பட்ட அடிமையாயும், சர்வேசுரன் அனுமதியின்றி யாதொன்றுக்கும் இயலாத நீச வஸ்து

வுமாயுமிருக்க, அஞ்ஞான அபத்தம் நிறைந்த சாஸ்திரம் அனுசரித்து, அடிமைக்கு வணக்கஞ்செய்யத்துணிகிற அறிவீன கிறீஸ்துவர்களுக்கு ஐயோ கேடு, இதைப்பற்றி இன்னும் கேளுங்கள்.

**வியாதிகள்** : வியாதிகள் ஜென்மப்பாவத்திலிருந்து இயற்கையாய்த் தொடர்ந்துவந்த தோஷங்களில் ஒன்று. நாம் இவ்வுலகப்பற்றுதலை ஒழித்துவிடவும், நமது புண்ணியத்தைப் பரீட்சிக்கிறதற்கும், நாம் பரலோகத்துக்கு பேறுபலன்களைச் சேகரிக்கும்பொருட்டும் நமக்கு வியாதி வரும்படி சர்வேசுரன் விட்டுவிடுகிறார். ஆகையால் வியாதி வந்தவுடன், சௌக்கியத்துக்கும் ஜீவியத்துக்கும் அதிபதி கர்த்தாவான நமதாண்டவரிடம் ஜெபத்தின் வழியாய் அடைக்கலம் புகுந்து அவருடைய ஒத்தாசையை இரந்து மன்றாடுவது உத்தமம். ஆனால், வியாதிக்குக் காரணம் கெட்ட அரூபிகளென்றே எண்ணிக்கொண்டு சில மதியீன கிறீஸ்துவர்கள் பசாசின் காரியக்காரர் சூனியக்காரர் இவர்கள் உதவியால் வியாதியைச் சொஸ்தமாக்கத் தேடுகிறார்கள். இது சர்வேசுரன் கண்முன்பாக எப்பேர்ப்பட்ட கொடூர பாதகம், எவ்வளவோ அருவருப்பான செய்கை!

பழைய ஏற்பாடு அரசராகமத்தில் எழுதியிருக்கிறதாவது: இஸ்ராயேலித்தார் இராஜாவாகிற ஒக்கோசியுஸ் என்பவன் வியாதியாய்



விழுந்தவுடன் அஞ்ஞானப் பூசாரிகளிடம் போய் ஆலோசனை கேட்கவும், வியாதி தீர நிண்ணப்பஞ்செய்யவும், தமது ஊழியர்களை அனுப்பினான். நமதாண்டவர் அவன்மேல கோபங்கொண்டு, எலியாஸ் தீர்க்கதரிசியை அவர்களிடம் அனுப்பவே, அவர் அந்த ஊழியரை நோக்கி: "உங்களுக்கு மெய்யான சர்வேசுரனில்லையா? பேயெல்சபேப் பேயின் பூசாரிகளை வினவ ஏன் போனீர்கள்? இதற்குத் தண்டனையாக உங்கள் அரசன் **அவன் படுத்த** படுக்கையைவிட்டு எழுந்திருக்காமல் சாவானென்று சர்வேசுரன்பேரால் நீங்கள் போய்ச் சொல்வீர்களாக" என்றார். (4 அரச. I. 1-3). அப்படியே இராஜன் தேவ கோப சாபத்தால் அவலமாய்ச் செத்தான். இந்த சரித்திரத்துக்கும், நீங்கள் முன் வாசித்த ஜோப் என்பவரின் சரித்திரத்துக்கும் முழுதும் வித்தியாசமிருக்கிறதல்லவா? அந்த மகாத்துமாவானவரை வியாதி முதலிய துன்பங்களினால் சோதிக்க பசாசுக்குச் சர்வேசுரன் உத்தரவு கொடுத்திருந்தபோதிலும், ஜோப் என்பவர் சொஸ்தமாவதற்குப் பசாசை அண்டிப்போனாரோ? பசாசை அண்டினால், மோசமும் நாசமுமேயொழிய வேறு நன்மையில்லை என்று நிச்சயித்து, தேவ இரக்கத்தையே மன்றாடினார். சர்வேசுரனும் அவர் மன்றாட்டைக் கேட்டருளி, அந்தப் புண்ணியவாளனைச் சுகப்படுத்தி, புதிதான உபகாரங்

களைத் திரளாயளித்து தலைமுறை தலைமுறையாக மகிமைப்படுத்தினார். இதற்கு விரோதமாய், ஜோப் என்பவர் நன்னெறியில் பிசகி, பேய்க் காரியங்களைச் செய்திருப்பாரானால், நிர்ப்பாக்கியனாய் உயிரை இழந்து, சர்வேசுரனாலும் மனுஷராலும் சபிக்கப்பட்டவராகி, நித்தியகாலம் நரகக் குழியில் தள்ளப்பட்டிருக்கக்கூடும்.

உங்கள் ஆத்தும நன்மைகளையும் ஈடேற்றத்தையுமுன்னிட்டு இந்தச் சரித்திரங்களால் பலனடையப் பிரயாசைப்படுவீர்களாக. வியாதிகாலத்தில் சேசுவின் திரு இருதயத்தை நோக்கி மன்றாடி துன்பவருத்தங்களை ஒப்புக்கொடுத்து பொறுமையுடன் சகித்துக்கொண்டால், உங்களை ஆண்டவர் ஆசீர்வதிப்பார்; உங்களாத்தும பிரயோசனத்துக்களவாய் சௌக்கியமுமளிப்பார். இதற்கு மாறாக, நோயாளிகளின் பெற்றோர்கள் மந்திரவாதிகளைக் கூப்பிட்டு பசாசுக் கிரிகைகளைச் செய்யத் தூண்டினால், பசாசின் ஒத்தாசையைக் கேட்பதுமல்லாமல் நிர்ப்பாக்கியமான முடிவுக்கு காரணமாயிருப்பார்கள். ஏனெனில், இந்தக் குடும்பத்தின்மேல் சர்வேசுரனுடைய சாபம் விழும். நோயாளியின் சரீரத்துக்கும் சாவு, ஆத்துமத்துக்கும் நித்திய சாவு. இதையறிந்த நீங்கள், இப்படிப்பட்ட பரிகரிக்கமுடியாத நஷ்டம் உங்கள் அன்பரானவியாதிக்காரருக்கு உண்டாகாதபடிக்கு கவனமாயிருப்பீர்களாக.



## ii. நல்லநாள் கெட்டநாள் பார்க்கிற சாஸ்திரம்.

ஜனங்களுக்குள் வெகு விஸ்தாரமாய் வழங்கிவருகிற அஞ்ஞான சாஸ்திரமென்னவென்றால்: ஓரிடத்துக்கு பிரயாணம் துவக்குமுந்தி, ஓர் அலுவலைத் தொடங்குமுந்தி, நல்லநாளா, கெட்டநாளாவென்று ஜோசியரிடம் யோசனை கேட்கிறார்கள். மேலும், சில கிறீஸ்துவர்கள் தங்களைச் சுற்றியிருக்கும் அஞ்ஞானிகளின் வழக்கத்தை அனுசரித்து, வாரத்தின் அந்தந்த நாளில் அந்தந்தத் திசை **சூலமென்று** சொல்லுகிற சாஸ்திரத்தை **நம்பிக்கொண்டு,** சூலமாகிற திசையை நோக்கி பிரயாணம் பண்ணவேமாட்டார்கள். மேலும், ஒரு நாளில் **நாழிகை** வகையில் தூர்க்குறியோவென்று பார்த்து, ஒரு பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் வைக்கவோ, ஒரு பிரியாது துவக்கவோ, ஒரு உபகாரம் கேட்கவோ, பெண் பேசப் போகவோ, கலியாண முகூர்த்தம் தீர்மானிக்கவோ, ஒரு வீட்டுக்காரியத்தைத் திட்டம்பண்ணவோ, நற்குறியான நாழிகையென்னவென்று **பொய்யான** அஞ்ஞான ஜோசிய சாஸ்திரம் பார்ப்பார்கள்.

## iii. சகுனசாஸ்திரங்கள்.

நாள், நாழிகை சாஸ்திரத்தோடு, சில மிருக பிராணிகளைக் கண்ணோக்கிப் பார்க்கிறதும், அவைகளின் சத்தத்தைக் கவனித்து நற்சகுன

மோ துற்சகுனமோவென்று கணிப்பதும் அநேகருடைய வழக்கம். அப்படியே **பல்லியும்** அதைப்போலொத்த வேறு சில ஜீவஜெந்துக்களும் தீர்க்கதரிசன வரமடைந்திருக்கிறதாக எண்ணிக்கொண்டு, காலையில் மேற்கே, மாலையில் கிழக்கே **கேவுளி** கத்தினால் நற்சகுனம், அலுவலில் அனுகூலமென்பார்கள். வேறே திசையிலானால் துவக்கின காரியம் பலிக்காதென்பார்கள்.

அப்படியே காக்கைகளில் அண்டங்காக்கைகள் கரைத்தால் கெட்ட குறி; கழுத்தில் வெள்ளையிருக்கிற **மணிக்காக்கை** கரைத்தால், அந்தப் பக்கத்து வீட்டாருக்கு சுபசேதிகள் அறிவிக்கப்படுமாம். ஏன் இந்த வேற்றுமை என்று கேட்டால், "**அப்படித்தான்**" என்று பதில் கூறுவார்கள்.

ஒரு விசேஷ காரியத்தை ஆரம்பிக்க வீட்டைவிட்டு வெளியே புறப்படும்போது யாராவது தும்மினால் அந்தக் காரியம் பலிக்கவே பலிக்காதாம். ஒரு காரியத்தை அனுகூலமாக்க அல்லது பிரதிகூலமாக்க **தும்மலுக்கு** அவ்வளவு வல்லமையுண்டாம்.

*ஒரு வேலை செய்யப்போகும் வழியில் ஒரு பூனை, ஒரு பாம்பு குறுக்கே போனால், அந்த முயற்சி சித்திக்காதாம். உலக்கையைக் கையில் கொண்டு ஒரு பெண்பிள்ளை எதிரே வந்தால், கெட்ட சகுனமாம்.



ஓர் வீட்டைப் புதிதாய்க் கட்டி, கிரகப் பிரவேசம் பண்ணும் நாளில், குரு சுவாமியாரை அழைப்பித்து வீட்டை மந்திரிக்கச் செய்து நமதாண்டவர் ஆசீர்வாதம் குடும்பத்தார்மேல் பொழியும்படி மன்றாடுவது நல்ல கிறீஸ்துவர்களுக்குள் வழங்குகிற பத்தியுள்ள முறை. இதற்கு மாறாக, அஞ்ஞான குருட்டுப் பத்தியை அனுசரிக்கிற சில கிறீஸ்துவர்கள் செய்கிறதென்னவென்றால் :—அதிர்ஷ்ட ராசியுள்ள கிழவிகள் கூடி, புது வீட்டை எச்சரிக்கையாய்ப் பெருக்கின பிறகு, வீட்டு முத்தத்தில், ஒரு பக்கத்தில் ஓர் மரத்தட்டில் **உப்பும்**, வேறு பக்கத்தில், ஓர் பாத்திரத்தில் **தண்ணீரும்** வைத்துப் போய்விடுவார்களாம். அந்த இராத்திரியில் கெட்ட அரூபிகள் வந்து உப்பிலும் தண்ணீரிலும் தங்கள் பாகங்களை எடுத்துக்கொண்டு திருப்திகரமாய்ப்போய்விடுமாம். அப்போது துவக்கி பசாசுகளுக்கு அந்த வீட்டில் இடமில்லையாம். மறுநாட்காலையில் குடும்பத்தாரெல்லோரும் வீட்டில் பிரவேசித்து அமரிக்கையாய்க் குடியிருப்பார்களாம்.

பூர்வீக அஞ்ஞான உரோமை இராச்சியத்தில் இரண்டு ஜோசியர் அல்லது மந்திரவாதிகள் எப்போதாவது தனியே ஒருவரொருவரைச் சந்தித்தால், ஜனங்களை எவ்வாறு ஏமாற்றி தங்களிஷ்டப்படி எதையும் நம்பச் செய்தார்களென சொல்லிச் சொல்லி சிரிப்பார்களாம். இக்காலத்து ஜோசியர்களும் மந்திர

வாதிகளும் இவ்வாறு பேசி சிரித்துக்கொள்ள இடமுண்டு. ஒரு பிள்ளை பிறந்தவுடனே, ஜோசியனைக் கேட்கப்போனால், யாதொன்றுக்கும் தயங்காமல் பிள்ளை பிறந்த நாளின் நட்சத்திரத்தின் பேரைச் சொல்லி, கிரகம் அதிர்ஷ்டம் அல்லது துரதிர்ஷ்டமென்று முன்னுரைப்பான். உத்திர நட்சத்திரமென்றால் சம்பூரண பாக்கியமாம்.

கலியாணத்துக்குமுந்தி, ஜோசியனை ஆலோசிக்கப்போனால், பஞ்சாங்கத்தை எடுத்து, மாப்பிள்ளை பிறந்த நாள் நட்சத்திரத்தையும், பெண் பிறந்த நாள் நட்சத்திரத்தையும் பார்த்து, அவைகள் ஒத்திருந்தால் முகூர்த்தம் தீர்மானிப்பான். எதிர்த்திருந்தால், 'பொருத்தமில்லை' வேறு பெண், வேறு மாப்பிள்ளை தேடவேண்டுமென்பான். வானலோகத்தில் நட்சத்திரங்கள் எப்படியிருந்தாலும் சரி, பஞ்சாங்கய்யர் கையில் **பணம்** வந்தால், கலியாணக்காரர் மனம்போல பொருத்தமும் வந்துவிடும்.

வியாதிசமயத்தில், மந்திரவாதியைக் கூப்பிடப்போனால், 'அவன் வீட்டுக்குவந்து, நோயாளிக்கு முன்பாக முணு முணு என்று சிறு மந்திரங்களை ஓதுவான். கைச்சயிக்கினை, முகச் சாடைகளை வெகு அரோசிகமாய்க் காண்பிப்பான்.' தலையை வலதுபக்கமும் இடது பக்கமுமாய்க் கொடூரமாய் ஆட்டி உருட்டுவான். கையிலிருக்கிற வேப்பிலை



யைக்கொண்டு ஆடி அடித்துக்கொள்வான். இப்பேர்ப்பட்ட பிரயாசத்துக்கு தனக்குரிய கூலியையும் மறவாமல் சொல்லி சத்தம்போடு[illegible]ான். இவ்வகையான செய்கையில் நம்பிக்கை வைப்பது எவ்வளவோ நகைப்புக்குரிய விஷயம்.

இதைவிட அதிக நகைப்புக்கும் பழிப்புக்குந் தக்க செய்கை வேறொன்று உண்டு. சந்திர கிராண நேரத்தில், வானத்திலே ஒரு பிரமாண்டமான மீன் தோன்றி, சந்திரனை விழுங்கும்படி பிரயாசப்படுமாம். அஞ்ஞானிகள் என்ன செய்கிறார்களென்றால், சத்தம் போட்டால், மீன் ஓடிப்போகுமென்று எண்ணிக்கொண்டு தம்பூர்களையும் தப்பையும் போட்டு அடிப்பார்கள். முற்காலத்திலே இப்படியானாலும், இக்காலத்தில் வானத்தைத் தொடும்படியான நவீன பீரங்கிகளுண்டே, அவைகளை உபயோகிக்கிறார்களா? இன்னும் தப்பைத்தான் போட்டு அடிக்கிறது போதுமென்கிறார்கள்.

அஞ்ஞானிகளுக்குள்ளே முக்கியமாய் வழங்கிவருகிறதும், அறிவீனக் கிறீஸ்துவர்களாலே அநேகமாய் அனுசரிக்கப்படுகிறதுமான கணக்கில்லாத அஞ்ஞான சாஸ்திரம் பேய்க் காரியங்களுக்குள்ளே சிலவற்றை எடுத்து வரைந்திருக்கிறோம். ஆகிலும், இந்நாட்களில் வேதப்பயிற்சி தேர்ச்சியாயிருப்பதாலும், விசுவாசம் வளர்ந்தோங்கிறதாலும்,

கிறீஸ்துவர்கள் இப்படிப்பட்ட பொய்யான கொள்கைகளைத் தவிர்த்து தேவசாபத்தையும் விலக்கிவிடுவார்களென்று நம்பிக்கையுண்டு.

விசுவாசமே உயிராகக்கொண்ட கிறீஸ்துவர்கள், ஒரு அலுவல், ஒரு பிரயாணம், ஒரு பிரதான முயற்சி துவக்குமுந்தி, சேசுவின் திரு இருதயத்தையும், அர்ச். தேவமாதாவையும், சகல சம்மனசுகள் அர்ச்சியசிஷ்டவர்களையும் பார்த்து வேண்டிக்கொண்டு, ஜெபத்தினால் அவர்களுடைய வல்லபமுள்ள ஆதரவைத் தேடவேண்டியது. பரலோக ஒத்தாசையைத் தேடிக்கொண்டே, நமதாண்டவரால் விலங்கிடப்பட்டு, ஒன்றுஞ் செய்யக்கூடாத பசாசுக்குப் பயப்படுகிறது சர்வேசுரனுக்கு நிந்தையல்லவா! சர்வ வல்லபமுள்ள சர்வேசுரன் உலகத்தை உண்டாக்கி காப்பாற்றி வருகிறதுபோல் நாட்களையும், நாழிகைகளையும் அவரே உண்டாக்கி நீளித்திருக்கச் செய்கிறாரென்று சகலருக்கும் தெரிந்தகாரியம். சர்வேசுரன் தமது பராமரிப்பை அகற்றுவாரானால், சூரியனும், சகலவித பூதியங்களும் ஒரு நிமிஷத்தில் நாசமாக்கப்படும். பகலுமிருக்காது, இராவுமிருக்காது. ஆகையால் ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு மணியையும், வேதாகமத்தில் சொல்லியிருக்கிறபடி, **இதோ நமதாண்டவர் உண்டாக்கின நாள்,** இதோ நமதாண்டவர் சதாகாலமும் ஆசீர்வதித்த நாள் என்று சொல்லக்கடவோம்.



சில நாள் நல்ல நாள் சில நாள் கெட்ட நாளென்று சொல்வோமானால், சர்வேசுரனுடைய வேலைகளில் சிலவற்றைக் கெட்டவைகளென்று சொல்லுகிறோம். இதற்கு அர்த்தம் அந்த நாட்கள் சர்வேசுரனுக்குச் சொந்தமில்லாமல் பசாசுக்கே சொந்தமாயிற்று. இவ்வித கொள்கை சர்வாதிகர்த்தருக்கு எவ்வளவோ நிந்தை. நமது ஜீவியத்தில் ஒவ்வொரு நிமிஷமும் நம்மை வெகு நேசபாசத்தோடு காத்துவரும் தேவபராமரிக்கைக்கு எவ்வளவோ விரோதம்.

சிந்துதேச அப்போஸ்தலரான அர்ச். சவேரியாருடைய விசுவாசத்தை நமக்கு மேற்பாடமாக வைத்துக்கொள்வோமாக. சத்தியவேதத்தைப் போதிக்கும்படி சீனா, ஜப்பான் தேசத்துக்குப் புறப்படுமுன் அவர் எழுதினதாவது: "என் சிநேகிதர்கள் என் துணிகரத்தைப்பற்றி அதிசயப்படுகிறார்கள். நானோ அவர்களின் விசுவாசக் குறைவைப்பற்றி அதிசயப்படுகிறேன். புசலை ஆண்டு நடத்துகிற இராஜா நமதாண்டவரல்லவோ? சர்வேசுரனைத் தவிர வேறொன்றுக்கும் பயப்படமாட்டேன். சர்வாதி கர்த்தருக்குப் பயப்படுகிறதைவிட வேறெந்த காரியத்துக்காவது பயப்பட என்னை கருத்திருந்தாலும், அவைகள் எனக்கு பரவாயில்லை. சிருஷ்டிகளாலே நேரிடக்கூடியதை, என் சிருஷ்டிகரே, அளவிட்டு திட்டம்பண்ணியிருக்கிறார். தேவபராமரிக்கையின்மேல் நம்

பிக்கை குன்றிப்போவதே பெரிய அபாயம். காற்றானாலும் பேயானாலும், சர்வேசுரன் அநுமதியின்றி, நமக்கு விரோதமாய் யாதொன்றும் நடத்துவது அசாத்தியம்.

புத்தியுள்ள கிறீஸ்துவர்கள், இனிமேலாக அர்ச். சுவேரியாருடைய போதனை சாதனையைப் பின்பற்றி, சர்வேசுரனுடைய அடிமையாகிற பசாசுக்குப் பயப்படாமல், அஞ்ஞானக் காரியங்களை முழுதும் அகற்றிவிடுவார்களாக. சர்வேசுரனைத்தவிர வேறொன்றுக்கும் அஞ்சமாட்டேனென்று அர்ச். சவேரியார் எழுதினதுபோல, நாமும் உயிருள்ள விசுவாசத்தோடு அதே வார்த்தைகளை நமது மனதில் எழுதி பதித்துக்கொள்வோமாக.

10-ம் அதிகாரம்.

# நல்ல கிறீஸ்துவர்களுக்கேற்ற சில புத்திமதிகள்.

## 1. பிரியாதின்பேரில்.

கிராமத்தார்களுக்குள் நடக்கிற பிரியாதுகளைத் தேசத்தார்களுக்குள் நடக்கிற யுத்தத்துக்கு ஒப்பிடலாம். ஒரு தேசத்தாருடைய உரிமை சுதந்தரங்களையும் ஆதாயங்களையும் இன்னொரு தேசத்தார், அநீதமாய் அபகரிக்கப் பார்க்குங்கால் தங்களைத் தற்காத்துக்கொள்ள வேறுவகையில்லாமல் கட்டாயத்தின் பேரில் யுத்தம் செய்ய ஏற்படுகிறார்கள். இந்த யுத்தம் நீதி பொருந்திய யுத்தம். ஆனால் மகிமை பெருமை ஆசையாலும், பணம் தேச விரிவு ஆவலாலும், இன்னுமற்ற இலௌகிக பாசபற்றுதலாலும் ஏவப்பட்டு யுத்தம் துவக்குகிறதுண்டு. இந்த யுத்தம் அநீதம்பொருந்திய யுத்தம். இத்தன்மையாக, ஓர் சிறிய யுத்தம்போல், இருபேருக்குள் இருகட்சிக்காரருக்குள் தொடரப்படுகிற பிரியாதுகளில் நீதியுமுண்டு, அநீதியுமுண்டு. யாதாமொருவன் நியாயத்துக்கு விரோதமாய், மிதமிஞ்சின

விதமாய், உன்னை நிந்தித்து அடித்துக் காயப்படுத்தினாலும், உன் சொத்து செல்வத்தை அபகரித்துக்கொண்டாலும், முந்த எதிராளியோடு இணக்கமாய்ப் பேசி நயமும் சமாதானமுமான வழி உபாயங்களைக்கொண்டு நியாயம் பெற பார்ப்பது உத்தமம். இது தவறினால், சர்க்கார் கச்சேரியில் வியாச்சியம்போடலாம். இது நியாயமான பிரியாதாகும். ஆகிலும் பகை வர்மத்தாலும் பழிவாங்கும் எண்ணத்தாலும் தூண்டப்பட்டுப் பிரியாதை ஒருபோதும் துவக்காதேயுங்கள். உங்களுக்கு நஷ்டமான கீர்த்தியையும் சொத்துகளையும் மறுபடியும் கைப்பற்றிக்கொள்ளவேண்டிய எண்ணத்தோடு நீதி சட்டத்துக்கு ஒத்தவிதமாய் விசாரணை நடத்தும்படி பாருங்கள். உங்களுக்குள் இசைந்து ஓர் ஒப்பந்தம் உடன்படிக்கை வழியாய் முடிவு செய்யக்கூடிய விஷயங்களில் முதலாய் வியாச்சியம் செய்து முடிப்பது அவசரமென்பதாக, பிராதைத் தூண்டிவிட்டு நடத்தி அதினால் பணஞ் சம்பாதித்துப் பிழைக்கிற சில ஆட்கள் உண்டு. அவர்கள் சொல்லும் துர் ஆலோசனைக்கு காது கொடுக்காதேயுங்கள். பஞ்சாயத்தால் கிரமமான ஓர் முடிவைச் செய்துகொண்டால், எவ்வளவோ தொந்தரவும் அலைச்சலும் நீங்கிப்போகும், எவ்வளவோ பணம் மீதமாகும். கச்சேரியில் நூற்றுக் கணக்காய் ரூபாய்களைச் செலவழித்து, குடும்பத்தை ஓடு எடுக்கும்படி செய்வதைவிட,



ஒப்பந்தத்துக்காக அற்பத் தொகையைப் பரித்தியாகஞ் செய்வது புத்தி நியாயத்துக்கு உகந்ததல்லவா?

ஒருவருடைய பிரியாது நீதி பொருந்தியதாயிருக்கிறதுமாத்திரம் போதாது. அதை நடத்தவேணுமானால் சர்வேசுரனுடைய கற்பனைக்கும் மனச்சாட்சிக்கும் முழுதும் பொருந்திய வகை உபாயங்களைத் தெரிந்துகொள்வது கடன். "பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக" என்ற சர்வேசுரனுடைய பிரசித்தமான கற்பனைப்பிரகாரம், நியாயாதிபதிகளுக்கு முன்பாக, உண்மைக்கு விரோதமாய், பொய்யான வாக்குமூலஞ் சொல்லவோ, கள்ளப்பத்திரம் தஸ்தாவேஜுகளை ஆஜர்ப்படுத்தவோ ஒண்ணாது. பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்கள் பொய், பொய்யாணை என்ற இருவகைப் பாவத்தை கட்டிக்கொள்ளுகிறார்கள்: (a) ஒருகாரியம் உண்மையல்லவென்று அறிந்திருந்தும், ஒருவனை ஏமாற்றவேண்டுமென்கிற கருத்தோடு அதை வெளியிட்டுச் சொன்னால் **பொய்.** ஒரு பிரியாது அனுகூலமாகவோ, ஒரு தின்மையினின்று தப்பித்துக் கொள்ளவோ, ஒரு நன்மையைக் கைக்கொள்ளவோ, இந்தத் தின்மை நன்மை எவ்வளவு கனமானதானாலும், ஒருபொழுதும் பொய் சொல்லலாகாது.

"பொய் சொல்லும் உதடுகள் சர்வேசுரனுக்கு முன்பாக அருவருப்புக்குரியவைகள்"

என்று நீதிமொழியாகமத்தில் சொல்லியிருக்கிறது. (அ. 11.)

(b) சர்வேசுரனுக்கு முன்பாகவும், நீதிபதிக்கு முன்பாகவும் உண்மை சொல்வதாகச் சத்தியம் பண்ணிவிட்டு மீறுகிறதானால், அது **பொய்யாணையாகும்**. பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்கள் தங்கள் ஆணையை மீறி, ஒரு அபத்தத்தைக் கூறும்படி சர்வேசுரனுடைய அதிகாரத்தை உபயோகித்து தங்கள் அபத்தத்துக்கு சர்வேசுரனை உடந்தையாக்கிவிடுகிறார்கள். இது சர்வேசுரனுக்கு எவ்வளவோ நிந்தை அவமானம். இதினால், அநேக தேசங்களில் பொய்யாணை இடுகிறவர்கள் மிகுந்த வெறுப்போடு நடத்தப்பட்டார்களென்று அறிவது அதிசயமல்ல. எஜிப்து தேசத்தாருக்குள் கள்ளப்பிரமாணஞ் செய்த குற்றவாளிகளுக்கு மரண தண்டனையிடப்படும். ஐரோப்பாகண்டத்தில் சில இராச்சியங்களில் பொய்யாணை இட்டவர்களின் கரத்தைத் தரித்துப் போடுவது புராதன வழக்கம். பிராஞ்சுதேச அர்ச். லூயிஸ். இராஜா காலத்தில் கள்ளச் சத்தியம் செய்தோருக்கு ஆக்கினையாக நுனி நாக்கை வெட்டிப்போடப் பண்ணுவார். சர்வேசுரன் பொய்ச்சத்தியம் பண்ணுகிறவர்களை அநேகமாய் இம்மையிலேயே தண்டிக்கச் சித்தமாகிறாரென்று பின்வரும் சரித்திரத்தால் அறியலாம். சார்ல்மன் சக்கரவர்த்தி அரசாளும் காலத்தில், திரவிய சம்பத்துள்ள



ஒரு குடும்பத்திலே ஓர் வாலிபன் சொத்துப் பொருள்களின் பெரும்பாகத்தை அநீதமாய்த் தனக்கென்று அபகரித்துக்கொண்டு தன் சகோதரிகளை தரித்திர ஸ்திதியில் விட்டுவிட்டான். இதினால் கஷ்ட நஷ்டப்பட்ட பெண்கள், சக்கரவர்த்தி பாதத்தில் வந்து விழுந்து, தங்களின் சகோதரன் அபகரித்துக்கொண்ட சொத்துகளை வாங்கிக்கொடுத்துக் காப்பாற்றும்படியாக கெஞ்சிக் கேட்டார்கள். சக்கரவர்த்தியின் நியாய ஸ்தலத்துக்கு மேற்கூறிய வாலிபனை விசாரணைசெய்ய அழைக்க, அவன் தன் சகோதரிகளுக்கு யாதொன்றும் கொடுக்க வேண்டியதில்லையென்று வெளியரங்கமாய்ச் சத்தியம் பண்ணினான். ஆகிலும் வேதசாட்சியான ஒரு மேற்றிராணியாரின் அர்ச்சியசிஷ்ட பண்டத்தின்மேல் இந்தச் சத்தியத்தைப் பண்ண சக்கரவர்த்தி கட்டளையிடவே, அவனும் தன் சகோதரிகளுக்கு அநீதம் செய்யவே இல்லையென்று பிரமாணமாய்ச் சொன்னான். அக்ஷணமே, இரத்தம் இரத்தமாய்க் கக்கிச் சற்று நேரத்துக்குப்பிறகு அவலமாய் மடிந்து இம்மையிலடைந்த இத்தண்டனையோடு, மறுமையிலும் தன் பாவத்துக்குக் கொடூர ஆக்கினையைப் பெற்றுக்கொள்ள உன்னத நீதிபதிமுன் பிரசன்னமானான்.

பொய்ச்சாட்சி சொன்னவர்களும், இதினால் பிறத்தியாருக்கு நஷ்டம் வருவித்தவர்களும், தங்கள் சக்திக்களவு அந்த நஷ்டக்

கெடுதிகளைப் பரிகரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும் பொய்ப் பிரியாது செய்து பொய்ச்சாட்சிகள் ஏற்படுத்தியிருந்தால் இந்தப் பரிகாரம் அந்தப் பொய்ச் சாட்சிகள் மேலும் சுமந்த கண்டிப்பான கடன்.

பிரியாது என்கிற விஷயத்தைப்பற்றி உங்களுக்கு புத்திமதி சொல்லும்போதே, கிறீஸ்துவர்களுக்கு துர்மாதிரிகையான வழியுமாய், குடும்பத்தின்மேலும் முழுக்கிராமத்தின்மேலும், தேவகோப சாபம் வருவிக்கக் காரணமுமாயிருக்கிற ஒரு விசேஷ பிரியாதைப்பற்றி கவனஞ் செலுத்தும்படி கேட்கிறோம். அந்த விசேஷ பிரியாது ஏதென்றால், குருவானவருக்கும், இன்னும் மேற்றிராணியாருக்கும் விரோதமாகக் கிறீஸ்துவர்களே நடத்திவருகிற வியாச்சியந்தான்.

ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளெல்லோருக்கும் அனந்த நேசபாசத்தையும் பற்றுதலையும் காண்பித்துப் பராமரிக்கை செய்துவருங்கால், ஒரு துஷ்ட மகன் குழப்பக்காரனாயெழும்பித் தன்மட்டில் தன் அன்னையும் பிதாவும் அநீதம் பண்ணுவதாக பகிரங்கமாய்க் குற்றஞ்சாட்டி பிராதும் ஏற்படுத்துவானானால், மற்றப் பிள்ளைகள் என்ன செய்வார்கள்? குழப்பக்காரனுக்கு விரோதமாகத் துணிகரமாய் எதிர்த்து நிற்பார்கள். அந்தத் துஷ்டனுடைய நன்றிகெட்டதனத்தால் வருந்துகிற பெற்றோர்களைத் தேற்றரவு



பண்ணுமாறு தங்கள் சினேகப் பற்றுதலையும் நன்றியறிதலையும் இரட்டிப்பாய் எண்பிப்பார்கள். மேலும் இந்த ஆவலாதியைக் கண்ட கிறீஸ்துவர்களனைவரும், ஒருவாய்ப்பட அந்த நிஷ்டூரனுடைய நடத்தையையும், நன்றிகெட்டதனத்தையும் சபித்து, அன்பு பட்சமுள்ள தாய் தந்தைமட்டில் சங்கை மரியாதை செலுத்தாததற்கு, என்றும் அவமானமாய்ச் சபையினின்று தள்ளப்பட்டவனாக நிதானிப்பார்கள்.

இப்படியிருக்க, மேற்றிராசனத்தின் பற்பல பங்குகள் குடும்பங்களுக்குச் சரிசமானம். கிறீஸ்துவர்களான பிள்ளைகளுக்குக் குருசுவாமியார் ஞானப்பிதாவாயிருக்கிறார். அவர் உங்களாத்தும நன்மைக்காக அல்லும்பகலுமாயுழைத்து உங்களுக்காகத் தம்முடைய சத்துவம், சௌக்கியம், ஜீவியம், இவற்றைப் பரித்தியாகம் பண்ணுகிறார். என்றாலும் மிக்கக் கஸ்தியுடன் நாம் பார்த்துவருகிற சங்கதியென்ன? சர்வேசுரனுடைய பிரதிநிதியாக, ஆத்துமங்களுக்காக ஓயாதொழியாது உழைத்துவருகிற குருவானவருக்கு விரோதமாய் சில கிறீஸ்துவர்கள் கலகம்பண்ணி, அவரைச் சர்க்காரின் நியாயஸ்தலத்துக்கு இழுக்கும்படிசெய்து, நிந்தை அவமானம்பொருந்திய குற்றங்களைச் சுமத்தி, பிள்ளை என்கிற பட்டத்துக்கு முதலாய் யோக்கியமில்லாதபடி அவருக்குத்துரோகம் செய்கிறார்கள். அந்தப் பங்குசுவாமியார், தமது சொந்தப் பிள்ளைகள் தமக்கு எதிராளி

யாய் நிற்க, அவர்களிடமிருந்து தம்மைத் தற்காத்துக்கொள்ள நேரிட்டிருக்கிறதேயென்று விசனத்துக்குள்ளாவார். மேலும் அவர் அந்தஸ்தின் கடமைப்படி கிறீஸ்துவர்களைப் புண்ணியசாங்கோபாங்கமடையச் செய்யவும், அஞ்ஞானிகள் மனந்திரும்பப்பண்ணவும், தமக்குள்ள நேரம், முயற்சி, இன்னும் பணத்தையும் பிராதுகளில் செலவழிக்க வேண்டியிருக்கிறதேயென்று உணர்ந்து துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருப்பார்.

இந்த கெட்ட கிறீஸ்துவர்கள் சர்வேசுரனுக்கு எப்படிக் கணக்குக் கொடுக்கப்போகிறார்களோ? மற்றக் கிறீஸ்துவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் காண்பிக்கிற துர்மாதிரிகைகளுக்காக எவ்வளவு கொடூரமாய்த் தண்டிக்கப்படுவார்களோ? மேலும், அர்ச். பாப்புமார்களின் பிரசித்தமான கட்டளைப்பிரகாரம் இவர்கள் இவ்வுலகிலேயே, திருச்சபையின் சாபத்துக்குட்பட்டு, நமது பரிசுத்த வேதத்தின் நல்ல பலன்களிலிருந்து தள்ளப்பட்டிருக்கிறார்கள். விசேஷமாய், காலஞ்சென்ற பரிசுத்த பிதா 10-ம் பத்திநாதரென்ற பாப்பானவர், 1911-ம் ௵ அக்டோபர்-௴ 9-உ பிறப்பித்த பிரசித்தமான கட்டளை வழியாய் முந்தின பாப்புமார்கள் இவ்விஷயத்தைப்பற்றிச் செய்த தீர்மானங்களைப் புதுப்பித்து ஸ்திரமாக்கினதுமன்றி, அதிக தீர்க்கமாயும் திட்டமாயும், மேற்றிராணியார் உத்தரவின்றிக் குருவானவரை



யும், பாப்பானவர் உத்தரவின்றி மேற்றிராணியாரையும், சர்க்கார் உத்தியோகஸ்தர் முன்பாக விசாரணைக்கு இழுத்தால், அந்தக் கிறீஸ்துவர்களைச் சபித்துத் திருச்சபைக்குப் புறம்பாக்கும்படி நிரூபித்திருக்கிறார். நல்ல கிறீஸ்துவர்களாயிருக்க விருப்பமுள்ள நீங்கள், மேற்கூறிய பிரியாதென்றால், மிகுந்த அருவருப்போடு அதை விலக்கித் தடுத்துவிடுங்கள். உங்கள் பங்குக் கிறீஸ்துவர்களில் எவரானாலும், இப்பேர்ப்பட்ட பிரியாதுகள் நடத்தாதபடி, உங்கள் நல்லாலோசனையாலும், தைரிய செய்கையாலும், நல்ல மாதிரிகையினாலும் தடுப்பது உங்களுக்கு பரிசுத்த கடமையென்று நிச்சயித்துக்கொள்ளுங்கள். இந்த மகத்துவ அப்போஸ்தலத்துவத்தைப் பிரயோகித்து, பிராதாகிற கொள்ளை நோயினின்று அநேக ஆத்துமங்களை இரட்சித்து, சேசுவின் திரு இருதய ஆசீர்வாதம் உங்கள் பங்கின்மேல் பொழியும்படி செய்வீர்களாக.

## ii. மதுபானத்தின்பேரில்.

மதுப்பழக்கம் என்ற துர்ப்பழக்கம் உங்களுக்குள் அபூர்வமென நாமே சந்தோஷத்துடன் மெய்ப்பிக்கக் கூடுமானாலும், மதுப்பழக்கமுள்ளவர்களுக்கு வரும் பயங்கரத்துக்குரிய தண்டனைகளை நினைவுகூர்ந்து பயந்து, மதுபானத்தை விலக்கி ஒழிக்க ஸ்திரமான பிரதிக்கினை செய்து திடமாய் நடந்துகொள்ளும்படி,

மதுபானத்தைப்பற்றிச் சில குறிப்புகள் சொல்வது பிரயோஜனம்.

மதுபானிகளுக்கு விளைகிற சகலவகை நாச மோசங்களையும் கேடு கெடுதிகளையும் வேதாகமத்திலே சவிஸ்தாரமாய் வரையப்பட்டிருக்கிறதை வாசிக்கலாம்.

(1) மதுபானமானது ஓர் குடும்பத்தின் சீர் செல்வத்தையும் பாக்கியத்தையும் அழித்துப் போடுகிறது. இஸ்பிரீத்துசாந்து ஏவுதலால் எழுதப்பட்ட நீதிமொழியாகமத்தில் "மதுபானப் பழக்கமுள்ள தொழிலாளி, எக்காலமும் இரப்பாளி, ஒருக்காலும் சொத்து பொருள் சேகரிக்க இயலாதவன்" என்று சொல்லப்படுகிறது. இந்த வார்த்தைகளின் உண்மையை அனுபவத்தினால், காட்சிப்பிரமாணமாக மிக்கக் கஸ்தியுடன் கண்டுவருகிறோம்.

மதுபானத்தை அண்டாமல் அருவருத்துத் தள்ளின மனிதன், தான் வேலை செய்யும் போது தன் குடும்பத்தின் நன்மையைப்பற்றி கண்ணும் கருத்துமாயிருப்பான். குடும்பத்துக்காக பணம் மீத்து வைத்துத் தன் வேலையின் பலாபலனை யாவருஞ் சேர்ந்து அனுபவிப்பதே அவனுக்குப் பாக்கியம்.

ஆனால் கள் சாராயமுதலிய லாகிரி வஸ்துகள் விற்கும் கிடங்குகளில் விழுந்து உருளுகிறவன், தன் குடி வெறியைத் திருப்திகரப் படுத்தவே தேடுவானொழிய வேறொன்றும்



நினைக்கமாட்டான். ஒருவேளை அவனுக்கு உயர்ந்த சம்பளமுண்டு. யாதொரு குறைவின்றித் தன் பிள்ளைகளுக்குச் சரியான சாப்பாடும் உடுப்புமளித்து, உயர்தரக் கல்வி பயில்வித்து, உன்னத நிலைமைப் பதவியில் சேர்க்கப் போதுமான ஆஸ்தியும் உண்டு. என்கிலும் குடியானது, குடும்பச் சிநேகம் அவனிருதயத்தில் ஒரு பொறிமுதலாயின்றி அவித்துப்போட்டதால், தன் பெண்சாதி பிள்ளைகள் உள்ளங் கொதித்துப் பெருமூச்செறிந்து அழுவது அவனுக்குக் கவையில்லை, கவலையில்லை. அவனுக்குத் தன் குடிவெறிதான் தீரவேணும். ஒரு மாத சம்பளத்தை, ஒரு வார வேலைப் பணத்தைச் சில நாளுக்குள் செலவழித்துவிடவே, பெண்சாதி பிள்ளைகள், சாப்பாட்டுக்கில்லாமல் தயங்கி, உடுக்கத் துணியில்லாமல் நாணிப் பிரலாபித்து அழுது, பசியினாலும் கஷ்டத்தினாலும் சாகிறார்கள். குடிவெறியனோ, ஓர் விதத்தில் குழந்தைகளின் இரத்தத்தை உருஞ்சிக் குடித்துவிடுகிறான். ஆ! என்ன வெட்கம், என்ன கொடுமை!

குடியன் வசிக்கும் குடும்பத்தில் சமாதான பாக்கியமும், பாக்கியத்தின் வாசனைமுதலா புண்டோ? அந்த வீட்டில் நடக்கிறதென்னவென்றால், கண்டனை தண்டனையான பேச்சு, நிந்தை அவமான வார்த்தைகள், சண்டை சச்சரவுகள், வாக்குவாதங்கள், அடியும் உதையும், கடைசியாய் காயங்களுமுண்டாகும். மரணத்

துக்கேதுவான காயங்களானால், அவனுக்கு சிறைச்சாலை ஜீவியமுடியுமட்டும் வாசஸ்தலம். இவ்வளவு இகழ்ச்சியும் கஸ்திக்கும் உரிய நடபடிக்கைகளை நீங்களே பார்த்து அத்தாட்சியாயிருந்திருக்கக்கூடும்.

(2) மதுபானமானது ஒவ்வொருவருடைய திரேக சௌக்கியத்தை அழித்துப்போடுகிறது. மதுபானத்தைப்பற்றி வேதாகமத்தில் சொல்லியிருக்கிறதாவது: மதுவையும் மாமிசத்தையும் மீசுரமாய் உண்டுமடிந்தோர் அனேகர். மட்டான போஜனம் நீண்டாயுசு தரும். (Eccl. 37, 31.) கள்ளு, சாராயம், பீர், பிராந்தி, விஸ்கி முதலிய லாகிரி பதார்த்தங்களை அருந்துவதால், மதுபானபாஷாணமானது புத்திமனது நினைவு என்கிற உள்ளிந்திரியங்களையும், சரீ ஐம்பொறிகளையும் தாக்கி, தசை நரம்புகளின் வலிமையும் சிறுகச் சிறுக வற்றிப்போக திரேகமுழுதும் எரித்துவிடும். இவ்விதம் ஓயாதொழியாது குடிகாரன் சரீரம் எரிந்து போக, கடைசியாய் அகால அவதிமரணமே அவனுக்குக் கதி. அவனுடைய ஞாபகார்த் மான அறிகுறி, அவன் குடிவெறியன் என்ற பேர்பெற்றதுதான்.

(3) மதுபானமானது குடிகாரனுடைய ஆத்துமத்தை அபாயகர ஸ்திதியில் வைத்து அழித்துப்போடுகிறது. குடிகாரன் இலௌகீக இன்பங்களில் அடுத்துப் பழகப்பழக ப லோக ஞானக்காரியங்களின்மேல் ருசியற்



நசப்புண்டாகும். நமது பரிசுத்த வேத அனுசரணையையும், தேவதிரவிய அநுமானங்களையும் கிஞ்சித்தும் கவனியாமல் கைநெகிழவிட்டுவிடுவது மனுஷசுபாவ இயற்கை. இறுதியில் தன்னுடைய துரிச்சைகளுக்கு அடிமையாகித் துர்ச்சனன் ஆவான். இதினாலேதான் காமவிகாரத்துக்கு ஏதுவான லாகிரிகொள்ளாதேயுங்களென்று வெகு பலமாய் அர்ச். சின்னப்பர் வற்புறுத்தி எச்சரிக்கிறார் (எபேசி. 5-18.) குடிகாரனிருதயத்தில் சகல தின்மையும் பிறக்கும். சகல புண்ணியங்களும் பறந்து ஒழிந்துபோகுமென்று அர்ச். பசிலியார் எழுதியிருக்கிறார். பரிசுத்த வேதபாரகர்கள்: "குடியர் துர்மார்க்கத்தின் அடுப்பு, மனுக்குலத்துக்கு வெட்கம், பசாசின் ஆவேசம்" என்று வசனித்து, "மதுசாரம் உட்கொள்ளச் சக்தியுள்ளவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு" என்று இசையாஸ் தீர்க்கதரிசி உரைத்த சாபத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இப்படியான துர்ப்பழக்கத்திலும் பாவத்திலும், தன் வாழ்நாட்களைக் கழித்த குடியன், சர்வேசுரன் நீதி சிம்மாசனத்துக்கு முன்பாகத் தீர்வையிடப்படும்போது நித்திய காலத்துக்கும் நரக அக்கினியே அவனுக்கு ஆக்கினையாகும்.

குடியால் விளையும் நாச மோசங்களைப்பற்றியும், கேடுகெடுதிகளைப்பற்றியும், இங்கு விவரித்ததை மெய்ப்பிக்குமாறு, பின்வரும் துயரத்

துக்குரிய சரித்திரமொன்றைச் சொல்லி முடிப்போம்: ஒரு வேலைக்காரன் கூலி வாங்கின பின் அன்றன்று சாயந்தர வேளையில், தன் கூட்டாளிகளுடன், கள், சாராயக்கடைக்குப் போய், பணமுழுதும் செலவழித்துப் போடுகிறதில் வழக்கமாயிருந்தான். ஓர்நாள் அவன் பெண்சாதி, அந்தக் கடைக்குப்போய் ஏங்கி தியங்கியிருந்த தன் பிள்ளைகளுக்கு இரங்கியாவது புருஷனை வீட்டுக்கு வரப் பலவந்தமாய்க் கூப்பிட்டாள். புருஷனோ கோபவெறி கொண்டு, மிருகப்பிராணிபோல, அவளைக் கொடூரமாயடித்துக் குற்றுயிராய் விட்டுப்போனான். பெண்சாதி கொஞ்சம் சுவரணை தெளிந்து நகர்ந்து ஊர்ந்து வீடுபோய்ச்சேரவே, குழந்தைகள் கூடி அவளைச் சூழ்ந்துகொண்டு, அம்மா சோறு, சோறு, இன்றைக்கு இதுவரைக்கும் சாப்பிட ஒன்றுமில்லையே, பசிக்குதே என்று அலறிக் கதறினார்கள். அவள் அதற்குபதிலாக நான் என்ன செய்வேன், நிர்ப்பாக்கியப்பிள்ளைகளே! உங்கள் தகப்பன் குடியிலே பணமெல்லாம் நாசமானதே, சோறு எப்படிக் கிடைக்குமென்று சொல்லி, அவநம்பிக்கை மேற்கொண்டு மதி மயங்கி, ஒரு கத்தியை எடுத்து ஒவ்வொரு பிள்ளையாய் வெட்டிப்போட்டாள். சிறிது நேரம் கழித்து புருஷன் முழுக்குடிவெறியால் வீட்டில் பிரவேசிக்கிறதைப் பெண்சாதி பார்த்தக்ஷணமே, பிள்ளைகளை வெட்டின கத்தியால் புருஷனை



எதிர்த்துத் தாக்கி நேரில் நெஞ்சிலே குத்திச் சாகடித்தாள். இவ்விஷயத்தை அறிந்த போலீசார் அவளைப் பிடித்து விசாரணை செய்து, மரணத்தீர்ப்பிட்டு, தூக்கிப்போட்டார்கள். மதுபானம் செய்யும் துர்ப்பழக்கத்தினால், ஓர் குடும்ப முழுவதும் நாசமாகி, வாரிசில்லாமல் அற்றுப்போனதற்கு இதுவே ஓர் அத்தாட்சி.

குடியினால் விளையும் கேடு கெடுதிகளை ஞாபகப்படுத்தி, நல்ல கிறீஸ்துவர்கள் இந்த அயோக்கியமும் சாபமும் பொருந்திய துர்க்குணம் தங்களிடம் ஒருபோதும் உண்டாகாதபடி ஸ்திரமான பிரதிக்கினை செய்வார்களாக. மேலும், பிறத்தியாரும் தலையான பாவத்தில் ஒன்றாகிற இந்த அக்கிரமத்துக்கு இரையாகாமலிருக்கவும், இதினால் இகலோக சம்பத்துக்களையிழந்து, மறுலோக ஆக்கினைகளை அடையாதிருக்கவும், தேவ அனுக்கிரகத்தைக் கொண்டு வெளியுதவி செய்வார்களாக. இந்நாள்வரை குடிப்பழக்கத்தால் காண்பித்த துர்மாதிரிகைகளையும், அடைந்த நஷ்டத்தையும் பரிகரிக்கும்வண்ணம், அவர்கள் இடைவிடாமல் ஜெபம் பண்ணவும், மட்டசனம் அனுசரிக்கவும், தவம், ஒறுத்தல் முயற்சிகளில் பழகவும், உங்கள் சக்திக்களவு ஒத்தாசைபுரியுமாறு, சர்வேசுரன் உங்களுக்குத் தேவையான வரப்பிரசாதத்தை அளிப்பாராக.

## 11-ம் அதிகாரம்.

# முடிவுரை.

பிரியமான கிறீஸ்துவர்களே, நாம் அதிமிக நேசித்துவருகிற உங்கள் ஆத்துமங்களின் நல நன்மைகளைக் கருதி உங்களுக்கு பிரசங்கிக்கும்படி சேசுவின் திரு இருதயமே நம்மை ஏவித் தூண்டிய புத்திமதிகளை இதோ முடித்தோம். இவைகளைப் பின்பற்றி அனுசரிக்குங்கால், நீங்கள் ஈடேற்ற வழியில் நடந்து மோட்சகரை சேர்ந்து தேவ தரிசனையைச் சுகித்தனுபவிப்பீர்கள்.

ஆனால் உங்களுக்குள் அநேகர் சொல்வதென்னவென்றால். எனக்கு எவ்வளவுதான் நன்மனது இருந்தாலும், நான் எவ்வளவோ பலவீனமுள்ளவன். ஆகையால், இந்தப் புண்ணியங்களை அனுசரிப்பது எனக்கு அசாத்தியம்,எனக்கே அவநம்பிக்கை என்பீர்கள். மெய்யாகவே, உங்கள் சொந்தப் பலத்தினால் இவைகள் முடியாது. என்றாலும், நமதாண்டவரும், திருச்சபையும் உங்களுக்குக் காண்பித்து ஏற்படுத்தியிருக்கிற வழிப்பாடுகளை உபயோகிப்பீர்களானால், உங்கள் நன்மனதுபோலாகும்.



அந்த வழிப்பாடுகளில் முக்கியமானவைகளாவன :—

(1) **ஜெபம் :**—இது விஷயமாய் 3-ம் அதிகாரம் காண்க.

(2) **அடிக்கடி திவ்வியநற்கருணை உட்கொள்ளுதல் :**—இதுதான் உங்கள் ஆத்துமத்தின் ஜீவியமும் சத்துவமுமென்கலாம். முற்காலத்தில் ஒரு பங்கைச்சேர்ந்த கிராமங்கள் வெகு தூரத்தில் இருந்தன. குருசுவாமிமார்களின் தொகை மகா சொற்பம். ஆகையால் நீங்கள் அடிக்கடி திவ்வியபூசை காணவும், திவ்வியநற்கருணை உட்கொள்ளவும் கூடுமானதாயிருந்ததில்லை. இக்காலங்களில் பங்குசுவாமிமார் உங்கள் ஊர்களுக்கே விசாரணைக்காக அடிக்கடிபோய், நீங்கள் திவ்வியநற்கருணை உட்கொள்ளும் வழியை எளிதாக்குகிறார்கள், இது சர்வேசுரனளித்த அரியபெரிய உபகாரம். இந்த உபகாரத்தை நாளுக்குநாள் நீங்கள் கனமாய் மதித்து, உங்கள் ஆத்துமத்துக்குப் பிரயோஜனம் உண்டாகும்படிசெய்துகொள்ளுங்கள். பங்குசுவாமியார் உங்கள் ஊருக்காவது அருகாமையிலிருக்கிற ஊருக்காவது வரும்போதெல்லாம் தவறாமல் திவ்வியபூசை காணப்போய் தேவநற்கருணை உட்கொள்வீர்களென்று கெட்டியான பிரதிக்கினை செய்துகொள்ளுங்கள்.

(3) **சேசுவின் திரு இருதயத்தின் மேலும், அர்ச். தேவமாதாவின்மேலும்**

**உருக்கமான பக்தி:**—இந்த இருவித பக்தி வணக்கத்தில் உங்களுக்கு விசேஷ பற்றுதலுண்டென்று ஞான அக்களிப்போடு கண்டுவருகிறோம். முக்கியமாய் சேசுவின் திரு இருதய வணக்கமாதத்தையும், அர்ச். தேவமாதா வணக்கமாதத்தையும் பக்தி ஆடம்பரத்தோடு கொண்டாடிவருகிறீர்கள். பற்பல பங்குகளில் மாதத்தின் தலைவெள்ளி வருஷாந்தரப் பக்தி திருநாட்களில் ஒன்றுக்குச் சரியாகிவிட்டது.

இந்த மிஷனில் அநேகாநேக கோவில்களில், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தேவநற்கருணையைப் பிரசித்தமாய் ஸ்தாபித்துச் செய்கிற ஆராதனையானது சிலகாலத்துக்கு முன் ஏற்பட்டிருந்தாலும் இந்தப்பக்தி வணக்கம் அதிசயத்துக்குரியவிதமாய் அபிவிர்த்தியடைந்து ஒவ்வொரு கோவிலிலுமே, தேவ நற்கருணைப் பிரசித்த ஸ்தாபக ஆராதனை நடத்தவும், தேவநற்கருணையை இடைவிடாமல் சந்தித்து, முறைமுறையாய், ஜெபங்கள் செய்து, இதினால் மனிதருடைய பாவங்களுக்கு பரிகார முயற்சி பண்ணவும், தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார், பங்கு ஜனங்கள் யாவருக்கும், வரப்பிரசாதங்களும் ஆசீர்வாதங்களும் அளித்தருள மன்றாட்டு முயற்சி ஒப்புக்கொடுக்கவும், ஏதுவான வகைகள் பிரயோகிப்பதில் ஒவ்வொரு ஊராருமே பரிசுத்த போட்டியாய் ஒருவரொருவனை மேற்கொள்ள முயலுகிறார்கள்.



ஆ! இது பாக்கியமும் ஆனந்தமுமான விஷயம்!

(4) **பங்குகளில் உட்தியானம் அல்லது பொதுத்தியானப் பிரசங்கம்:**—வேதத்தின் சத்தியங்களைப்பற்றி தெளிவான அறிவு உண்டாகும்படிக்கும், நல்ல கிறீஸ்துவர்களின் கடமைகளைப் பிரமாணிக்கமாய் அனுசரிக்கிறதற்கு ஸ்திரமான மனது உண்டாகும்படிக்கும், இதினால் நித்தியகாலம் பேரின்ப தரிசனையை அடையும்படிக்கும், பங்குகளில் உட்தியானம், வெளித்தியானம் நடத்துவதைவிட அதிக பிரயோஜனமானது வேறொன்றுமில்லை. இப்பேர்ப்பட்ட வகைகளைப் பங்கு சுவாமிமார்களும் அபிவிர்த்தி செய்து வருகிறதில் ஊக்கமாய் உழைக்கிறார்கள். உட்தியானங்கள் விசாலமான கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களிலேதான் நடத்தப்படக்கூடும். அப்படிப்பட்ட உட்தியானங்களுக்கு, பக்தி ஊக்கமுள்ள கிறீஸ்துவர்கள் முதல், போய் பலனடையாதபடி அசட்டைபண்ணிவிடுவார்கள். உங்களூரில் ஓர்விநோத காட்சி ஆடம்பர சமயத்தில், இலட்சாதிபதியான இராஜா ஒருவர் எழுந்தருளி வந்து அவர் சமுகத்தில் பிரசன்னமாய்வரும் ஒவ்வொருவருக்குமே, நூற்றுக்கணக்காக ரூபாய்களை அள்ளிக்கொடுப்பதாக வாக்குக் கொடுப்பாரானால், இந்தப் பெரும் உபகாரத்தைக் கைக்கொள்ள இராஜ சமுகம்

ஆஜராகாதபடி யாராவது எவராவதிருப்பார்களோ ?

ஓர் தியான ஒடுக்கத்துக்குப் போவதால் உண்டாகும் வரப்பிரசாதங்கள் இவ்வுலகப் பொக்கிஷங்களைவிட அதிமிக விலையுயர்ந்தவைகளாம். ஆகையால் உங்கள் பங்கிலே, அடுத்த பங்கிலே தியான ஒடுக்கம் நடத்தப்படுகிறதென்று அறிவீர்களானால், பெண்பிள்ளைகளென்றாலும் ஆண்பிள்ளைகளென்றாலும் அந்த ஞான ஒடுக்கத்துக்குப் பேர்கொடுத்து, இதற்காக கொஞ்சம் செலவுக்காக பணத்தையும், உங்களுக்கிருக்கிற வேலை நாட்களையும் பரித்தியாகம் பண்ணி தியானஞ் செய்யுங்கள். உங்கள்மேலும் உங்கள் முயற்சி அலுவல்களின்மேலும் ஆசீர்வாதம் பொழிந்து, உங்களுக்கு வரப்பிரசாதமளித்து நமதாண்டவர் நூறுமடங்கு சம்பாவனை கொடுப்பார்.

இரட்சண்ய வழிப்பாடுகளான இவைகளை நீங்கள் பிரயோகிப்பீர்களானால், நல்லகிறீஸ்துவர்களின் கடமைகளைச் சுமுத்திரையாய் அனுசரிக்க முழுச்சத்துவம் உங்களுக்குக் கிடைக்கும். தினசரி ஜெபமுதலிய பத்திக்கிருத்தியங்களை நிறைவேற்றி, ஞாயிற்றுக்கிழமையை ஆசரித்து வருவீர்கள். உங்கள் பேச்சிலும் நடத்தையிலும் ஒருபோதும் உங்கள் பிள்ளைகளுக்குத் துர்மாதிரிகையாயிராமல் அவர்களை அர்ச்சியசிஷ்டதனத்தில் வளர்த்து உங்கள் குடும்பத்தில் பத்தி நல்லொழுக்கமே அரசாளும்



படி செய்வீர்கள். அஞ்ஞான குருட்டுப்பத்தியை முழுதும் தவிர்த்து நடப்பீர்கள். அர்ச். பாப்பானவருக்கும், மேற்றிராணியாருக்கும், குருமார்களுக்கும் சிரவணம், சங்கை மரியாதை சிநேகத்தையும், வெளியரங்கமாய்க் காண்பிப்பீர்கள். இவ்விதமாய் உங்கள் சொந்த ஆத்தும இரட்சண்யத்தையும் பிறத்தியாரின் ஆத்தும இரட்சண்யத்தையும் எல்லாவற்றையும் பார்க்கமேலாகத் தேடிநடத்த ஸ்திரமான பிரதிக்கினை செய்து அநுதினம் புதுப்பிப்பீர்கள்.

இந்த வழிப்பாடுகளைப் பிரயோகிப்பீர்களானால், பரிசுத்த கத்தோலிக் திருச்சபையின் பிரமாணிக்கமுள்ள பிள்ளைகளாக சாகும்பரியந்தம் நிலைக்கொள்வீர்கள்.

ஏனெனில், சேசுநாதர்சுவாமியால் ஸ்தாபிக்கப்பட்டு, அப்போஸ்தலர்களால் தொடர்ந்து நடத்தப்படுகிற ஏக திருச்சபை பரிசுத்த கத்தோலிக் திருச்சபைதான். இதற்குப் புறம்பே இரட்சண்யமேயில்லை.

அர்ச். இராயப்பருக்கும், அவருக்குப்பின் வரிசைக் கிரமமாய்த் தொடர்ந்து வருபவர்களான அர்ச். பாப்புமார்களுக்குமே, பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களைச் சேசுநாதர் சுவாமி கையளித்தார். அர்ச். பாப்பானவரை விட்டு நீங்கிப்போன பிரிவினைச்சபைகள், சத்திய திருச்சபையாகிற கத்தோலிக் திருச்

சபையின் விருட்சத்தினின்று வெட்டப்பட்ட கிளைகளாம். ஆகையால் முழுதும் **பட்டுப்போன** கிளைகள் நித்திய நரக நெருப்புக்கு **விறகாக** விதிக்கப்பட்ட கிளைகள்தான்.

இந்த வழிப்பாடுகளை பிரயோகிப்பீர்களானால் பதிதமதம், பிரிவினைச் சபைகளுக்கு ஆஸ்பதமான கலக குழப்பத்துக்கு நீங்களும் இழுக்கப்படுகிறதற்கு இடங்கொடுக்கவேமாட்டீர்கள்.

இப்படியான கலக குழப்பத்தைத் தூண்டுகிறவர்கள் தங்களுக்குப் பண லாபத்தைத் தேடுகிறார்கள், உங்களாத்துமத்துக்கு நித்திய கேட்டை உண்டாக்குகிறார்கள்.

உங்களை ஏமாற்றி உடன்படுத்தி மோசப்படுத்துவதில் அநேகமாய் அனுகூலமடைய, இந்த நயவஞ்சகர்கள் உங்கள் நண்பர்களாகவும் தோன்றுவார்கள். ஆனால், உங்களுக்கு ஏக மெய்யான மேய்ப்பர்கள் அர்ச். பாப்பானவராலும் மேற்றிராணியாராலும் அனுப்பப்படுகிற குருவானவர்கள்தான். மற்றவர்கள் யாரென்றால், சேசுக்கிறீஸ்துநாதர் வசனித்திருக்கிறபிரகாரம், உங்கள் ஆத்துமத்தை நரகத்துக்கிழுக்கிற பசாசினால் ஏவப்பட்ட ஓநாய்களன்றி வேறல்ல. உங்களை இரட்சிக்கிறதற்காக சிலுவையில் அறையுண்டு மரணமடைந்த நமதாண்டவர்தாமே சொல்லும்



ஞானப்பிரயோஜனமான புத்தியாவது: **கள்ளத் தீர்க்கதரிசிகள் கையிலகப்படாதபடி எச்சரிக்கையாயிருங்கள்**(மத். VII, 15) சேசுநாதரால் சிநேகிக்கப்பட்டுவந்த நேசசீஷரான அர்ச். அருளப்பர் எழுதியிருக்கிறதாவது: **நாம் உங்களுக்கு போதித்த சத்தியங்களுக்கு விபரீதமானவைகளை வேறே யாரும் உங்களுக்கு படிப்பித்தால், அவர்களை உங்களிடம் வரவழைக்காதேயுங்கள்; அவர்களுக்கு வந்தன உபசாரமே செய்யாதேயுங்கள்** (அரு. II, 10). வனவாசியான அர்ச். அந்தோனி முனீந்திரர், தாம் சாகுந்தருணத்தில், தமது சீஷர்களுக்கு தமது மரணசாதனம்போல உரைத்த மேலான புத்திமதியாவது: **பதிதர் பிரிவினைக்காரருடைய பாஷாணத்தில் கலக்கப்பட்ட சம்பாஷணைகளைத் தவிர்த்துவிடுங்கள்; நாம் அவர்களை அருவருத்துத் தள்ளினதுபோல நீங்களும் அவர்களை வெறுத்துப்போடுங்கள்.**

அர்ச்சியசிஷ்டவர்களின் *புத்திபோதனைகளும் நன்மாதிரிகைகளும் உங்களுக்கு தைரியமான தூண்டுகோலாகி, தேவானுக்கிரகத்தைக் கொண்டு விசுவாசத்தில் மென்மேலும் ஸ்திரமாகவும், சத்திய திருச்சபையில் சாகும்பரியந்தம் பிரமாணிக்கமுள்ள பிள்ளைகளாக நிலைக்கொண்டிருப்பீர்களாக. பசாசும், அதின் பாரிசத்தார்களும உங்கள் ஆத்துமத்

தைக் கெடுக்க முயற்சி பண்ணக்கூடும். ஆம், ஏனெனில் சத்தியதிருச்சபை ஆரம்பமான முதல் நூற்றண்டிலே வேதகலாபனை உண்டாக்கி வேதத்துக்காக கிறீஸ்துவர்கள் இரத்தம் சிந்தும்படி நிர்ப்பந்தமனுபவிக்க, சேசுக் கிறீஸ்துநாதரோ சித்தமானர். நமதாண்டவரையும் திருச்சபையையும் மறுதலிக்கிறதைவிட தங்கள் ஜீவியத்தைப் பலியாக்கிறது அதிக மேன்மையென்று கோடியே நாற்பது இலட்சத்துக்கு மேலானவர்கள் வேதசாட்சி முடி பெற்றூர்கள்.

இந்த நூற்றண்டுகளில், சீனு, ஜப்பான், கொரியா முதலிய தேசங்களில் வேதகலாபனை உண்டாகி, ஆயிரக்கணக்கான கிறீஸ்துவர்கள், பெண்பிள்ளைகளும், சிறு குழந்தைகளும் உட்பட, வேதகலாபனையில் தைரியமாயிருந்து, சேசுநாதருக்காக தங்கள் இரத்தத்தைச் சிந்தி, உயிர்துறந்து, வேதசாட்சிகளாகி நித்தியகாலமும் மோட்சத்தில் கிரீடம் சூட்டப்பட்டார்கள்.

இந்தியாதேசத்தில், இந்நாள்வரையிலும் வேதசாட்சியாக வேதகலாபனை துவக்கி வேதத்துக்காக நாம் நிர்ப்பந்தப்படுகிறதற்கு சேசுநாதர்சுவாமி திருவுளமாகவில்லையென்பது மெய், இனிமேலாக வரும் காலத்தில் சம்பவிக்குமோ, சர்வேசுரன் ஒருவருக்கே தெரியும். அப்பேர்ப்பட்ட சமயத்தில், நீங்கள் பிரமாணிக்கமாயிருந்து இக்கட்டு



இடையூறுகளில் பொறுமையாயிருக்க வேண்டுமானல், அர்ச்சியசிஷ்டவர்கள் வேதசாட்சிகளின் ஒரேமனதான உறுதியைப் பின்பற்ற வேண்டுமானல், சதாகால கிரீடத்தை வெற்றிபெற்று கைப்பற்ற வேண்டுமானல், அநுதினமும் உங்கள் ஜீவியத்தில், கிறீஸ்துவர்களுக்குரிய புண்ணிய முயற்சிகளையும், வேதத்தைச் சார்ந்த கடமைகளையும் சுமுத்திரையாய் நிறைவேற்றுங்கள். வேதசாட்சிகளும், அர்ச்சியசிஷ்டவர்களும் இவ்வுலகத்தில் மகிமை பெருமையும் கீர்த்தியும் பிரக்யாதியுமுடைய **பட்டங்களைவிட** அதிக உயர்தரமாக **கிறீஸ்துவர்கள்** என்கிற பட்டத்தையும் பேரையும் எண்ணி மதித்துக் காப்பாற்றினூர்கள். இவ்வண்ணமே, நீங்களெல்லோரும் **கிறீஸ்துவர்கள்** என்கிற மகத்துவம்பொருந்திய பட்டத்தை மற்ற இதரமதஸ்தர்களுக்கு முன்பாக யோக்கியமானவிதமாயும் பரிசுத்தமானவிதமாயும் தரித்துக்கொண்டு, இப்பட்டத்தின் மகிமைக்கு ஏற்றவிதமாய் நடந்து பக்தியுள்ள நல்ல **கிறீஸ்துவர்களாயிருப்பீர்களாக.**

சேசு ...
22'4749

# பொருளடக்கம்.


| அதிகாரம். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 1 | வேதபோதகப் படிப்பினையின் கடமை ... ... ... | 5 |
| 2 | தன் தன் ஆத்தும இரட்சிப்புக்காக உழைப்பதின் அவசரம் ... | 13 |
| 3 | பத்திமுயற்சிகள், காலை மாலை ஜெபங்கள் ... ... | 21 |
| 4 | ஞாயிற்றுக்கிழமை ஆசரித்தல் ... | 29 |
| | i. திவ்வியபூசை காணுதல் ... | 30 |
| | ii. அடிமை வேலைகளைத் தவிர்த்தல் ... ... ... | 35 |
| 5 | பிள்ளைகள்மட்டில் பெற்றோர்களுக்குள்ள கடமைகள் ... | 43 |
| | i. குழந்தைகளுக்கு அதிசீக்கிரமாய் ஞானஸ்நானம் கொடுக்கச் செய்கிறது ... ... | 45 |
| | ii. பிள்ளைகளுக்கு கிறீஸ்துவக் கடமைகளைப் படிப்பிக்கிறது ... | 49 |
| | iii. பிள்ளைகளைக் கண்டித்துத் திருத்துகிறது .. ... | 53 |
| | iv. பிள்ளைகளுக்கு நன்மாதிரிகை காண்பிக்கிறது ... ... | 60 |
| | v. தங்கள் பிள்ளைகளிடமாய் வருங்கால கிறீஸ்துவர்களை ஆயத்தம் பண்ணுகிறது ... | 65 |
| 6 | அர்ச். பாப்பானவர், மேற்றிராணிமார், குருக்கள்மட்டில் கிறீஸ்துவர்களுக்குள்ள கடமைகள் ... | 72 |